
திருமந்திரக் கதைகள் - 2
கே.வி.குணசேகரம்
P. Yalini

# என்னுரை.

திருமூலர் சிவபெருமானின் அருளால் திருமந்திரம் என்ற நூலை மனித மேம்பாட்டிற்காக எழுதியுள்ளார். சிவனை மூலமாகக்கொண்டு எழுதப்பெற்ற சைவசித்தாந்த நூல் என்னும் எல்லாச் சமயத்தினரும் வாசிக்க வேண்டிய அருமையான நூல். மனிதனின் தேவைகள், குறைகள், கருவுற்பத்தி, நோய்கள், அவைதீரும் முறைகள் பற்றி 6000 வருடங்களுக்கு முன்பே எழுதியுள்ளார். அதை இன்றைய விஞ்ஞானிகள் கூறியபோதும் திருமூலரைப்போல விபரமாகக் கூறவில்லை. 600ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட விஞ்ஞானநூல் என்று இதைக் கூறலாம். இதைக் கணனி மயப்படுத்தித் தந்த செல்வி க.கல்ப்பனா அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

கே.வி. குணசோகரம்.

# திருமந்திரக் கதைகள்.

# காமியாகமம்

# அகத்தியம்.

வயலூர் வயல்களாலும் குளங்களாலும் சூழப்பெற்ற ஊர். ஊர் முழுவதையும் மரங்கள் மூடி நின்றமையால் எங்கும் எவ்வேளையிலும் அவ்வூர் பசுமையாக இருக்கும். அவ்வூரில் ஒருசிவன் கோவில் இருக்கிறது. அக்கோவிலை இலங்கை வேந்தன் இராவணன் கட்டியதாக மக்கள் பேசிக் கொள்வார்கள். அக்கோவிலில் பல்வேறுபட்ட மரங்கள் காடுபோல் வளர்ந்திருந்தன. நீண்டு உயர்ந்து பரந்து வளர்த்திருந்த ஓர் அரசமரத்தின் கீழ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எவ்வேளையிலும் இருப்பார். மக்களின் சிறு சிறு பிரச்சினைகளை அவர் தீர்த்து வைப்பார். அதற்காக அவர் சன்மானம் எதுவும் பெறமாட்டார். தினமும் கோவிலில் பொங்கல் பூசைகள் நடைபெறும். அது தான் அவரது உணவு. பொங்காத நாட்களில் அவர் சமைப்பார். ஒரு பானை மட்டும் அவரிடம் உண்டு. அது தான் சட்டியும் கூட. அதனுள் அரிசியைப்போட்டுக் காய் கறிகளையும் போட்டு அவித்து உண்பார். மக்கள் உணவுப் பொருட்களைக் கொடுத்தால் வாங்கமாட்டார். சிவனேஸ்வரக்குருக்கள் அக்கோவிலின் பிரதமகுரு திருவிழாக் காலங்களில் பிராமணர்களுக்குச்

சமைக்கும்போது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் சிவனேஸ்வரக்குருக்கள் உணவு கொண்டு வந்து கொடுப்பார். கோவிலைச் சூழப்பல பழமரங்கள் நிற்பதால் சுவாமிகள் பழங்களைத் தனது உணவாக்கிக் கொள்வார். அம் மரங்களில் ஏராளமான பல்வேறுபட்ட பறவைகள் வாழ்ந்தன. நேர்த்திக் கடனுக்காக ஒருவர் கொண்டு வந்து விட்ட மான்கள் இரண்டு, மயில்கள் இரண்டு, ஆட்டுக்கடா ஒன்று ஊர்மாடுகள் சில. ஊர்நாய் ஒன்று. இவை தான் சுவாமியாரின் தோழர்கள். நாயும் ஆட்டுக்கடாவும் எந்நேரமும் சுவாமியாருக்குப் பின்னாலேயே திரியும். அவர் சில சமயம் பக்கத்துக் கோவில்களுக்குச் சென்றாலும் அவை அவருடன் செல்லும். மாலைவேளைகளில் சிறுவர்களும் பெற்றோர்களும் உணவுப் பொருட்களுடன் கோவிலுக்கு வருவார்கள். பறவைகள் விலங்குகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். சகோதரர்கள் போல அவை நட்புரிமையுடன் விளையாடும். இது சுவாமியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

# அகத்தியம்.

323. நடுவுநில் லாதிவ் வுலகஞ்சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே.

காங்கேயன் தனது மனைவி மகாதேவியுடனும் மகன் ஆரூரனுடனும் சிவன் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து விட்டு வந்து அரசமரநிழலில் இருந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளின் பாதத்தைத் தொட்டு வணங்கினான். அவனது கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

“சுவாமி, நான் திருமணம் செய்து பத்து வருடங்கள் குழந்தைகள் பிறக்கவில்லை. சிவனருளால் இவன் பிறந்தவன். அடுத்த வாரம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுத இருக்கிறான். திடீரென்று இவனை நோய் தாக்கி விட்டது. எனக்குப் பயமாக உள்ளது. கதைக்கிறான் இல்லை. உடல் நடுங்குகிறது. நீங்கள் தான் சுவாமி என்னை வாழவைக்கவேண்டும்” என்று அழுதான்.

“மகனே, சிவனை நம்பு. அவர் ஒருபோதும் யாரையும் காப்பாற்றாது விட்டதில்லை. பக்தர்களுக்குத்துன்பம் உண்டானால் அவர் தீர்த்து

வைப்பார். கவலைப்படாதே. பெரும்பூதங்கள் ஐந்தினும் நடுவாக உள்ளது. தீ அத்தீயின் நடுவில் அதற்கு ஒளியும் சூடும் கொடுத்து ஒளிர்ந்து கொண்டிருப்பவன் சிவன்.

அவன் அவ் ஒளியினையே உருவங்களில் ஒன்றாகக் கொண்டவன். ஒரு நாள் தேவர்கள் கூட்டமாகச் சென்று "தீயின் நடுவில் தீயாக ஒளிரும் சிவனே, உலகின் தென்பகுதி உயர்ந்து விட்டது. அதுபோல வடக்குப் பகுதி தாழ்ந்து விட்டது. மக்கள் அல்லோகல்லோப்படுகின்றனர். அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டச் சிவபெருமான் அகத்தியரை அழைத்து "அகத்தியா இதை நிவர்த்தி செய்ய நீ தென்பகுதிக்குச் செல்" என்றார். அன்று சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணம் நடைபெற இருந்தது. அதனால் மூவுலகில் உள்ளோரும் தென்பகுதியில் நடைபெறவிருந்த சிவனின் திருமணத்திற்குச் சென்றதாலேயே இந்நிலை உருவானது. அகத்தியர் அங்கு சென்றதும் நிலம் சமமானது. அப்படிப்பட்ட பெருமையை உடைய சிவன் உனக்குக் கட்டாயம் உதவுவார். உனது மகன் பரீட்சைக்குச் செல்வான்" என்று கூறக் காங்கேயனும் மகாதேவியும் மட்டில்லாத மகிழ்ச்சியடைந்தனர்.

**324. அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்**

**அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு**
**மங்கி உதயஞ்செய் வடிபால் தவமுனி**
**எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.**

“காங்கேயா, சிவபூசைக்கு உறுப்பாகிய திருவைந்தெழுத்தாகிய சிறந்த செந்தமிழ் மந்திரம் ஓதி நாட்டை வளம்பெறச் செய்பவன் அகத்தியன். உள்ளொளியாக, பேரொளியாக, அறவொளியாக, இயற்கை ஒலியாக விளங்கும் சிவன் வடக்கேயுள்ள திருவெள்ளி மலையில் அங்கியாய் வீற்றிருக்கின்றார். அங்கு அவரை வழிபட்டுக்கொண்டிருந்த அகத்தியனை அழைத்து மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியில் இருக்கும் பொதிகை மலையில் வந்து அமரச் சொன்னார். பின் அங்கிருந்தே அகத்தியன் தென்பகுதிக்குச் சென்று உயர்ந்த நிலத்தைச் சமப்படுத்தினான்.

அவ்வாறுதேவைக்கேற்ப,தேவையானவர்களைத்தேர்ந்தெடுத்து மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் சிவன், உனது தேவையறிந்து தேவையான வைத்தியனை அனுப்பி வைத்துள்ளான். நாளைய தினம் உனது மகன் சுகமடைவான். பயங்கொள்ளாதே. சிவனை நம்பு”என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## பதிவலியில் வீரட்டம் எட்டு.

325. **கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்**
**வரத்தின் உலகத் துயிர்களை யெல்லாம்**
**வருததஞ்செய் தானென்று வானவர் வேண்டக்**
**குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே.**

“காங்கேயா, யமனைப் போல மக்களுக்கும் தேவர்களுக்கும் சிவனிடம் பெற்ற வரமகிமையால் கொடுமைகளைச் செய்த சேர் என்ற அசுரனை அழித்து வானவர்களையும், மக்களையும் காப்பாற்றியவர் சிவன். அவர் வெண்மையும் கூர்மையும் மிக்க முத்தலைச் சூலத்தால் அவ் அசுரனைக் கொன்றவர். சிவன் சுத்தமான மனதுடன் எதை வேண்டினாலும் தருவார். வேண்டியவர்கள் பின் அககங்காரம் கொண்டு சிவனிடம் பெற்ற வரத்தின் மகிமையை உணராது கொடுமைகளைச் செய்தால் அவர்களை அழித்து மக்களைக் காப்பாற்றவும் தவற மாட்டார். இறைவனிடம் அன்பு பூண்டு வரங்களைப் பெற்றவர்கள் உலகில் உள்ள எல்லா உயிர்கள் மீதும் அன்பு கொள்ள வேண்டும். தவறினால் பெற்றவையே யமனாக மாறும். நீ அன்புள்ளவன். அடியார்க்கெல்லாம் அடியவன். அதனால் உனது விருப்பங்கள் யாவும் பூர்த்தியாகும். உனது மகன் பரீட்சை எழுதுவான். சித்தியும் அடைவான். மேற்படிப்பும் படிப்பான். கவலைப்படாது பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிச்சிவனை

வழிபடு'' என்று காங்கேயனுக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**326. கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்**

**தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு**

**நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்**

**தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே.**

''காங்கேயா, நான்முகனின் மகனான தக்கன் சிவனைப் புறக்கணித்துச் செத்துப் பிறக்கும் திருமாலுக்கு முதன்மை கொடுத்து பெரியதொரு யாகம் செய்தான். அதனைச் சிவனடியார்கள் வெறுத்தனர். அதனால் வெகுண்டெழுந்த சிவபெருமான் தக்கனது தலையைத் துண்டித்து அவன் யாகம் செய்யவென வளர்த்த தீயில் அதை இட்டு விட்டு வேள்வியின் போது கொல்லப்படும் விலங்கினங்களாக வேள்வி செய்வோர் பிறந்து கொல்லப்படுவர் என்பதை அறிவுறுத்தவும் வேள்விகளைப் பார்த்து விட்டுத் தாமும் வேள்விகளில் மிருகங்களைப் பலியிடாது இருக்கும் பொருட்டும் வேள்வியின் போது கொல்லப்பட்ட ஆட்டுக்கடாவின் தலையைத் தக்கனின் உடலில் பொருத்தினான்.

இவ்வாறு அனைத்து உயிர்கள் மீதும் அளவில்லா அன்பும், அவை கொடூரமாகத் தண்டிக்கப்படும் போது தண்டிப்போர்ப்போக்கும், ஏனைய பாவச் செயல்களில் ஈடுபடுவோர் தமக்கும் இக்கதி நேரும் என்பதை

அறிவிக்கவுமே அப்படி நடந்தான். நீ உனது மகனை மாந்திரீகரிடம் அழைத்துச் சென்று கழிப்புக் கழிப்பதாகக் கூறினாய். அது மிகப் பெரிய தவறு என்று உணர்த்தவே இக்கதையை உனக்குக் கூறினேன். சிவன் அன்புமயமானவர். நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்திற்கு உரியவர். ஆதனால் தினமும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓது உனது மகன் குணப்படுவான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**327. எங்கும் பரந்தும் இருநிலத் தாங்கியுந்**

**தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்**

**பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற**

**அங்(கு) அச் சுதனை உதிரங்கொண் டானே.**

''காங்கேயா, தீமை செய்பவர் தேவராக இருந்தாலும் சிவனால் தண்டிக்கப்படுவர். அதுபோல அன்புடன் வழிபடுவோர் யாராக இருந்தாலும் சிவனால் நேசிக்கப்படுபவர். ஒரு சமயம் எங்கும் பரந்து எல்லா உருவங்களையும் நிலை பெறச் செய்து நீக்கமற அவற்றோடு கலந்து நிற்கும் சிவனைச் சந்தித்ததேவர்கள் நான்முகன் தான் கற்ற கல்வியால் செருக்கடைந்து துன்பஞ் செய்ததைச் சிவனுக்குத் தெரிவிக்க, சிவன் சினங்கொண்டு அவனது தலையை வைரவக்கடவுளைக் கொண்டு அறுப்பித்தார். அதுபோலச் செல்வச்செருக்குக் கொண்ட அயனின் தந்தையாகிய அரியின் குருதியினை

அத்தலையில் ஏற்கச் செய்தான். அதுபோலப் பசியால் வருந்திய பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பாலூட்டியவன் சிவன். அதனால் அவன் எல்லா உயிர்களையும் பாகுபாடின்றி நேசித்து அருள் செய்பவன். உனது மகன் ஆரூரன் அவனருளால் பிறந்தவன். அவனது பிள்ளை அதனால் சிவன் உனது பிள்ளைக்குத் துன்பம் செய்யமாட்டான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**328. vq;Fk; fye;Jமென் உள்ளத் தெழுகின்ற**

**அங்க முதல்வன் அருமறை யோதிபாற்**

**பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்**

**அங்கு விரற்குறித் தாழிசெய் தானே.**

“காங்கேயா, சிவன் எல்லா இடங்களிலும், எல்லா உயிர்களிலும் உள்நின்று இயக்குபவன். அவற்றிற்கு அருளுபவன். அவன் ஆறு சமயங்களுக்கும் முதல்வனானவன். நான்கு வேதங்களையும் ஓதியருளிய தலைவன். அவனது பெருமைகளை உணராது சலந்தரன் என்ற அசுரன் அவருடன் போருக்கு வந்தான். சிவன் எல்லாத் தொழில்களையும் கருவியின்றி கருத்தளவாளே செய்பவன். அதனால் சலந்தரனது உடலை அழித்தற் பொருட்டு நிலத்திலே திருவடி விரலால் சக்கரப்படையை அமைத்தான். அச்சக்கரப்படை சலந்தரனைக் கொன்றது. அச்சக்கரப் படையைத்திருமால் வழிபட்டுப்

பெற்றுக்கொண்டான். ஆதலால் எல்லா இடங்களிலும் எல்லா உயிர்களிலும் ஒன்றாய்க் கலந்திருப்பதனால் அவனுக்கு உலகில் நடைபெறுகின்ற சம்பவங்கள் யாவும் உயிர்களுக்கு நடைபெறுவன யாவும், தெரியும். ஆரூரன் தனதருளால் பிறந்தவனென்றும், நீ சிறந்த சிவபக்தன் என்றும் தவறாது ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதித் தன்னை வணங்குபவன் என்றும் தெரியும். ஆகையால் கவலைப்படாதே. உனது மகன் கட்டாயம் பரீட்சை எழுதுவான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**329. mg;gzp செஞ்சடை ஆதி புராதனன்**

**முப்புரஞ் சென்றனன் என்பார்கள் மூடர்கள்**

**முப்புர மாவது மும்மல காரியம்**

**அப்புரம் எய்தமை யாரறி வாரே.**

''காங்கேயோ, தூங்குகின்ற செஞ்சடையும், ஆதியாகிய அன்னையையும் உடைய தொண்மையான சிவன்,ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் மும்மலங்களையும் தன் அருட் பார்வையால் எரித்தவன். இவ் உண்மையைச் சாதாரணமக்களுக்கு விளக்கும் பொருட்டு உருவகக் கதையாக உயர்ந்தோர் உரைத்தனர். அதைப் பின்வந்தோர் உண்மையெனக்கருதினர். அவர்களைத் திருமூலர் மூடர்கள் என்று கூறுகிறார். அதனால் தான்

அவர் முப்புரங்களையும் எரித்ததை யார் அறிவார்கள் என்று கூறுகிறார். முப்புரம் என்பது இரும்பு, வெள்ளி, பொன் என்பவற்றாலான கோட்டைகள். இவற்றின் நடுவே உள்ளது உயிர். அவ் உயிர் அன்பு, அறிவு ஆற்றல் ஆகிய முப்பண்புகளை உடையது. அம் முப்பண்புகளே உயர்ந்த மூவர் என்று குறிப்பிடப்பட்டன. ஏனையவை மடிந்தவர்கள் அனைவர்களுக்கம் தீய பண்புகளாகும். இரும்பு என்பது ஆனவத்தால் செய்யப்படும் செயல்களையும், வெள்ளியென்பது மாயையால் செய்யப்படும் செயல்களையும், பொன் என்பது வினையின் செயல்களையும் குறிப்பன. இது தான் உண்மை. இதுபோலவே ஏனையவற்றையும் உருவகப்பண்புகளாகக் கொள்ளல் வேண்டும். அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய முப்பண்புகளுள் அன்பு பின் நின்று உதவுவதற்கும், அறிவு முன் நின்று வலப்பக்கக் காவலுக்கும், ஆற்றல் இடப்பக்க காவலுக்கும் உரித்தாகிறது. இதைப் புரிந்து கொள்ளாதவர்களால் தான் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகின்றன. சிவன் எப்போதும் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்யவே விரும்புவான். உயிர்கள் மீது மும்மலங்களும் பதிந் உள்ளமையால் உயிர்கள் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு சிவனை நம்பியும், நம்பாதும் வாழ்கின்றன. சிவனின் அருட்பார்வை உயிர்களுக்குக் கிடைத்தால் மும்மலங்களும் அழிய உயிர்கள் உண்மையான நிலையைப்புரியும். இப்போ சிவபக்தனான நீ இரண்டு மனம் கொண்டு கலங்குகிறாய். கலக்கத்தை விட்டு விட்டு

நம்பினால் தான் பயன் உண்டாகும். ஊருவகக்கதைகள் பல உலகில் உருவகிக்கப்பட்டுள்ளன. அவற்றை விட்டுவிட்டு ஐந்தெழுத்தை நம்பிக்கையுடன் ஓது. எல்லாம் நல்லதாக நடைபெறும்'' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**330. முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்**
**அத்தி யுரியர னாவ தறிகிலர்**
**சத்தி கருதிய தாம்பல தேவரும்**
**அத்தீயின் உள்ளெழுந் தன்று கொலையே**

காங்கேயனின் மனைவி மகாதேவி சுந்தரமூர்த்தி சுவாமியின் அருகில் வந்து சொன்னாள்: ''இப்போ எனது மகன் சுகப்பட்டு வருகிறான் எனது தந்தைக்குச் சிவனில் நம்பிக்கை இல்லை. அதனால் எமது செயல்களை அவர் கண்டிப்பார். இப்போ அவர் எனது மகனை அவைதீக சமயக்குருவிடம் கொண்டு செல்ல விரும்புகிறார். அவரிடம் இவ்வூரவர்கள் பலர் செல்கின்றனர், நம்பிக்கையும் வைத்துள்ளனர்'' என்றாள்.

''மகளே சிவன் தான் உலகின் தலைவன். காட்டுத்தீ, வீட்டுத்தீ,ஏட்டுத்தீ என்று சொல்லப்படும் ஆகவனீயம், கருகபத்யம், திசை அங்கியாகிய முத்திகளையும் எழுப்பி வடபாலிலுள்ள முனிவர்கள் தீ வேள்வி ஒன்றைச் செய்தனர். அத் தீயில் இருந்து யானை

ஒன்று வெளிப்பட்டு வந்தது. யானை என்பது யானே தலைவன் எனப்பொருள்படும். சிவன் அல்ல யானே தலைவன் என்பது போல யானை வெளிவர அதனை உமையம்மையார் நடுங்கும் படி தன் நகத்தால் அதனைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்தவர் சிவன். இவ் யானையின் அழிவு முன்னர் தக்கனின் வேள்வியின் போது அவி உணவை உண்டால் தம் உடல் பலம் பெறும் என்று நினைத்து வந்ததேவர்களின் அழிவை ஒத்தது. முத் தீக்களாவன கல்வி கற்று, கடவுளின் மீது அன்பு எனவும் கொள்ளலாம். அடியவர்களின் துன்பங்களைப் போக்குபவன் சிவன். அதனால் பயம் கொள்ளாது உனது தந்தையின் செயலை ஏற்காமல் விடு. நன்மை உண்டாகும்'' என்றார் சுவாமிகள்.

**331. மூலத் துவாரத்து மூளும் ஒருவனை**

**மேலைத் துவாரத்து மேலுற நோக்கி முற்**

**காலுற்றுக் காலனை காய்தங்கி யோகமாய்**

**ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.**

''மகாதேவி, மூலாதாரத்தில் உள்ள நடுநாடி வழியாக உயிர்ப்பினை ஏற்றி மேலைத்துவாரமாகிய உச்சித்துளையிற் செலுத்துதல் அகவழிபாட்டின் அடிப்படை. அதன் பின்னர் புறவழிபாடு நிகழ்த்தல் வேண்டும். உச்சித் துளையில் செலுத்தி நோக்கின்

சிவபெருமான் காட்சி கொடுப்பார். அங்ஙனம் வழிபட்ட மார்க்கண்டேயரை யமன் கவர வந்த போது சிவன் அவனைக் காலால் உதைத்தார். தனது பக்தர்களுக்காக எதையும் செய்பவர் சிவன். ஒருவனது மரணத்தை எவ் வழியாலும் தடுக்க முடியாது. ஆனால் தனது பக்தனின் மரணத்தைதடுத்து நிறுத்திய சிவனை நித்திக்கிறாரா உனது தகப்பன். இது கூடாது அதனால் அவரை நம்பாது தொடர்ந்து சிவனை வணங்குங்கள் உங்கள் மகன் சுகமடைவான்''என்று சுவாமிகள் கூறினார்.

**332. இருந்த மனத்தை இசைய இருத்திப்**

**பொருந்தி இலிங்க வழியது போக்கித்**

**திருந்திய காமன் செயலழித் தங்கண்**

**அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே.**

சிவரூபனின் தந்தை தணிகாசலம், சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் வந்து சொன்னார்,''சுவாமி எனது மகன் படிப்பில் நல்ல கெட்டிக்காரன் இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கிறான். அவன் தற்போது ஒரு பெண்ணைக் காதலிப்பதால் படிப்பில் கவனம் செலுத்துகிறானில்லை. அவனை அழைத்துப் புத்திமதி கூறுங்கள்'' என்றான். அவன் சென்றபின் சிவரூபன் சுவாமியாரிடம் வந்து சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். சுவாமியார் சொன்னார்,''மகனே, திருமாலின் மகனான மன்மதன், சிவபெருமான் தவம் செய்கையில்

அவ்விடம் வந்து பூக்களால் அம்பு செய்து சிவன் மீது எய்தான். அக் கணைகள் காமத்தை ஊட்டுவன. தவம் கலைந்த சிவபெருமான் அவனைக் கோபத்துடன் பார்க்க அவன் எரித்து சாம்பலானான். இந்தக் கதை பலருக்குத் தெரியும். ஆனால் அதன் அர்த்தம் சிலருக்குத் தான் தெரியும். மகனே, யாருக்கும் காம உணர்வைப் பிறர் உண்டாக்கக் கூடாது. ஒரு செயலில்ஈடுபடும் போது காமவசப்படக் கூடாது. செயல் முடிந்த பின்பே காமவசப்படல் வேண்டும்.செயலிலீடுபடும்போது மனதில் காம உணர்வு எழுந்தால் அதை அறிவால் அகற்றுதல் வேண்டும். இவ் உண்மையைத் தான் சிவபெருமான் மன்மதன் மூலம் உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளார். ஒரு செயலைத் தொடங்கினால் தொடக்கப்பட்ட செயல் முடிவுறும் வரை அச் செயலிலேயே மனத்தை இருத்துதல் வேண்டும். அப்படிப் பொருத்திய மனத்தை இலிங்கத்தின் மீது செலுத்துதல் வேண்டும். நீ இப்பொழுது படிக்கிறாய். கல்வியைக் காதல் கெடுத்து விடும். அதனால் காதல் கொள்வதைப் படிப்பு முடித்த பின் செய்வது தான் நல்லது. இல்லாவிட்டால் உனது வாழ்வு அழிந்து விடும்'' என்றார்.

''அப்படியே செய்கிறேன் சுவாமி'' என்றான் சிவரூபன்.

333. **அடிசேர்வன் என்னளம் ஆதியை நோக்கி**
**முடிசேர் மலைமக னார்மக ளாகித்**
**திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்**
**படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே**

சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் ஆலோசனை பெறப்பலர் வருவார்கள். அன்று சிவரூபன் சென்றதும் அம்பலவாணர் என்றும் சிவபக்தர் வந்து கேட்டார்,“சுவாமி சிவனுடைய திருத்தலங்களில் எது மகிமையானது? அருள் தரவல்லது. நான் இச்சிவன் கோவிலில் வீற்றிறிருக்கும் சிவனையே முழுமையாக நம்பித்தொழுது வருகிறேன். சிலர் வேறு சிவத்தலங்களுக்குச் சென்று வணங்குமாறு கூறுக்கின்றனர். எனக்குத் தகுந்த ஆலோசனை வழங்குங்கள்” என்றார்.

“அம்பலவானரே, பூமியில் உள்ள எல்லாச் சிவத்தலங்களும் மகிமை உள்ளன. அருளை வாரி வழங்குவன. பூமியில் உள்ள எந்தச் சிவத்தலத்திலும் சிவபூசை செய்தால் செய்பவர்களுக்கும், அப்பூசையைக் காண்பவர்க்கும் பயன் உண்டாகும். வானுலகத்தவர் அவரவர் வீடுகளிலும் சிவபூசை செய்தால் அப்பூசை பிறருக்குப் பயன்படுவதில்லை. அதனால் தான் சிவபெருமான் பயனருளும் இடமாக இப் பூமியிலுள்ள சிவத்தலங்கள் விளங்குகின்றன. இதை உணர்ந்த

வானவரும் இத் திருத்தலத்திற்கு வருகை தந்து இங்கு வீற்றிருக்கும் சிவனை வணங்குவர் என்று தமிழ் ஆகமமான சிவஞான சித்தியார் கூறுகிறது. அதனால் தான் உமாதேவியார் சிவனை வணங்கி அருள்பெற எண்ணி இமயமலை அரசனின் மகளாகத் தோன்றி சிவனை வழிபட்டு சிவனை அடைந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் நீ இத்திருத்தலத்திலேயே சிவபூசை செய்து வழிபடு. இல்லா விட்டால் பூமியில் உள்ள எந்த சிவத்தலத்திலாவது வழிபடு'' என்றார் சுவாமிகள்.

**334. திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை**

**அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா**

**புரிவிடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்**

**பரிவொடு நின்று பரிசறி வானே.**

``அம்பலவானரே, உழன்று கொண்டிருந்த முப்புரங்களையும் ஒழுங்கு படுத்துதற் பொருட்டு சிரித்து எரித்தவன் சிவபெருமான். அவன் அடியவர்க்கு அடியவன் அன்பு கொண்டால் அவனை எளிதாக அடையாலம். அன்பு தான் சிவம். அதனால் நீ அன்பு வைத்தால் அவன் உன்மீது பேரன்பு கொள்வான். அவன் தான் அழியாத பேரன்பு கொண்ட ஆண்டவன். அவன் அன்பு கொண்ட உயிர்களுக்குள் உயிராய் நின்று வேண்டுபவற்றை அறிந்து அவ்வப்பொழுது அருள்

செய்பவன் ஆகையால் சிவன் மீது பேரன்பு கொண்டு சிவபூசை செய். செய்யும் போது சிவனது ஏனைய திருக்கோவில்களை நினை. நினைத்தால் அங்கு சென்று வந்த பயன் கிட்டும்'' என்றார் சுவாமிகள்.

**335. ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்**
**ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்**
**ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி**
**வாழி பிரமற்கும் வாள் கொடுத்தானே**

``அம்பலவானரே, அறிவுப்பேரொளியாகவும், ஒளிக்குள் ஒளியாயும் நின்று அடியவர்க்கு அருளும் ஆதிப்பரம் பொருளான சிவபெருமானை நோக்கி அயனும் மாலும் நெடுங்காலமாகத் தவம் செய்தனர். சிவபெருமான் அவ் இருவரினதும் வழிபாட்டை ஏற்றுத் திருமாலுக்குச் சக்கராயுதத்தை வழங்கினான். அதுபோல பிரமனுக்கு அதிசக்தி வாய்ந்த வாளைக் கொடுத்தான். ஆழி என்பது ஆற்றலைக் குறிப்பது. சக்கராயுதத்திற்கு நிகரான ஆயுதம் எவையும் எந்த உலகிலும் இல்லை. வாள் அறிவுக் கருவியாகும். பிரமன்படைத்தற்கடவுளாகும். அறிவுமிக்க உயிர்களைப் படைக்கவே அறிவுக் கருவியாகிய வாள் பிரமனுக்கு வழங்கப்பட்டது. எது எது எவர்க்குத் தேவையோ அதை அறிந்து அதை வழங்குபவன் சிவன். அதனால் உனக்குத் தேவையானவற்றை அறிந்து உனக்கு வழங்குவான்'' என்றார் சுவாமிகள்.

336. **தாங்கி இருபது தோளுந் தடவரை**

**ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி**

**ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்**

**நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே.**

“அம்பலவானரே, பெரும் சிவபக்தனாக இருந்தாலும் சிவனைத் திமிரோடு வணங்கலாகாது. திமிரோடு செயலில் இறங்கலாகாது. ஒரு சமயம் பெரும் சிவபக்தனும்,பெரும்பலசாலியும், இருபது தோள்களை உடையவனுமான இராவணன் கைலாயமலையைத் தூக்க முயன்றான்.

நிட்டையில் இருந்த சிவன் திடுக்கிட்டுத் தனது கால்ப்பெருவிரல் விரல் நுனியால் மலையை அழுத்த இராவணன் தன் பலமெல்லாவற்றையும் இழந்து குருதி கொப்பளிக்கப் பெரிதும் வருந்தினான். பின் அவன் தனது கையின் நரம்பை எடுத்து அதை யாழாக்கி திருவைந்தெழுத்தை ஓதிக் கீதம் பாடித் தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். அதனால் மனம் இரங்கிய சிவபெருமான் அவனுக்கு நாளும் வாளும் கொடுத்தருளினான். ஆகையால் சிவனை வேண்டுவோர் எதைச் செய்தாலும் அதை அவனுக்குச் சொல்லி அவனின் அருளை வேண்டிய பின்பே செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் துன்பம் தான் உண்டாகும். அத்துடன்

செய்யும் தவறுகளை ஒப்புக் கொள்பவனை பாவம் சூழாது'' என்று சுவாமிகள் சொன்னார்.

**337. உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி**

**அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை**

**செறுவகை செய்து சிதப்ப முனிந்து**

**மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே**

“அம்பலவானரே, சிவனது திருவிளையாடல்களைக் கேட்பது இன்பம். பிறருக்குச் சொல்வது பேரின்பம். சொல்பனும் கேட்பவனும் சிவனின் அருளைப் பெறுவார்கள். அதனால் நான் சொல்கிறேன். நீ கேள்''. என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறும்போது மாணிக்கராசா வந்து சொன்னான்,“சுவாமி, நான் காலையில் குளிக்கும்போது கிணற்றில் தவறி விழுந்து விட்டேன். பெருங்காயம் எதுவுமில்லை'' என்றான். அதற்குச் சுவாமிகள் சொன்னார்,“மகனே, சிவபூசையைக் குழப்புவோர் கட்டாயம் தண்டிக்கப்படுவர். நீ அடிக்கடி கோவிலில் கலகம் செய்வான். சென்ற வாரம் பிரதோசத்தன்று சிவனுக்கு அபிசேகம் செய்கையில் நீ பலருடன் சண்டையிட்டாய். அப்போதே உனக்குச் சொன்னேன். சண்டேஸ்வரர் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் மாடுகளை மேய்ப்பவர். அவர் தினமும் மண்ணால் சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்பவர். தாம் மேய்க்கும் ஊரவரின் பசுக்களில் இருந்து

பாலைக்கறந்து சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்வார். இதை அறிந்த பசுக்களின் உரிமையாளர்கள் சண்டேஸ்வரரின் தந்தைக்குச் சொல்ல, தந்தை கோபத்துடன் சென்று சிவபூசையைக் குழப்பினார். சிவலிங்கத்தைக் காலால் உதைத்தார். அதைப் பொறுக்க முடியாத சண்டேஸ்வரர் மாடு மேய்க்கும் கோலை எடுத்து வீச அக் கோல் வாளாக மாறிச் சண்டேஸ்வரரின் தந்தையின் காலைத்துண்டித்தது. சிவன் சண்டேஸ்வரருக்கு தொண்டர் தலைமையும் மாலையும் கொடுத்து ஆட் கொண்டார். எனவே நீ சிவன் கோவிலில் சண்டையிடுவதை நிறுத்து.'' என்றார். மாணிக்கராசா பயத்துடன் ஒப்புக் கொண்டான்.

**338. ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்**
**வாடி முகமும் வருத்தந்துத் தாஞ்சென்று**
**நாடி இறைவா நமஎன்று கும்பிட**
**ஈடில் புகழோன் எழுகவென் றானே.**

``மாணிக்கராசா, மனிதர்களுக்கு அடிக்கடி துன்பங்கள் வந்து வருத்துவது போலத் தேவர்களுக்கும் அசுரர்களால் அடிக்கடி துன்பங்கள் வந்து கொண்டிருந்தன. அதனால் மால் முதலான தேவர்கள் அனைவரும் தமக்கு நேரும் துன்பங்களைச் சிவபெருமானையன்றி வேறெவராலும் நீக்க முடியாதென்று நினைத்து மிகுந்த கவலையோடு சிவபெருமானிடத்தில்

வந்து கவலையுடன் முறையிட்டனர். அவர்களுக்கு நேர்ந்த துன்பங்களை அறிந்த சிவபெருமான் அவர்களது துன்பங்களை நீக்கியருளினார். சிவபெருமான் தேவர்களின் துன்பங்களை மட்டுமல்ல அம்மை, அன்பர், அயன்மால், இராவணன், சண்டேசுரர் தேவர்கள் ஆகியோருக்கு வந்த துன்பங்களையும் நீக்கியவர். நீபல வருட காலமாகத் துன்பப்படுகிறாய். சொல்வது எதையும் நீ கேட்பதில்லை. சிவனை வணங்குவோர்க்கு மெய்ப் பொருள், ஆண்மை, புகழ், திருஞானம், பற்றுறுதி, வைராக்கியம் முதலியன உண்டாகும். துன்பங்கள் எவையும் அணுகாது. அதனால் நீயும் பயபக்தியுடன் ஐந்தெழுத்தை ஓதிச் சிவனை வணங்கு'' என்றார் சுவாமிகள். மாணிக்கராசா ஒப்புக் கொண்டான்.

**தக்கன் வேள்வி.**

339. **தந்தைபி ரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை**
**வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்**
**முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்**
**சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போததே.**

கோவிலில் சிவபூசைமுடித்த பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களுக்குச் சிவனின் பெருமைகளைக் கூறுவார். சிவனடியார்களே,''நான்முகனின்

மகனான தக்கன் தன்னை மதிக்காது வேள்வி செய்ததனால் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் கடுங்கோபங்கொண்டு தக்கன் வேள்வி செய்த யாகசாலைக்கு வந்த போது தேவர்கள் அனைவரும் நடுநடுங்கிச் செய்வதறியாது யாகசாலையை விட்டுத் தப்பியோடினர். ஒருவர்போன இடம் ஒருவருக்குத் தெரியாது. சிதறி ஓடினர். தேவர்களுக்கே இந்தக்கதியானால் மனிதர்களுக்கு என்ன நடக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். தேவர்கள் எப்போதும் மகிழ்வுடன் வாழ்வதால் அவர்களுக்குச் சிவனை நினைக்க நேரம் கிடைப்பதில்லை. துன்பங்கள் மேலீடும் போது தான் விழுந்தடித்துக் கொண்டு சிவனிடம் செல்வார்கள். ஆனால் மனிதர்கள் அப்படியல்ல. சிலர் கடவுளை அவமதிப்பர். பலர்தினமும் காலையும் மாலையும் கடவுளைத் தொழுவார். அதனால் தான் தேவர்களுக்கு அடிக்கடி அசுரர்களால் பெருந்துன்பங்கள் உண்டாகின்றன. மனிதர்களுக்கு அப்படியான துன்பங்கள் வருவதில்லை'' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் அரச மரநிழலில் இருந்த சிவபக்தர்களுக்குக் கூறினார்.

**340. சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்**
**எந்தை யிவனல்ல யாமே உலகினிற்**
**பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய**
**அந்தமி லானும் அருள்புரிந் தானே.**

“சிவனடியார்களே, தக்கன் செய்த வேள்விக்கு நானும் தேவர்களும் அறியாமை காரணமாகவே சென்றோம். அங்கு பெற்ற தண்டனையை எம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் தக்கன் மட்டுமல்ல, நானும் மல மயக்கத்தால் பாசத்திற்குட்பட்டு விட்டோம். அதனால் கருண்ணியம்மிக்க சிவனே எம்மை மன்னித்தருளும் என்று திருமால் தவமிருந்து கேட்கச் சிவபெருமான் திருமாலையும் தேவர்களையும் மன்னித்தார். சிவன் அன்பு மயமானவன். எத்தகைய கொடுமைகளைச் செய்தாலும் அதை உணர்ந்து சிவபூசை செய்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி மன்னிப்புக் கேட்டால் நிட்சயமாக மன்னிப்பான். இதை உணராத பலர் மேன்மேலும் பாவங்களைச் செய்து சிவனைவிட்டு அன்நியப்படுகிறார்கள். மாணிக்கராசா, நீ அதைத்தான் செய்கிறாய். பாவத்திற்குப் பிராயச்சித்தம் மன்னிப்பு. நீ முதலில் நமசிவாய என்ற ஐந்தெழுத்தைச் சிலகாலம் ஓது. பின் வந்து என்ன நடந்தது என்று சொல்” என்றார் சுவாமியார்.

341. **அப்பரி சேயய னார்பதி வேள்வியுள்**
**அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்**
**அப்பரி சேயது நீர்மையை யுள்கலந்து**
**அப்பரி சேசிவன் ஆலிக்கின் றானே.**

“சிவனடியார்களே, ஒருவன் ஒரு தீயசெயலைச் செய்யப்போகிறான் என்று அறிந்தால் அவனோடு கூட இருப்பவர்கள் அத்தீய செயலைச் செய்யக்கூடாதென்று கூறவேண்டும். அவன் கூறியவற்றை ஏற்காவிட்டால் கூறியவன் அவனை விட்டு நீங்கிவிடவேண்டும். சிலர் தீயது என்று தெரிந்தும் செய்வார்கள். கூட இருப்பவர்கள் நல்லுபதேசம் செய்யாது சில சலுகைகளுக்காக அவர்களோடு சேர்ந்திருப்பார்கள். செய்பவனுக்கு உண்டாகும் பாவம் சேர்ந்தவனுக்கும் உண்டாகும். அத்துடன் அவனும் தண்டிக்கப்படுவான். தக்கன் செய்த வேள்விக்குச் சென்ற தேவர்கள் எல்லோரும் தண்டிக்கப்பட்டனர். தக்கன் வேள்வி செய்தபோது நிற்பந்தம் காரணமாக அக்கினி பகவான் தக்கனது வேள்விக்குச் சென்றார். அவர் தண்டிக்கப்பட்ட பின்பு தான் செய்தது பிழை என்று உணர்ந்து சிவபிரானிடம் மன்னிப்புக் கேட்கச் சிவன் அவரை மன்னித்தார்” என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறினார்.

342. அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி சங்கி யுளநாளும் உள்ளிட்டு
அப்பரி சாகி அலர்ந்திருந் தானேக

"சிவனடியார்களே, திருமால் முதல் தேவர்கள் தனித்தனியே தக்கனது கொலை வேள்விக்குச் சென்றது தமது அறியாமை என்று கூறி அதைப் பொறுத்தருளல் வேண்டும் என்று மன்றாடிக் கேட்டதற்கிணங்கச் சிவபெருமான் அவர்களை மன்னித்து அருள்புரிந்தார். ஒரு செயல் தீயதென்று தெரிந்தால் அதைச்செய்யக்கூடாது. செய்பவரோடு சேரவும் கூடாது. தேவர்கள் ஆசை மிகுதியாலும் பயத்தாலுமே தக்கனது வேள்விக்குச் சென்றனர். உயிர்களைக் கொல்லுதல் பாவம் என்றும், உயிரைக் கொல்லாது அதன்மீது அன்பு கொள்ளல் யாகம் செய்வதை விட மேலானது என்றும் அறிந்த திருமாலும் தேவர்களும் தாம் செய்ததுஅறியாமை என்று கூறச் சிவபெருமான் அதை ஏற்றுக்கொண்டது இனியாவது அவர்கள் அறியாமை என்று கூறித்தவறுகள் செய்யாமல் இருக்கும் பொருட்டேயாகும். இப்போ மாணிக்கராசா மார்க்கண்டனுடன் சேர்ந்து கிரகநிவர்த்திக்காகப் பூசை செய்வதாகக் கூறி மதுவும், உயிர்ப் பம் இடுகிறான். இது இவ்வளவு காலமும் மாணிக்கராசா அறியாமல் இருந்திருக்கலாம். இப்போது அவனது அறியாமை நீக்கிவிட்டது. இனி அவன்

உயிர்ப்பலிகளில் ஈடுபட்டால் கட்டாயம் தண்டிக்கப்படுவான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறினார்.

**343. அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்**
**குலந்திருங் கீழங்கி கோளுற நோக்கிச்**
**சிவந்த பரமிது சென்று கதுவ**
**உவந்த பெருவழி யோடிவந் தானே.**

''சிவனடியார்களே, உலகில் உள்ள பொருட்கள் எல்லாவற்றிலும் உள்நின்று இயக்கும் சிவன் தக்கனை அழித்தபின் மிகுந்த மகிழ்வுடன் இருப்பதைக்கண்ட தேவர்கள் ஒன்றுகூடி வந்து தொழுதனர். தூய்மை முதலிய அனைத்து வகையாலும் மேம்பட்டு ஏனைய உலகில் உள்ள பொருட்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்தும் சிவன், குற்றங்கள் மிகுந்த தக்கனது வேள்விக்குச் சென்றோரைத் தூய்மைப்படுத்துவதற்காகவே சினந்து தண்டித்தான். அத்தகைய பெருமைகளை உடைய சிவனை அக்கினி பகவான் வணங்கியபோது அவனையும் சிவன் குற்றங்களை நீக்கி மன்னித்தருளினான். அத்தகைய பெருமைகளை உடைய சிவன் மீது அன்பு வைத்தால், அன்பு வைத்தவர்களின் குற்றங்களை நீக்கி அருள்புரிவான். சிவன் உயிர்கள் மீது பேரன்பு கொண்டவன். உயிர்கள் ஆணவ முனைப்பால் தீய செயல்களைச் செய்யும் போது முதலில் அதை

உணர்ந்துவான். உணர்த்தியும் உணராத ஆணவ முனைப்புள்ளவர்களைத் தண்டித்துத் திருத்துவான். தண்டிக்கும் போது கூட அவ் ஆன்மாக்கள் மீது இரக்கம் கொண்டே தண்டிப்பான். தண்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் தவறை உணரும் போது சிவனது அருள் இரட்டிப்பாக அவர்களுக்குக் கிடைக்கும். சென்ற வாரம் மாணிக்கராசா விபத்தில் படுகாயமடைந்தபோது அவனின் மனைவியும் பிள்ளைகளும், ஊரவர்களும் அவன் செய்த பாவத்திற்கான தண்டனை என்றே கூறினார்'' என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் சொன்னார்.

**344. அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே**

**வருமதி வாலை வன்னிநல் இந்திரன்**

**சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்**

**அரனருள் இன்றி அழிந்தநல் லோரே**

''சிவனடியார்களே, சிவனைப்புறக்கணித்து அவனது திருவருளினை இகழ்ந்து தக்கன் செய்த புலை வேள்வியில் கலந்து கொண்ட மால், அயன், சூரியன், சந்திரன் தக்கனின் மனைவி வாலை, அக்கினி, இந்திரன், தக்கன் முதலியோரைச் சிவனின் சினம் தீயுருவாகத் தோன்றித் தண்டித்தது. அத்தீயுருவே வீரபத்திரக் கடவுளாகும். வீரபத்திரர் அவர்களது தலை, முகம், மூக்கு, கை, தோள் முதலியவற்றைத் தனித்தனியே அறுத்தார். சிவனின் அருளில்லாமையால் தேவர்கள்

அனைவரும் அழிந்து போயினர். இதிலிருந்து தீமை செய்பவர்களுடன் இருப்போரும், துணை செய்வோரும் தீயவர்கள் பெறும் தண்டனையைப் பெறுவார்கள் என்று எல்லோரும் உணருதல் வேண்டும். இங்கு பதவிகள் தகுதிகள் பார்க்கப்படாது தீமை செய்தவரும் துணையாக இருந்தவர்களும் அருகில் இருந்தோரும் தண்டிக்கப்பட்டனர். அதனால் தீமை செய்பவர்களோடு சேர்பவர்களும் அதேயளவு தண்டனையைப் பெறுவார்கள் என்று நீங்கள் எல்லோரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இதை மாணிக்கராசாவுக்கும் நண்பர்களுக்கும் தான் முக்கியமாகச் சொல்கிறேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**345. செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்வத் தேவர்**
**அவிமந் திரத்தின் அடுக்களை கோலிச்**
**செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்**
**குவிமந் திரங்கொல் கொடியது வாமே**

''சிவனடியார்களே, தேவர்கள் யாககுண்டத்தினை அமைத்தனர். திருவைந்தெழுத்தை மறந்து யாகத்துக்குரிய மந்திரங்களை முறைப்படி ஓதினர். இந்த மந்திரங்கள் எவையும் திருவைந்தெழுத்திற்கு ஈடாகாதென்பதை உணராது விதிமுறைப்படி மந்திரங்களை ஓதினர். இம்மந்திரங்களை ஓதியும் அவர்கள் அதற்கான பலனைப்பெறாது தண்டனையையே

பெற்றனர். இதற்குக் காரணம் வேள்விக்கு முதன்மையானவன் சிவன். அவனை வசியப்படுத்தும் மந்திரம் திருவைந்தெழுத்து. உப்புப்போடாவிட்டால் எந்தப் பெறுமதியான உணவும் சுவைக்காது. திலகமிடப்படாது விட்டால் பெண்மை பூரணமாகாது. அது போலத் திருவைந்தெழுத்தை ஓதாது செய்யும் செயல்கள் எவையும் பூரணமாகாது என்று தேவர்கள் எவருக்கும் புரியாமைக்குக் காரணம் திமிர் என்ற ஆணவமே. ஊலகின் தலைவன் சிவன் என்றறிந்தும், சிவன் தக்கனின் மருமகன் என்ற காரணத்தால் சிவன் தக்கனை விடக் கீழானவன் என்ற தவறான எண்ணமே தேவர்கள் அழியக் காரணமாக இருந்தது. பல்வேறு வகையாகப் பார்த்தாலும் ஆசிரியர்கள் கற்பித்த மாணவர்கள் ஆசிரியர்களை விட உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் மாணவர்களுக்கு ஆசிரியர்களே மேலானவர்கள். ஆசிரியர்களை பதவி காரணமாக அவமதிக்கும் மாணவர்கள் தேவர்களைப் போல அழிந்து போவர். பண்டிதர் வீரகத்தி ஆசிரியர். முணிவண்ணன் பண்டிதரிடம் கற்ற மாணவன். உயர் அதிகாரி. அதனால் பண்டிதரை அவன் மதிப்பதில்லை. பண்டிதரும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. மணிவண்ணனின் உயர் அதிகாரி நாகராசா அவர் பண்டிதரின் திறமைகளைக் கேள்விப்பட்டவர். மணிவண்ணன் ஒருவரிடம் லஞ்சம் பெற்றதனால் நாகராசா மணிவண்ணனை வேலையில் இருந்து இடைநிறுத்தினார். அதை அறிந்த பண்டிதர் நாகராசாவிடம் வந்தபோது நாகராசா அவரை எழுந்து

நின்று வரவேற்றார். பண்டிதரின் வார்த்தைகளை நம்பித்திரும்பவும் மணிவண்ணனுக்குப் பதவியைக் கொடுத்தார். அதனால் சிவனடியார்களே ஒவ்வொருவரும் பிறரது தகுதி தராதரத்தைத் தவறாக நினைத்தல் கூடாது'' என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள்.

**346. நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புறப்**

**பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென**

**வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்**

**பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே**

''சிவனடியார்களே, வேள்வியின் போது அமைக்கப்படும் யாககுண்டங்கள் ஒன்பதும் இடையூறுகள் இன்றி யாகம் செய்யப்படுவதால் நன்மைகள் பலவும் ஏற்பட வேண்டும் என்றும், தேவர்களை அழிப்பதையே நோக்காகக் கொண்ட முப்புர அசுரர்களையும் அழித்து எம்மைக் காக்கவேண்டும் என்றும் திருமாலின் தலைமையில் வந்த தேவர்கள் சிவனை வேண்டினர். சிவன் அவர்களின் துன்பத்தைப் போக்குவதற்காக உறுதியளித்து முப்புர அசுரர்களைப் பார்த்துச் சிரித்தார். அக்கணமே முப்புரங்களும் எரிந்து சாம்பலாகின. பொல்லாத அசுரர்கள் அழிந்தனர். அதனால் சிவனடியார்களே, சிவன்மீது மாறாத பற்றுக் கொண்டு அவனை வணங்கி உங்களது குறைகளைக் கூறுங்கள். அவை நிறைவேறும். துன்பங்களைச் சொல்லுங்கள்

அவை முப்புரம் போல எரிந்து அழியும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**347. தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே**
**அளிந்தாங் கடைவதெம் ஆதிப்பிரானை**
**விளிந்தானத் தக்கன்அவ் வேள்வியை வீயச்**
**சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழியாளே.**

"சிவனடியார்களே, உடலும், உள்ளமும், உணர்வும், உயிரும் திருவருளேயாகும். அதனால் அவை எப்பொழுதும் தூய்மையானவையாகும். அத்தகைய தூய்மையான உமையம்மையார் அருண்மொழியென்னும் தூய்மையும் வாய்மையும் நன்மையும் வாய்ந்த திருமொழியினை உடையவர். அவரை அடைந்த சிலர் பயிற்சி வயத்தால் கலங்குவர். ஆனால் உமையம்மை கலங்கவில்லை. ஆணவச் செருக்கால் தக்கன் செய்த புலை வேள்வியினால் சினங்கொண்ட சிவன் வேள்வியையும் அழித்துத்தக்கனையும் கொன்றான். அத்தகைய ஆதிப்பிராமண ஆருயினை அடைவதற்கு வழி தூய்மையான அன்பேயாகும் என்று திருமூலர் கூறுகிறார். சிவனது திருவிளையாடல்களின் போது உமையம்மையார் பலவிதமான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளானார். சிவனை நம்புவோர் ஒருபோதும் அஞ்சவேண்டியதில்லை'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

## பிரளயம்

**348. கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்து**
**இருவருங் கோவென் றிகல இறைவன்**
**ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி**
**அருவரை யாய்நின் றருள்புரிந் தானே.**

“சிவனடியார்களே, ஊழிக்காலத்தில் சிவனது கட்டளைப்படி கடல்பொங்கிப் பெரும்பெரும் மலைகளை மூடி எங்கும் ஒரே வெள்ளமாக இருந்தது. அதைக்கண்டு மாலும் அரியும் ஏனைய தேவர்களும் செய்வதறியாது கதறினர். அப்போது ஒப்பில்லாத சிவன் அவ்வெள்ளத்தின் மேல் பேரொளிப் பிழம்பாகத் தோன்றினான். அவ்வொளி அளத்தற்கரியதாய்த் தோன்றியது. அதிலிருந்து வெளிப்பட்ட ஒளி மாலையும் அயனையும் பார்த்து அஞ்சற்க என்றது. நீர் திருவருள் அம்மையைக் குறிப்பதாகும். அம்முறையில் சிவபெருமான் திருவருள் அம்மையை உடலாகக் கொண்டிருப்பது புலனாகும். அதனால் தான் சிவன் நீருள் ஓங்கு ஒளியாக நின்றனன். மனிதர்கள் எப்போதும் கடவுளை நம்புபவர்களாகவும், சிவநிந்தனை செய்யாதவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கு அசுரர்களால் அழிவு ஏற்படுவதில்லை. ஆனால் தேவர்கள் தமது சுயலாபத்திற்காகப் பல இடங்களில் சிவனை மறந்து விடுகின்றனர். அதனால் பெரும் துன்பத்துக்குள்ளாகின்றனர். இருந்தும் அவற்றை

மறந்து மீண்டும் செயற்பட்டாலும் சிவன் அவர்களுக்குத் துன்பங்கள் ஏற்படும் போது உதவிக் கொண்டே இருப்பான்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

**349. அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்**
**தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்டு**
**உலகார் அழற்கண் டுள்வீழா தோடி**
**அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே.**

``சிவனடியார்களே, ஊழில் பெருக்கெடுத்த அலை கடலின் நடுவாக ஊடறுத்துச் சென்ற சிவபெருமான் அண்டங்களுக்கெல்லாம் தானே,முதல்வன் என்பதை நிலை நிறுத்தினான். உலகெங்கும் பரந்து விளங்கிய பெரும் தீப் பிழம்பினைக் கண்டு பயந்து ஓடுவோரை அக்கடலில் நடுவில் நின்று அவர்கள் அதனுள் விழ்ந்துமாளாமல் காப்பாற்றியதோடு அஞ்சவேண்டாம் என்று அருளி அவர்களைக் காப்பாற்றினான். உலகம் ஊழிக்கடலில் தான் எப்போதும் மிதந்து அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு துன்பத்தை விலக்கினால் பத்துத்துன்பங்கள் வந்து மிரட்டுகின்றன. இவற்றைக் கண்டு அஞ்சும் மக்கள் சிவனை வழிபட்டு ஐந்தெழுத்து மந்திரத்தைத் தினமும் ஓதி வந்தால் வந்த துயர் அத்தனையையும் சிவன் நீக்குவான் என்பதையே பிரளயம் என்ற பகுதியில் திருமூலர் எடுத்துச் சொல்கிறார். அதனால் சிவனை வழிபடுங்கள் துயரங்கள்

யாவும் நீங்கும்'' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் கூறினார்.

**350. தண்கடல் விட்ட தமரருந் தேவரும்**

**எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்**

**விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்**

**கண்கடல் செய்யும் கருத்தறி யாரே**

''சிவனடியார்களே, சிவபெருமானின் பெருங் கருணையினால் பொங்கி எழுந்தகடல் அடங்கியது. அதனால் தேவர்கள் அளவில்லாதகடல் போன்ற அன்பைத் தனது அடியவர்கள் மீது செலுத்தும் சிவபெருமானை பக்தியோடு வணங்கினார். கடலைப் பெருகி விண்ணளவும் வரச்செய்த சிவபெருமான் அதன்மேல் பேரொளியாய் எழுந்தருளி ஆருயிர்களுக்குத் திருவடியுணர்வாகிய சிவஞானத்தை அருளினான். இத்தகைய அவனது திருவுள்ளத்தை யாரும் அறியமாட்டார்கள். ஆனால் சிவன் அடியவர்களது திருவுள்ளத்தை அறிந்து அவர்களுக்கேற்றவற்றை வழங்குவான். சிவபக்தனான காங்கேயனது மகன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதுவதற்குச் சில நட்களுக்கு முன் நோயுற்றான். பெரும் சிவபக்தனான காங்கேயனது உள்ளத்தில் உள்ளவற்றைப் புரிந்து கொண்ட சிவன் நோயைமாற்றி அவனைப் பரீட்சை எழுதவைத்தான். இது எல்லோரது உள்ளத்தில்

உள்ளவற்றைச் சிவன் உணர்ந்து கொள்வதால் தான் நடைபெறுகிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**351. சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி**
**அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே**
**திகைத்ததெண் ணீரிற் கடலொலி ஓசை**
**மிகைக்கொள அங்கி மிகாமைவைத் தானே**

“சிவனடியார்களே, உலகில் உள்ள எல்லாவற்றையும் ஆக்கியும், அளித்தும், அழித்தும் உலகைச் சமநிலைப் படுத்துபவன் சிவபெருமான். அவன் தன்னைத்தானே தோற்றுவித்தமையால் அவனைச் சுயம்பு என்பர். அத்தகைய சிவபெருமானை நற்றவத்தாலன்றித் தனி முதலென்று ஏற்றித் தமது நெஞ்சத்தாமரையில் அமைக்கவல்லவர் யார் உளர். அனைவரும் பயந்தால் கலங்கி அக்கடலை இனிமேல் இதுபோன்று மீண்டும் எழாமல் செய்யுமாறு அக்கடலில் சோதிப்பிழம்பாகத் தோன்றிய சிவபெருமானை வேண்டினர். அடியார்களே,தேவர்கள் தம் இதயத் தாமரையில் சிவனை இருத்தியிருந்தால் கலங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. தேவர்கள் எப்பொழுதும் சிவனை நினையாது இன்ப சாகரத்தில் மூழ்கியிருப்பதால் தான் அவர்களால் சிவனைத் தமது நெஞ்சத் தாமரையில் அமர்த்த முடியவில்லை. உலகை ஆக்கி, அளித்து, அழித்துக் காப்பவன் சிவன். அவனின்றி அணுவும்

அசையாதென்று இருப்பவர்களுக்கு யமபயம் கூட இருக்காது. ஏனெனில் அவனை அடைய வேண்டுமென்றே சிவனடியார்கள் விரும்புவார்கள். அப்படியான நோக்கத்தில் உள்ளோர் ஏன் யமனுக்குப் பயப்பிடப் போகிறார்கள். அவர்கள் சிவனடியைச் சென்றடைய யமனே தடையாக உள்ளான்''. என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**352. பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்**
**கண்பழி யாத கமலத் திருக்கின்ற**
**நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்**
**விண்பழி யாத விருத்திகொண் டானே.**

''சிவனடியார்களே சிவவழிபாடு ஆசைகள் அற்றதாகவும், வேண்டுகோள்கள் இல்லாததாகவும் இருத்தல்வேண்டும். ஆனால் தேவர்கள் எப்போதும் ஆசை மிகுந்தவர்களாகத் தமது நலன்களைப் பாதுகாப்பதாகச் சிவனை வழிபடுவார்கள். இது அன்பான வழிபாடல்ல. ஆசை மிகுந்த வழிபாடு. அதனால் தான் அவர்களுக்கு எப்போதும் துன்பங்கள் உண்டாகின்றன. அத்தகைய வழிபாட்டைச் செய்யும் நான்முகனும் திருமாலும் சிவனை மதிக்காது தக்கனது வேள்விக்குச் சென்றனர். அத்துடன் திருவாணையின்றிப் படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்தனர். அதனால் தான் செருக்குக் கொண்ட நான்முகனது ஒருதலை அறுக்கப்பட்டது. தலையை அறுத்தது. தலைமையை

அறுப்பதாகும். ஏனைய தேவர்களும் செருக்குற்று மாளாது பண்புடன் வாழ அச்செயல் வழிவகுக்க வேண்டும் என்பதற்காகவே நிகழ்த்தப்பட்டது''

''சிவனடியார்களே, பாடசாலையின் அதிபர் ஊழல்களில் ஈடுபட்டு அகப்பட்டால் ஏனைய அதிபர்கள் பயப்படவேண்டுமென்பதற்காக அதிபரின் பதவி விலக்கப்படுவது போலத்தான் தேவர்களின் செருக்கை அடக்கச் சிவன் திருமாலின் தலையை அறுத்தான்'' என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் சொன்னார்.

**சக்கரப்பேறு.**

**353. மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்**

**கால்போதங் கையினோ டந்தரச் சக்கர**

**மேல்போக வெள்ளி மலைஅம ராபதி**

**பார்போக மேழும் படைத்துடை யானே.**

''சிவனடியார்களே, அரியும், அரனும், வேறனவர். அரியையும் அரனையும் மாலென்றும், அயனென்றும் கூறுவர். மால் மயங்கிச் செருக்குற்றான். ஏனைய தேவர்கள் சிவனை முதல்வனாக ஏற்றுச் சிவபூசை செய்து வந்தனர். ஆனால் செருக்குற்ற மால் சிவபூசை செய்யாது தானே, மேலோன் எனக் கருதினான். அதனால் மாலின் சக்கரம் கையுடன் விண்ணில் பறந்தது. அதனால் வேதனையுற்ற திருமால் சிவபெருமானை வணங்கினான்.

ஏழுஉலகத்தவர்களுக்கும் நல்வாழ்வு அருளுகின்ற சிவபெருமான் திருமாலின் வேண்டுகோளை ஏற்று சக்கராயுதத்தை வழங்கினான். அதனால் திருமாலின் செருக்கு அடங்கியது. சிவனடியார்களே, ஒரு அலுவலகத்தில் எல்லா வேலைகளையும் மேலதிகாரி செய்வதில்லை. அனுபவத்தையும் வயதையும் கணித்து உரியவர்களுக்குத் தனது பொறுப்பைப் பங்கிட்டுக் கொடுப்பார். கொடுத்தபோதும் அவரே அனைத்திற்கும் பொறுப்பானவராக இருப்பார். இதைப் பலர் உணர்வதில்லை. தாம் தாம் அவற்றிற்குப் பொறுப்பானவர். என்று நினைத்து தாம் நினைத்தபடி ஊழியரைப் பழி வாங்க நினைத்தால் மேலதிகாரி தலையிட்டுச் சம்பந்தப்பட்டவரைப் பதவி நீக்கம் செய்யலாம். அது போன்றது தான் இது. சிவன் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்பை வகுத்துள்ளார். என்பதை நாம் இதன் மூலம் அறிய முடிகிறது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**354. சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்**
**ஈக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணாமையால்**
**மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்**
**தக்கநற் சக்தியைத் தான்கூறு செய்ததே**

“சிவனடியார்களே,சிவபெருமானின் அருளால் கையோடு வானில் பறந்த சக்கரம் மீண்டும் திருமாலை வந்தடைந்தது. அச்சக்கரத்தைத் தாங்கும் சக்தியைத் தருமாறு பிரார்த்தித்தான். அதனால் இரங்கிய சிவபெருமான் திருமாலுக்கு அச்சக்கரத்தைத் தாங்கும் சக்தியைக் கொடுத்தார். அலுவலகத்தில் தனது பதவியைப்பறி கொடுத்த அதிகாரி மிகுந்த துக்கத்துடனும் அடக்கத்துடனும் மேலதிகாரியை இரந்து வேண்டியதின் பேரில் மேலதிகாரி இனிமேல் இவ்வாறு நடக்கக்கூடாதென்று கூறி மீண்டும் அவனுக்கு அவ்வேலையைக் கொடுத்தார். உலக நடைமுறை இப்படியானது. பொறுப்புக்களைக் கொடுத்தால் தான் தான் பொறுப்பாளர் என்றும்,தன்னைவிடப் பெரியவர்கள் யாரும் இல்லையென்றும் நினைத்து தலைக்கனத்துடன் வேலைவாங்குவிப்போரைத் திருத்தவே இவ்வாறான நடவடிக்கையைச் சிவன் மேற்கொண்டார். இது உலக மக்களை நல்வழிப்படுத்தவும், பொறுப்பை உணர்த்தவும் சிவனால் செய்யப்பட்டது” என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

355. **கூறது வாகக் குறித்துநற் சக்கரங்**

**கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்**

**கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்**

**கூறது செய்து தரித்தனன் கோலமே**

“சிவனடியார்களே, சக்கராயுதம் சிவனது ஆற்றலின் ஒரு பகுதி. அதைச் சிவனே படைத்துத் திருமாலுக்கு வழங்கினான். அத்துடன் தன்னைத் திருவருளின் ஆற்றலாகக் கூறு செய்து அருளினன். அத்துடன் அத்திருவருளையே தனது படைக்கலமாகவும், திருவுருவமாகவும் கொண்டிருக்கிறான். அதனால் சிவனை வணங்குவோர் திருவருளால் கவரப்பட்டவர்களாவர். அத்திருவருள் வணங்குவோரை வசப்படுத்தி நல்வழிப்படுத்தி மேலான சுவர்க்க இன்பத்தைத் தரும். திருவருள் என்பது அன்பு. சிவமும் அன்பு. இரண்டும் பாலில் நீர் கலந்துள்ளது போலக் கலந்துள்ளமையால் அவற்றைப் பிரித்துக் காணமுடியாது. சிவனடியார்கள் மட்டும் இரண்டையும் ஒன்றாகவும் வேறாகவும் காண்பர். நாம் சிவன் மீது அன்பு செலுத்தினால் அன்பே மயமான திருவருளை மிகவும் எளிதாக உணர்ந்து கைப்பற்றிக் கொள்ளலாம். பசுக்கள் பசுக்களோடு சேர்வது போலவும் யானைகள் யானைகளோடு சேர்வதைப்போலவும் அன்பு அன்புடன் சேரும். அதனால் அன்பான திருவருள் சிவனடியாரை வந்தடையும். அதற்காகத் தான் சிவபெருமான் அன்பான திருவருளால் தன்னை

வடிவமைத்துத்துள்ளார் என்று திருமூலர் கூறுகிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**356. தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்**
**தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானுஞ்**
**சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட**
**அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே.**

''சிவனடியார்களே, தக்கன் மிக்க செருக்குடன் புலை வேள்வி செய்தான். அவ்வேள்வியை அழித்தொழிக்க வாட்கை வீரரான வீரபத்திரர் சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றினார். அதனால் சிவபெருமானின் அடையாளங்கள் முழுவதையும் பெற்றிருந்தார். தக்கனது வேள்விக்குத் தலைமை வகித்த திருமால் வீரபத்திரரின் மீது சக்கராயுதத்தைச் செலுத்தினார். வீரபத்திரரின் முடியில் பிறைச் சந்திரன் தோன்றிய போதும் அதைக்கண்டும் திருமால் அஞ்சவில்லை. அதைக்கண்ட தாமோதரனாகிய வாட்கை வீரரின் வாயிலிருந்து வெளிப்பட்ட தெறுமொழியாகிய உங்கார அதட்டலால் சக்கராயுதம் செயலிழந்து விழுந்தது. ஆகையால் சிவனடியார்களே, பக்தர்கள் எல்லை மீறினாலும் சிவனால் தண்டிக்கப்படுவார். உறவினராக இருந்தாலும் சிவனை மதிக்காவிட்டால் அழிக்கப்படுவர். தக்கன் சிவனது மாமன். திருமால் படைத்தற்கடவுள். இவர்கள் இருவரும் செயலால் தாம்

பெரியவர்கள் என்று நினைத்துச் சிவனை மதிக்காது செயற்பட்டனர். மனிதர்கள் பலர் தாம்தாம் பெரியவர்களென்று நினைத்து மற்றவர்களை மதியாது வாழ்ந்தால் இறுதிக்காலத்தில் யாருடைய துணையுமின்றி அவதிப்படுவர். சிலசமயம் அழித்தொழிவர். மிகுந்த பாதிப்புக்குள்ளாவர். என்பதையே சிவன் இதன் மூலம் விளக்குகிறான். நாகநாதன் கல்வி அமைச்சின் செயலாளர். அதனால் அவர் ஊரவர்களுடன் திமிருடன் நடப்பார். யாரையும் மதிக்கமாட்டார். ஓய்வு பெறும் வரை அவருக்குக் கீழ்பணி புரிந்த ஊழியர்கள் அவரை மதித்து அவர் ஏவும் வேலைகளைச் செய்தனர். ஓய்வு பெற்றபின் அவரது தந்தை இறந்த போது யாரும் வரவில்லை. அவர் அதிகாரியாக இருந்த காலத்தில் அலுவலகத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் பலர் அவர்களது வீட்டுக்கு வந்து வேலை செய்வார். அவர் ஓய்வு பெற்ற பின் சிற்றூழியர் கூட விட்டுக்கு வருவதில்லை.இது தான் உலகம் என்று புரியவைக்கவே சிவன் அத்திருவிளையாடலை நிகழ்த்தினார்.'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

## எலும்பும் கபாலமும்

357. **எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த**
**வலம்பன் மணிமுடி வானவ ராதி**
**எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்**
**எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே**

“சிவனடியார்களே, சிவபெருமான் ஒழி பேரொலி ததும்பும் மணிமுடியை தாங்கியவன். அவனே உலகின் முதல்வன். அவன் அயன் அரி என்றும் இருவரினதும் மண்டையோட்டையும் எலும்பையும் கோர்த்து மாலையாக அணிந்தவன். அதன் அர்த்தம் தானே அழிவில்லாத முதல்வன் என்பதாகும். ஏனைய மண்ணவர், விண்ணவர் யாவரும் பிறந்திறக்கச் சிவன் மட்டுமே பிறவாத அழியாத நிலைபேறுடையவன் என்பததை அது காட்டுகிறது. சிவபெருமான் அவர்களது எலும்புகளையும் மண்டை ஓடுகளையும் அணியாதிருந்தால் அவை இத்து மண்ணோடு மண்ணாக அழிந்திருக்கும். மாயாகாரியப் பொருட்களும் சிவபெருமானை அடைந்தால் அவை அழியாது. சிவபெருமானின் தாங்குதலில் நிற்கும். அதனால் தான் சைவசமயம் சிவனை அடைவோர் சிவனின் பாதாரவிந்தங்களில் இன்புற்று சதா காலம் வாழலாம் என்று கூறுகிறது. அதனால் சிவனடியார்களே சிவனை வணங்குங்கள். ஐந்தெழுத்தை ஓதுங்கள். ஊயிர்கள் மீது அன்பு வையுங்கள். சிவனை

வணங்குங்கள். ஐந்தெழுத்தை ஓதுங்கள். ஊயிர்கள் மீது அன்பு வையுங்கள் சிவனை அடையலாம்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்.

## அடிமுடி தேடல்

**358. பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்**

**பிரமன்மால் தங்கள்தம் பேதமை யாலே**

**பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க**

**அரனடி தேடி அரற்றுகின் றாரே.**

''சிவனடியார்களே தேவர்களான பிரமனும்திருமாலும் தவப்பேற்றால் முறையே படைத்தல் காத்தல் ஆகிய தொழில்களைச் சிவபெருமானின் ஆணைப் படி செய்கின்றனர். ஆனால் அவர்கள் இருவரும் அத் தொழில்களைத் தமது வல்லமையினாலேயே செய்வதாக இருவரும் இறுமாந்தனர். அந்தத் திமிரினால் இருவரும் தாம் தாம் பெரியவர்கள் என வாதிட்டனர். வாதம் போரானது. அப்போது சிவபெருமான் ஓர் ஒளிப் பிளம்பாகி, மண்ணிற்குக் கீழும் விண்ணிற்கு மேலும் நின்றனன். சிவனின் கட்டளைப்படி இருவரும் நீண்டு பரந்து எல்லையில்லாது நிற்கும் அந்த ஒளிப்பிளம்பின் அடி முடி தேடிப்புறப்பட்டனர். சிவனடியார்களே சிவனே உலகின் முதல்வன் அவன் அணுவில் கூட இருக்கிறான். அந்த அணுக்கூட அவன் அசையா விட்டால் அசையாது என்று தெரிந்தும் மாலும் அயனும் தாம் தாம்

பெரியவர்கள் என்று நினைத்துச் சண்டையிட்டது புல்லறிவினலாகும் நாம் ஒரு செயலைச் செய்யும் போது இறைவனை வணங்கிஅச் செயல் நல்ல முறையில் முடிவுற வேண்டும் என்று பிரார்த்தித்து விட்டே செய்தல் வேண்டும் அப்படிச் செய்யும் போது இறைவனின் கிருபை அச் செயல் மீதுபடிந்து அச் செயலை நல்ல முறையில்முடிக்கிறது செயலைச் தான் செய்யாது செய்விப்பவன் தான் தலைவன், முதல்வன் என உணர வேண்டும். சிவனிடம் தவம் செய்து பொறுப்புகளைப் பெற்றவர்கள் பின்பு சிவனை மறந்து தாம் தாம் பெரியவர்கள் என்று சண்டையிடுவது கேலிக்குரியது. மனிதர்களும் இப்போ அதைத்தான் செய்கின்றனர். ஒவ்வொருவருக்கும் மேலே ஒருஅதிகாரி இருந்து செயலைக் காண்காணிக்கிறான் என்ற எண்ணம் எல்லோர்க்கும் இருக்க வேண்டும். என்பதை சிவன் கதை மூலம் உணர்த்தியுள்ளான். ஒவாருவருக்கும் மேலானவன் ஒருவன் இருப்பது போல எல்லோர்க்கும் மேலானவன் சிவன் என்பதை உணராதவர்கள். பேரும் துன்பம் அடைவான். என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**359. அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்**
**படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி**
**அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல**
**முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே.**

“சிவனடியார்களே, ஒளிப்பிளம்பின் அடியையும் முடியையும் தேடுவதற்காக மாலும் அயனும் பன்றியாகவும் அன்னப்பறவையாகவும் உருவெடுத்தனர். கருமையான பன்றி மயக்கும் மாயையாகும். வெண்மையான அன்னம் அறியாமையின் வடிவமாகும். பன்றியின் உருவெடுத்தமால் பூமியைத்தோண்டி அடியைத் தேடத்தொடங்கினான். அன்னமாக மாறிய அயன் முடியைத் தேடி ஆகாயத்தில் பறந்தான். பலநாள்கள் சென்றும் அவர்களால் அடியையும் முடியையும் தேடிக்கண்டுபிடிக்க முடியாமையால் மிகுந்த களைப்புடன் வாடிச்சோர்ந்து நிலவுலகிற்கு வந்தனர். திருமால் அடியைக் காணமுடியவில்லை என்று உண்மையைச் சொன்னான். ஆனால் அயன் முடியைக் கண்டேன் என்று பொய்யுரைத்தான். சிவனடியார்களே முன்பு விநாயகருக்கும் முருகனுக்கும் மாம்பழவிடயத்தில் போட்டியுண்டானபோது உலகைவலம் வரும் பிள்ளைக்கே மாம்பழம் என்று சிவன் சொல்ல முருகன் மயில் வாகனத்தில் ஏறிப்பறந்தான். விநாயகர் தாயும் தந்தையும் தான் உலகம் என்று சொல்லி அவர்களை வலம் வந்து மாங்கனியைப் பெற்றுக்கொண்டான். அது போல

யாராவது ஒருவர் சிவனை மனதார நினைத்திருந்தால் தாம் தேடியதைக்கண்டு பிடித்திருப்பார். மயக்கும் மாயையும் அழிக்கும் அறியாமையையும் வாகனமாகக் கொண்டமையால் அவர்களால் அடியையும் முடியையும் கண்டு கொள்ளமுடியவில்லை. அதனால் சிவனடியார்களே, உங்களுக்கொரு துன்பம் வந்தால் ஐந்தெழுத்தை ஓதியவாறு சிவனைச் சரணடையுங்கள். நீங்கள் நினைத்தது நடக்கும் என்று சிவபெருமான் இக்கதை மூலம் விளக்குகிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**360. ஆமே மூலகுற நின்றஎம் அண்ணலுந்**

**தாமே மூலகில் தழற்பிழம் பாய்நிற்கும்**

**வானே மூலகுறும் மாமணி கண்டனை**

**நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே**

''சிவனடியார்களே, ஏழு உலகிற்கும் தெரியும்படியாக ஒளிப்பிழம்பாகத் தோன்றிய சிவபெருமான் இயல்பாகவே உலகே உருவாக நிற்பவன். அவன் திருநீலகண்டன் எனப் போற்றப்படுபவன். அவன் மீது பேரன்பு கொண்டால் அன்பு கொண்டவர்களை ஆட்கொண்டருளுவான். அதனால் அவனருளாலே அவனது திருவடிகளை அடையாளம் என்று திருமூலர் கூறுகிறார். அத்துடன் சிவனது மலரடிகளைக் கண்டதாகவும் கூறுகிறார். எனக்குத்தெரிந்த ஒருவர் சிவன்மீது பேரன்பு கொண்டவர். அவருடன் தொடர்பு ஏற்பட்டபின் என்னால்

அவரை விட்டுப்பிரிய முடியவில்லை. அதனால் அவருடன் தங்கியிருந்தேன். ஒருநாள் கொடிய விடமுடைய நாகபாம்பொன்று அவரது மகளைத் தீண்டிவிட்டது. அவருக்கு ஒரே ஒரு மகள். அதுவும் திருமணமாகிப் பல ஆண்டுகள் கழித்துச் சிவனின் அருளால் பிறந்தவள். அவர் ஆடிப்போனார். அவரால் பேசமுடியவில்லை. உணரமுடியவில்லை. மரக்கட்டைபோல அமர்ந்திருந்தார். உறவினர்கள் அவரது மகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். வைத்தியர்கள் அவள் பிழைக்கமாட்டாள் என்றனர். தாயும் உறவினர்களும் கதறி அழுதனர். அப்போது ஒரு சிவனடியார் வந்து நாகம் கடித்த இடத்தில் வாயை வைத்து உறிஞ்சித்துப்பி விட்டு திருநீறிட்டார். பின் எதுவும் பேசாமற் சென்று விட்டார். அப்போது எனது நண்பர் அங்கு வந்து,"சிவன் இங்கு வந்தாரா?" என்று கேட்டார். கூடிநின்றவர்கள் அவருக்குப் மகளை இழந்தமையால் சித்தம் கலங்கி விட்டது என்றனர். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த அவரது மகள்,"அப்பா, சிவன் வந்து எனது அருளால் என்னை அறிந்த பக்தர்களுக்குத் துன்பம் வரநான் விடமாட்டேன் என்று கூறித்திருநீறு தந்துவிட்டுச் சென்றார்" என்றாள். கூட இருந்தவர்கள் அதிசயித்தனர். ஆகையால் அடியார்களே, சிவனை நம்புங்கள். அவன் மீது பேரன்புவையுங்கள். அவன் தன்னருளால் அன்பு வைப்போரை ஆட்கொள்வான்.

அவர்களுக்குத் துன்பம் வரவிடமாட்டார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**361. ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்**
**சேணாய்வா னோங்கித் திருவுரு வாய்அண்டத்**
**தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்து**
**ஆண்முழு தண்டமு மாகிநின் றானே.**

''சிவனடியார்களே, கலப்பால் மாயாகாரிய உடம்பாய், வினைக்கேற்ப அவ்வுடம்பில் தங்கியிருக்கும் உயிராய்,அவ்வுயிரின் உணர்வாய் நீக்கமற நின்று காத்தருள்பவன் சிவன். தீயாக இருப்பவனும் அவனே, அறியாமையால் தாம்தாம் பெரியவர் என அரனும் அரியும் சண்டையிட்டபோது தீப்பிழம்பாக அண்டங்கள் முழுவதிலும் நின்றவன் அவன். எல்லா அண்டங்களையும் தாங்குபவன் அவன். சந்திர சூரியர்களைக் கடந்து நிற்பவனும் அவனே. உதவும் தன்மையோடு அனைத்து அண்டங்களையும் ஆள்பவனும் அவனே. அதனால் சகல அண்டங்களில் வாழும் உயிரினங்களும் அவன் மீது மட்டற்ற பேரன்பு வைத்தால் அவர்கள் சிவனின் அன்புக்குப் பாத்திரமாவர்கள். அவர்களை எதிரிகளால் வருத்த முடியாது. எனது நண்பரான கதிரேசன் தனது மகளைப் பாம்பு தீண்டியதும் மரம் போலானவர் என்று எல்லோரும் சொன்னார்கள். அவர் அந்நிலையை விட்டதும் சொன்னார்,''நான் சிவனிடம் சென்றிருந்தேன்.

என்னைக் கண்டதும் அவர் சொன்னார்,“மயாகாரிய உடம்பில் வினைக்கேற்றவாறு உயிர்கள் நிலை பெறுகின்றன. அவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப இன்ப துன்பங்கள் வந்துசேரும். ஆனால் அவை நிலைப்பதும் நிலைக்காது விடுவதும் அவர்கள் என்மீது கொள்ளும் அன்பைப் பொறுத்தது. உன்னைப்போல உனது மகளும் என்மீது அன்பு கொண்டவள். வினைப்படி வந்த துன்பத்தை நான் நீக்குவேன்” என்றவர். அதனால் அடியார்களே, துன்பங்களும் இன்பங்களும் செய்யும் பாவ புண்ணியங்களுக்கேற்ப வரும். அதை நீக்க வேண்டுமானால் எல்லாம்வல்ல பரம்பொருள் மீது காதல் கொள்ளல் வேண்டும். காதல் கொண்டால் வருத்தும் பெருந்துன்பம் பஞ்சாகப் பறந்து விடும். இன்பம் மலையாக அசையாது இருக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**362. நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்**
**அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது**
**சென்றார் இருவர் திருமுடி மேற்செல**
**நன்றாங் கழலடி நாடவொண் ணாதே**

“சிவனடியார்களே, சிவனின் மீது பேரன்பு கொண்டோர் அச்சிவனது புகழைச் சொல்லி முடிக்கமாட்டார்கள். அவர்கள் சொல்லச்சொல்ல அது

நீண்டு கொண்டே செல்லும். அது போலத்தான் தீப் பிழம்பாக நின்ற சிவனது அடிமுடியை அரனும் அரியும் தேடியபோது அது நீண்டு சென்றது. பெருமுயற்சியுடன் தேடியும் அதைக் காணமுடியவில்லை. அதற்குக்காரணம் அறியாமையாகும். நான் தான் பெரியவன். நான்தான் அறிவாளி, நான்தான் பணக்காரன் என்று ஆணவம் கொண்டவர்கள் எக்காரியத்திலும் தோல்வியைத் தான் தழுவுவர். கதிரேசனது இனத்தவர் குமாரசாமி. கதிரேசனது மகள் அபிராமிக்கு நாகம் திண்டியதைக் கேள்விப்பட்டு ஆடம்பரமான மோட்டார் வண்டியில் வந்து கதிரேசன் சிலைபோல அமர்ந்திருப்பதைப் பார்த்துக் கோபம்கொண்டு,"இவன் குடும்பத்திற்கு உதவாதவன். பெற்றபிள்ளை சாகக்கிடக்கும் போது சிலையாக இருந்து சிவனைக் கும்பிடுகிறான். சிவனாவது வருவதாவது" என்று கூறி அபிராமியைத் தனது மோட்டார் வண்டியில் ஏற்றினார். அது இயங்கவில்லை. அதனால் கோபம் கொண்ட அவர்,"இவனது இவன் புத்தம் புதிய காரை இயங்க முடியாது செய்துள்ளார். அதைச் சிவன் இயங்கச் செய்யட்டும் பார்ப்போம்" என்றார். எவ்வளவு முயன்றும் அது இயங்கவில்லை. அருகில் கூலிக்கு வாகனமோட்டும் தனது பழைய கார்தான் உதவியது. மறுநாள் குமரசாமியைச் சந்தித்த கதிரேசன் சொன்னார்,"குமாரு, உலகம் அருளினாலும் அன்பினாலும் தான் இயங்குகிறது. உனது விலை உயர்ந்த வாகனத்தால் அவசரத்திற்கு உதவமுடியவில்லை.

பெறுமதி குறைந்த தனபாலனின் வாகனம் தான் உதவியது. ஆணவமும் அகந்தையும் எல்லாவற்றையும் அழித்துவிடும். காசுபணம் பொருள்யாவும் உயிரைக்காப்பாற்றாது என்று தெரிந்தமையால் தான் நான் எல்லாவற்றையும் மறந்து சிவனைத் தஞ்சமடைந்தேன்.''என்றார். சமீபத்தில் குமார சாமியின் மகள் பிரசவத்தின்போது மரணமானாள். அதைத் தடுக்க அவரால் முடியவில்லையே. அதனால் சிவனை நம்புங்கள். அவன்மீது பேரன்பு கொள்ளுங்கள். துன்பங்கள் வராது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**363. சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்**

**மூவடி தாவென் றானும் முனிவரும்**

**பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்**

**தவாடி யிட்டுத் தலைப்பெய்து மாறே.**

''சிவனடியார்களே, எங்கும் நிறைந்து, நீக்கமின்றி விளங்கும் சிவபெருமானது திருவடியை ஏத்துகின்ற வானவர்கூட்டத்தினரும், மாவலி மன்னனிடம் குறுமுனியாய்ச் சென்று மூவுலகையும் அளந்த திருமாலும், முனிவர்களும், நான்முகனும் தேடியலைந்தும் முடிவுகாணாது துன்பப்பட்டனர். ஆனால் அவர் மீது அன்பு வைத்த மார்க்கண்டேயனைக் கவர யமன் வந்த போது அவனைக் காலால் உதைத்தவர் சிவபெருமான், ஏனென்றால் வானவரும் மாலும், அரியும், ஆணவத்துடன்

செயற்பட்டனர். மார்க்கண்டேயன் அன்பை வைத்துச் செயற்பட்டான். அன்பு ஆயுதங்களை விட வலிமையானது. கதிரேசன் சொல்வார்,“சிவன்மீது அன்பு வையுங்கள். அந்த அன்பில் சிவன் மயங்கி விடுவான். அதன்பின் அவன் எதையும் சிந்திக்காது வரம் தருவான். அசுரர்கள் பேரன்பு வைத்தமையால் அரியபலவரங்களைப் பெற்றனர். பின் ஆணவமுனைப்புடன் செயலாற்றி அழிந்தனர். எனவே சிவனடியார்களே, சிவனிடம் அன்பு வைப்போர் தீயவற்றைச் செய்யக் கூடாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**364. தானக் கமலத் திருந்த சதுமுகன்**

**தானக் கருங்கட லூழித் தலைவனும்**

**ஊனத்தின் உள்ளே உயிர்போல உணர்கின்ற**

**தானப் பெரும்பொருள் தன்மைய தாமே**

“சிவனடியார்களே,நான்முகனுக்கும், திருமாலுக்கும், உருத்திரனுக்கும் அவரவர் தம் உடம்பினுள் உயிர் உறைவது போல அவரவர் உயிருக்குள் உயிராய் உறைபவன் பெரும் பொருளான சிவபெருமான். அவர்கள் சிவன் ஆட்டுவித்தவண்ணம் ஆடும் உயிரினத்தவராவர் என்று புரியாது ஆணவ மிகுதியால் நாமே தலைவன் என்று சொல்லி இறுமாப்படைந்ததால் தான் துன்பமுற்றனர். அதனால் தான் அவர்களால் அடிமுடியைக்காண முடியவில்லை. அதனால் தான்

அசுரர்களால் கொடுமைப்படுத்தப்பட்டனர். இது சாதாரண மனிதருக்கும் பொருந்தும். குமாரசாமி தன்னுடைய பணத்தால் எதையும் செய்யலாமென்று நினைத்து தனது மகளைப் பிரசவத்திற்காக வெளி நாட்டிற்கு அனுப்பினர். கூடவே இரு வைத்தியர்களையும் அனுப்பினார். புறப்படும் போதே பிரசவவலி ஏற்பட்டு விட்டது. குழந்தையையும் தாயையும் உடனே கவனித்திருந்தால் உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாமென்று கூடச் சென்ற வைத்தியர்கள் கூறினர். யுத்த காலத்தில் குழந்தைகள் இங்கு பிறக்கவில்லையா..? பிறந்தவை யாவும் இறந்தனவா…? இல்லையே. இங்கே எனக்கு முன்னால் இருக்கும் குழந்தைகள் யாவும் இங்கே தானே பிறந்தன. பணம் தான் குமாரசாமிக்கு பல விடயங்களில் எமனானது. சிவனை நம்பிய கதிரேசனின் மகள் விசத்தால் பாதிக்கப்படாமைக்குக் காரணம் அவர்கள் சிவன் மீது கொண்ட அளவற்றபாசம். அது நம்பிக்கையாகிக் காப்பாற்றியது. பணம் பொருள் செல்வாக்கு யாவும் கடவுளின் மீதுவைக்கும் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. கடவுளின் அனுக்கிரகம் இருந்தால் தான் அவை பயனைக் கொடுக்கும். அதனால் சிவனை வணங்குங்கள். சிவனருள் கிடைத்தால் எல்லாம் கிடைக்கும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

365. **ஆலிங்கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்**

**மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்டு**

**ஆலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்**

**கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே**

“சிவனடியார்களே, சிவபெருமான் உயிருள்ள உயிரற்ற பொருட்கள் எல்லாவற்றிலும் இயற்கை உண்மைப் புணர்ப்பாய் வேறற்று நிறைந்து நிற்கின்றான். இதைச் சுத்தாத்விதம் என்பர். இந்நிலை ஆலிங்கனம் என்றும் கூறப்படும். சிவன், ஆருயிர்கள் தனது தன்திருவடியை அடைதற்பொருட்டு செந்நெறியாகிய மெய்நெறியை அமைத்தருளியுள்ளான். அந் நெறியை திருவருளால் அறிந்து பின்பற்றுவோர் சிவபெருமானின் அன்புக்குப் பாத்திரமாவர். சிவபெருமானின் திருவடியை அடையச் சிறந்த செந்தமிழ் அடையாளமாகிய “சிவாயநம” என்னும் திருவைத்தெழுத்தை எந்நேரமும் ஓதுங்கள்”.

“சிவன் எளிமையானவன். இலகுவில் அகப்படக்கூடியவன். அதனால் நான் எவ்வேளையிலும் “சிவாயநம” என்று மனதுள் நினைத்தபடி வேலைகளைச் செய்வேன். சென்ற வருடம் பெரும்மழைபெய்து ஊரை அழித்தது. தோட்டங்கள் செடிகொடிகள் மரங்கள் பலவும் அழிந்தன. ஆனால் எனது நிலத்தில் நின்ற எந்த மரமும் பாறி விழவில்லை. ஏனென்றால் அவற்றை நடும்போது

நீர்ப்பாய்ச்சும்போதும் நான் "சிவாயநம" என்று சொல்லிக்கொண்டு தான் செய்தேன். அதனால் சிவனருள் எனது பூமியெங்கும் பரவியுள்ளது" என்பார் கதிரேசன் அதனால் சிவனை வசப்படுத்தச்'சிவாயநம' என்று சொல்லுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**366. வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்**

**ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்**

**ஆளகொடுத் தின்பங் கொடுத்துக்கோ ளாகத்**

**தாள்கொடுத் தானடி சாரகி லாரே**

"சிவனடியார்களே அன்போடு வழிபடுவோர் கேட்பதையெல்லாம் கொடுக்கும் சிவபெருமானிடம் வானவர் அசுரரோடு போரிடச் சிறந்த ஆயுதம் வாள் என்று நினைத்துக்கேட்டனர். சிவபெருமான் கேட்டதைக் கொடுத்தார். ஆனால் வானவர் சிவபெருமானின் பெருமைகளை உணரவில்லை. தம்மைச் சிவனின் அடிமையென நினைத்து வழிபடுவோருக்குச் சிவபெருமான் தனது திருவடிகளையே கொடுப்பார் என்று உணராமையால் தான் வானவர் பெருந்துன்பப்பட்டனர். சிவனை நம்பி, அவன் மீது அன்பு கொள்பவர்களுக்கு சிவனது அருள் என்றும் துணை செய்யும். வாள் என்பது அறிவு என்று பொருள் கொள்வாரும் உளர். சிவனை நினையாத நாளெல்லாம் வீணாண நாட்களே. குமாரசாமி ஆடம்பரமான செலவுகளைச் செய்வாரே தவிர

ஏழைகளுக்கு உதவமாட்டார். தனது பேரப்பிள்ளையின் பிறந்ததினத்திற்கு பல இலட்சரூபா செலவு செய்து பிரமுகர்களை அழைத்து விருந்து வைத்தார். அவரது வீட்டில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் கடுமையாக உழைத்தபோதும் சம்பளம் கொடுக்கவில்லை. ஏழைகளுக்கு உணவு கொடுக்கப்படவில்லை. ஒருநாள் அவர் விபத்துக்குள்ளான போது வீதியில் பல மணிநேரமாக கவனிப்பின்றி இருந்தார். அவரது வீட்டு வேலைக்காரன் சில நாட்களின் பின் விபத்துக்குள்ளான போது ஊரவர் உடனே செயற்பட்டு உதவிகள் செய்தனர். அது குமாரசாமிக்குப் பெருங்கவலையைக் கொடுத்ததால் அவர் விபத்துக்குள்ளான வேலாயுதத்தை அழைத்துக் கேட்டார். "வேலாயுதம் நான் பெரும்பணக்காரன். நீ பரம ஏழை. ஊரவர் பணக்காரனான என்னைக் கவனிக்காது உன்னைத் தான் கவனித்தனர். இது ஏன்?"

"ஐயா, சிவனை அன்போடு வழிபடுவோர்க்குச் சுற்றத்தினர் அதிகம். அவர்கள் சிவனருளால் உதவி செய்வர். சிவன் சக்தி மிக்க வாளைத் தேவர்களுக்குக் கொடுத்தும் அது பயன்படாமைக்குக் காரணம் சிவன்மீது அன்பும் நம்பிக்கையும் கொள்ளாமையே. சிவன் உங்களுக்குப் பணத்தைக் கொடுத்துள்ளான். ஆனால் அருளைக் கொடுக்கவில்லை" என்றான். அதனால் அடியார்களே, சிவனை நம்புங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**367. ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு**

**வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்**

**வீழித் தலைநீர் விதித்தது தாவென**

**ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே.**

“சிவனடியார்களே, பலகாலம் மெயன்போடு வணங்கிய ஒரு சிவனடியானுக்குச் சிவபெருமான் நான்கு திருமுகங்களுடன் தோன்றி அவனுக்குப் படைப்புத் தொழிலை வணங்கினார். அவன் ஆலம் விழுதுகள் போலக் காணப்படும் திருச்சடையின் கண் விளங்கும் திருவருளாகிய வான் புனலைத் தந்தருள வேண்டுமென்று கேட்டான். எல்லா ஒளிகளையும் வென்று பேரொளியாப் பேருழி கதிரவனாய் விளங்கும் சிவபெருமான் அவ்வாறே அருள்புரிந்தனன்.”

“அடியார்களே, சிவனை அன்பால் மகிழ்வித்தால் அவன் நாம் கேட்டபவற்றை அல்ல நினைப்பவற்றையே கொடுத்து விடுவான் என்று அறிந்த அசுரர்கள் சிவபெருமான் மீது மெய்யான அன்பு கொண்டு அளப்பரிய பலவரங்களைப் பெற்றனர். குமாரசாமி கதிரேசனுக்கு அடிக்கடி சொல்வார்,“உங்கள் சிவபெருமானுக்கு அசுரர்களின் குணம் தெரியாது வரங்களைக் கொடுத்து விட்டுப்பின் அவரே துன்பப்பட்டவர். அப்படியான சிவபெருமானை வணங்குவதால் பயன் இல்லை” அதற்குக் கதிரேசன் சொல்வார்,“அன்பு கொண்டவனின்

இயல்பை அறிந்தும் அறியாதவர்போல நடப்பவர் சிவன். தீமைகளைச் செய்வோர். அத்தீமைகளாளேயே அழிவர்என்பதை உலகக்கோருக்கு விளக்கவே சிவன் அப்படி நடக்கிறார். அதை அறியாமையால் அறிய முடியாதவரே துன்பப்படுகின்றனர். சிவனின் அருளைக் கொடை என்று நினைப்பவர்கள் என்றும் இன்பமாக இருப்பர். மாறாகத் தனது திறமை என்று நினைப்பவர்கள் தான் என்றும் துன்பப்படுவார்'' என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# படைப்பு

**368. ஆதியோ டந்தம் இலாத பராபரம்**

**போதம தாகப் புணரும் பராபரை**

**சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்**

**தீதில் பரையதன் பால்திகழ் நாதமே**

''சிவனடியார்களே, தொடக்கமும் முடிவும், பிறப்பும் இறப்பும், ஆதியும் அந்தமும் இல்லாத முழுமுதற்கடவுள் சிவபெருமானுக்குத் திருவுடலாய்ப் புணரும் பேரறிவுப் பொருள் பராபரை எனப்படும். பராபரை என்பது பராசக்தியையே. அதுவே வனப்பாற்றல் பேரொளியாய்த் திகழும். அப்பேரொளியிலிருந்து சிவம் தோன்றும். அச்சிவம் தோன்றுவதற்கு நிலைக்களமாக முதற்கண் ஓசையாகிய நாதம் தோன்றும்''

“சிவனடியார்களே, இவ்வாறு சிவத்தின் தோற்றம் பற்றித் திருமந்திரம் கூறுகிறது. சிவம் தோன்றுவதற்கு முன் நாதம் தோன்றுவது சிவம் நாதமயமானது என்று உணர்த்துவதற்காகவே, ஊழிக்காலம் முடிந்து உலகம் தோன்றும் விதம் பற்றி இவ்வாறு திருமூலர் கூறுகிறார். இது பற்றிச் சாதாரணமாக விளங்கிக்கொள்ள முடியாது. அவன் அருள்தான் அதை விளக்க வேண்டும். அதைத்தான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் “அவனருளாலே அவன்தாழ்வணங்கி” என்று சொல்கிறார். என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**369. நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்**

**தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே**

**பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்**

**வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே**

“சிவனடியார்களே, நாதத்தினின்று பேரொளியாகிய விந்து தோன்றும். ஓசை செவிக்குப் புலனாவது போல ஒளி கண்ணுக்குப் புலனாகும். அத்துடன் வரிவடிவமானது. நாத வித்துக்களாகிய இரு மெய்களில் இருந்து சிவம் சிவை என்னும் மெய்கள் தோன்றும். சிவனில் இருந்து பேரறிவும், சிவையிலிருந்து சக்தியாகிய பேராற்றலும் வெளிப்படும். பேரன்பு எனப்படும் இச்சை, என்றும் ஒன்றுபோல நிற்பதெனக் கூறப்படுகிறது. அவ் இச்சை விந்துவில் இருந்தும் தோன்றும்”.

“சிவனடியார்களே இப்படிப் படைப்புப்பற்றித் திருமூலர் கூறுகிறார். எல்லாவற்றிற்கும் அடிப்படையானது நாதம் என்னும் பேரொலி. பேரொலியானது பேரொளியாகி அதிலிருந்து சிவனும் சிவை என்றழைக்கப்படும். சக்தியும் தோன்றின என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**370. இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்**
**கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்**
**வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்**
**சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே**

“சிவனடியார்களே, உலகு, உடல் உண் பொருளாகிய காரியம் தோன்றுவதற்கு இடமெனப்படும் இல்லாயுள்ளது மாயை. உள்ளதாகிய அம்மாயை சக்தியால் காரியப்படும். அதனால் அம் மாயையினைச் சத்தியிடந்தனில் உண்டாகி என்றனர். சக்தியும் சிவனும் மணியும் ஒளியும் போலக் கலத்துள் இருத்திடும். கல், மணி அம்மாயையினை இத்தகைய உறுதிப் பொருள்களாகச் சக்தியின் இடமாக நின்று ஆக்கி அருளிய அப்பெரும்பொருள் புகழ்ச்சி மொழிகளுக்கு எட்டாத தொலைவில் உள்ளதாகும்”.

“அடியார்களே, மாயை தான் உலகு உடல் உண்பொருட்கள் தோன்றுவதற்கு இடமெனப்படும்

இல்லாயுள்ளது. ஊள்ளதாகிய அம்மாயை சக்தியால் காரியப்படும். அதனால் அம் மாயையினைச் சத்தியிடந்தனில் உண்டாகி என்றனர். சக்தியும் சிவனும் மணியும் ஒளியும் போலக் கலந்துள் இருத்திடும். அம்மாயையினை இத்தகைய உறுதிப் பொருள்களாகச் சக்தியின் இடமாக நின்று ஆக்கி அருளிய அப்பெரும்பொருள் புகழ்ச்சி மொழிகளுக்கு எட்டாத தொலைவில் உள்ளதாகும்”.

“அடியார்களே, மாயை தான் உலகு உடல் உண்பொருட்கள் தோன்றுவதற்குக் காரணமானது. அது சக்தியில் இருந்து தோன்றியது. சிவனும் சக்தியும் மணியும் ஒளியும் போலப் பிரிவற்று இருப்பதால் அதைச் சக்தியிடத்தில் புகழ்ச்சிக்கு மயங்காத சிவனே தோற்றுவித்தார். மாயை மனங்களை மயக்கி அறிவை இழக்கச் செய்து ஆசையை ஊட்டித் தன்போக்கில் வைத்திருக்கும். அதைச் சிவன் தோற்றுவித்தாலும் அதனால் பங்கப்படாதவராகவே சிவன் இருக்கிறார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**371. தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்**
**ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்**
**பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்குஞ்**
**சார்வத்துச் சத்திஓர் சாத்துமா னாமே**

“சிவனடியார்களே, படைப்புப்பற்றித் திருமூலர் மிகவும் விளக்கமாகக் கூறுகிறார். சைவமக்கள் வழிபடும் சிவனும் சக்தியும் எவ்வாறு தோன்றியதென யாருக்கும் தெரியாது. சிவனின் தூதுவனாக மண் உலகிற்கு வந்த திருமூலர் படைப்புப்பற்றி எமக்குக் கூறுகிறார். சிவன் தொலைவில் தோன்றும் சுடர்ச் சோதியாக உள்ளான். அன்பினால் அவனைத் தொடர்ந்து ஒரு சக்தி தோன்றியது. அச்சக்தியின் ஆர்வத்தால் நாதம் தோன்றியது. அதன்பின் விந்து தோன்றியது. அதன்பின் அறிவும் ஆற்றலுமாகிய சிவம் சக்தி என்றும் இரண்டும் ஒப்பத்தோன்றியது. அது அருளோன் மெய்யான சதாசிவம் எனப்படும். பெருமைமிக்க அச் சதாசிவமெய் அதன்பின் தோற்றம் பெற்ற ஐம்பூதங்களுக்கும் சார்பிடமாய் நிற்பது சக்தி என்னும் பேரறிவுப் பெரும் பொருள். அச்சக்தியினுடைய பெரும் பொருள் ஒப்பில்லாத சிவமாகும். அதனால் அதனைச் சாத்துமான் என்பர். திருமூலர் சிவத்தைப் பற்றியும் அதன் பின் சக்தியைப் பற்றியும் மாயைப்பற்றியும் ஐம்பூதங்களின் தோற்றம் பற்றியும் இப்பாடலில் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**372. மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்**
**கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்**
**தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்**
**பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே**

“சிவனடியார்களே, தூவாமாயைக்கு மோகினி என்றொரு பெயருண்டு. தூவாமாயையில் இருந்து கலை தோன்றும் அக்கலையில் இருந்து மூலப்பகுதி தோன்றும். இந்த மூலப்பகுதிக்கு மான் என்று பெயர். பின் மூலப்பகுதியில் தோன்றும் இறுப்பு மெய்யாகிய புத்தி தத்துவத்திற்கும் மான் என்று பெயர். இம்மானிலிருந்து எழுச்சியாகிய ஆங்காரம் தோன்றும். இவ் எழுச்சி மூன்று வகைப்படும். அவை உணர்வு, உழைப்பு, உலகம் எனப்படும். உலக எழுச்சியில் இருந்து பூத முதலாகிய நண்மை ஐந்தும் தோன்றும். நண்மையில் இருந்து வான், காற்று, தீ, நீர், நிலம் போன்றன தோன்றும். இவ்வாறு திருமூலர் கூறுகிறார். நமக்கு இறைவன் சிவன். திருமந்திரத்தை எழுதுவதற்காகச் சிவன் தான் திருமூலரைப் பூமிக்கு அனுப்பியதாகச் சைவசமயம் கூறுகிறது. திருமந்திரத்தில் சைவ சித்தாந்தம் முழுவதும் கூறப்படுகிறது. அவை சிவனால் கூறுப்பட்டவை என்றே கொள்ளல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**373. புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி**
**புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்**
**புவனம் படைப்பானும் பூமிசை யானாய்ப்**
**புவனம் படைப்பானப் புண்ணியன் தானே**

“சிவனடியார்களே, ஒருவனாகவும் ஒருத்தியாகவும் வீற்றிருக்கின்ற சிவனும் உமாதேவியாருமே உலகம்

முழுவதையும் படைப்பவர்களாவர். இவர்களுக்கு சதாசிவன், மாஈசன், உருத்திரன், மால், அயன் என ஐவர் புத்திரராவர். படைத்தல் தொழிலைச் செய்கின்ற அயன் சிவபெருமானின் திருவாணையைப் பெற்றவன். அதனால் அயனுடன் சிவபெருமான் கலந்திருப்பதால் அவனையும் சிவபெருமான் என்பர் என்று திருமூலர் கூறுகிறார்''.

''சிவனடியார்களே, ஆணும் பெண்ணும் சமமானவர்கள். அவர்களில் எந்த வேறுபாடும் இல்லாததால் அவர்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் இல்லை என்பதையே சிவபெருமான் ஒருவன் ஒருத்தியாக இருந்து புவனத்தைப் படைப்பதாகத் திருமூலர் கூறுகிறார். இதை அறியாதவர்கள் தான் ஆண் உயர்வென்றும் பெண் தாழ்வென்றும் நினைக்கின்றனர். எமது கடவுளே உயர்வு தாழ்வு பார்க்காத போது மனிதர்களாகிய நாம் பார்க்கிறோம். அதனால் தான் வாழ்வில் குழப்பமேற்படுகிறது. நிம்மதி இல்லாதிருக்கிறது. கதிரேசன் தனது மனைவியைத் தன்னைப்போல நினைப்பார். உயர்வு தாழ்வு பாராதவர். அதனால் அவரது வாழ்வு இன்பம் மிகுந்ததாக இருக்கிறது. பிள்ளைகள் நல்ல முறையில் கற்றுப் பெரியவர்களாகியுள்ளனர். குமாரசாமிமனைவியை மட்டுமல்ல அவளது பெற்றோரையும் இழித்தவர்களாகக் கருதுபவர். அதனால் அவர் நிம்மதியில்லாது வாழ்கிறார். குடும்பம் சீரழிந்துள்ளது. ஏப்போதும் பெண் ஆணுக்குக் குறைந்தவள் அல்ல என்று நினைப்பவர்கள் தான்

இன்பமாக வாழ்வை அனுபவித்து வாழ்கின்றனர். இதை உணர்த்துவது தான் இப்பாடலின் நோக்கம்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**374. புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்**

**தண்ணிய மானை வளர்த்திடுஞ் சத்தியுங்**

**கண்ணியல் பாகக் கல்வி முழுதுமாய்**

**மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே.**

''சிவனடியார்களே, புண்ணியனாகிய நந்தி என்று ஓதப்படும் சிவபெருமான் பொருத்துதலினாலே திருவருலாற்றலாம். சக்தியும் உலகமெங்கும் தண்ணறிவுடன் பொருந்தி நிற்பர். சிவபெருமானின் இவ் வியல்பினாலேயே ஐம்பூதம் முதலிய தத்துவவங்கள் ஒன்றோடு ஒன்று கலந்து நிலம் நீர் நெருப்பு ஆகாயம் வாயு முதலிய உலகங்களாக விரிந்து தோன்றுகின்றன. இப் பூதங்கள் அகத்தும் புறத்தும் காணப்படும். புறத்துக் காணப்படுவது அண்டம் என்றும், அகத்துக் காணப்படுவது பிண்டம் என்றும் கூறப்படும்.

''சிவனடியார்களே, சிவபெருமான் சக்தியோடு பொருந்தி நிற்பதால் தான் ஐம்பூதங்களும் தோன்றின. சக்தி யென்பது ஆற்றல். ஒரு ஆணின் ஆற்றலெனப்படும் சக்தி பெண்ணாகும் என்பதை சிவபெருமான் எமக்குப் புலப்படுத்திய போதும் மனிதர் அதில் அக்கறைப்படாது வாழ்வதினால் தான் துன்பங்கள் வருகின்றன. ஆணும்

பெண்ணும் சரிசமம் என்று நினைக்கும் குடும்பங்கள் தான் எம் ஊரில் சிறப்பாக வாழ்கின்றன. ஏற்றத்தாழ்வு பார்க்கும் குடும்பங்கள் சீரழித்து காணப்படுகின்றன. இது உங்களுக்குத் தெரியும். சிவன் சக்திக்கப்பால் தான் உலகம் படைக்கப்பட்டது. ஐம்பூதங்களும் எமக்கு உதவியாய் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொண்டால் துன்பம் உண்டாகாது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**375. நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை**

**காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை**

**ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி**

**நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே**

''சிவனடியார்களே, ஐம்பூதங்களில் மண்ணே முக்கியத்துவம் வாய்ந்தது. அது எல்லாவற்றையும் தாங்கி நிலைபெறச்செய்வது. நீரின் சுவையும், காற்றின் உயிர்ப்பும் வானத்தில் தோன்ற ஏதுவாக இருப்பது மண். அதனால் தான் வானத்தில் ஒலி தோன்றுகிறது. நெருப்பில் ஒளி தோன்றுகிறது. ஐம்பூதங்களும் ஐந்து தன் மாத்திரைகனின்றும் தோன்றுகின்றன. ஒரு பூதத்திலிருந்து மறுபூதம் தோன்றுவதில்லை. ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தோன்றுகின்றன. இப்பாடல் ஐம்பூதங்களின் பண்புகளைப் பற்றிக் கூறுகிறது. திருமந்திரம் உலகின் படைப்புப்பற்றியும் அவ்

உலகில் வாழும் உயிர்கள் இன்பமாக வாழவேண்டிய வழிகள் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. இதைப் புரியாதவர்கள் தான் ஆணவ மேலீட்டால் தாம் தாம் உலகின் நடைமுறைக்குக் காரணிகள் என்று புலம்புகின்றனர். பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு வானியலை ஆராய்ந்தோர் கூறியவை தான் இன்றும் நடைபெறுகின்றன. இனிமேலும் நடைபெறும். இதை அறியாதவர்கள் பெய்யப்போகும் மழையைப் பற்றி அது பெய்த பின்பும்,கடல் சீற்றம், பூகம்பம் என்பன நடந்து முடிந்தபின்பும் கூறுகின்றனர். தட்டித்தவறி முன்பே கூறினால் அது நடைபெறாது. சில வருடங்களுக்கு முன்பு உலகம் சில நாட்களுக்கு இருண்டிருக்கும் என்றும் சூரியன் உதிக்காதென்றும் நெருப்பு பற்றாதென்றும் கூறினர். அது நடைபெறாதென நான் கூறினேன். நான் அப்படிக் கூறுவதற்குக்காரணம் வேதங்கள், உபநிடதங்கள், திருமந்திரம், திருக்குறள், பகவத்கீதை முழுவதையும் படித்தமையேயாகும். மேற்கூறிய நூல்கள் உலக நடை முறையைக் கூறுகின்றன. உடல்கள் அழியும் போது தோற்றுவிக்கப்படும். ஒருமரம் படும்போது நூறுமரம் உண்டாகும். இது இறைவனின் அமைப்பு. அதை யாராலும் மாற்றவோ அழிக்கவோ முடியாது அதனால் பரம் பொருளான சிவனை நம்புங்கள் துன்பங்கள் வராது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**376. உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி**
**அண்டத் தமரர் தலைவனும் ஆதியுங்**
**கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்**
**பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே.**

"சிவனடியார்களே, எழு உலகங்களையும் ஒரு காலத்தில் உண்டு உமிழ்ந்தவன் மாயன். தனால் அவனை மண்ணுன்ட மாயன் என்று உலகோர் அழைப்பர். கண்ணுக்கும் கருத்துக்கும் தோன்றும் பருவுடல், நுண்ணுடலாகிய உடல் மெய் இருபத்து நான்கினையும் காப்பவன் மாயன். அத்தகைய மாயன் என்ற அரியும் அவனுடனாகி, அவனுக்கு மேற்பட்டு நிற்கும் அண்டத்து அமரர்களின் தலைவனாகிய அரனும், திருவாணையால் ஆதியாகிய படைத்தல் தொழிலைச் செய்யும் இயற்றுதற் காரனாணாகிய அயனும், ஐந்தொழில்களுக்குக் காரணனாகிய முழுமுதற்கடவுளாம் சிவபெருமானால் முன்னே படைக்கப்பட்டவராவர்"

"சிவனடியார்களே, சிவபெருமான்தான் முழுமுதற்கடவுள் ஆவர். அரன்அரி முதலியதேவர்களைப் படைத்து அவர்களிடம் ஒவ்வொரு தொழிலை ஒப்படைத்து விட்டு அவர்களுள் நின்று செய்விக்கிறார். ஒரு அரசன் பல மந்திரிகளை நியமித்தாலும் அவர்கள் அரசனின் கட்டளைப்படி நடப்பது போன்றதே இது. இதை அறியாது ஆணவமயமய பட்டமையால் தான் அயனும் அரியும்

பல துன்பங்களை அடைந்தனர். கதிரேசன் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலை ஒதுக்கிக் கொடுத்து விட்டு உள் நின்று அவதானிப்பார். பிள்ளைகள் தகப்பன் கவனிக்கவில்லை என்று தாம் நினைத்தபடி நடக்கார். ஆனால் குமாரசாமியின் பிள்ளைகள் தாம் நினைத்தபடி நடப்பதால் தொழிலைச் செய்ய முடியாது துன்பப்படுகின்றனர். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று நினைப்பவன் ஞானி. அவனைத்துன்பங்கள் நெருங்கா. நான் தான் கர்த்தா என்று நினைப்பவனைக் கூட இருப்பவர்களும் வெறுப்பர். இதன் மூலம் சிவபெருமான் பெரும் தத்துவத்தை விளக்குகிறார். இதைப் புரியாதவர்கள் துன்பங்களில் இருந்து விடுபடமுடியாது.'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**377. ஓங்குபெருங்கடல் உள்ளுரு வானொடும்**

**பாங்கார் கயிலைப் பராபரன் தானும்**

**வீங்குங் கமல மலர்மிசை மேலயன்**

**ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே**

''சிவனடியார்களே, திருப்பாற் கடலில் தங்கியிருக்கும் அரியுடனும், செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் அயனுடனும் முறையே காத்தல் படைத்தல் ஆகிய தொழில்களை அவர்களூடாகச் செய்விக்கிறான் சிவன். ஒரு நாட்டைச் சிறந்த நாடாக்க வேண்டுமானால் அரசன் தொழில்களைப் பங்கீடு செய்து கொடுத்துவிட்டு

அவற்றைக் கண்காணிப்பான். அதனால் சிறப்பு வந்தாலும் இழப்பு வந்தாலும் அது அரசனையே சாரும். அரசன் சிறந்தவனானல் நாடு சிறப்புற்று விளங்குகிறது. அரசன் பலவீனானால் அவனை அமைச்சர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று அரசனைப் இகழ்வார்கள். இவை அமைச்சர்களைச் சாராது. அது போல மனிதர்களுக்குத் துன்பம் வந்தால் அரனையோ, அரியையோ குறை கூறார். சிவனைத் தான் கூறுவர். இது தான் உலக நடை முறை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**378. காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்**

**நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்**

**பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்**

**ஆரண மாய்உல காயமர்ந் தானே.**

''சிவனடியார்களே, அனைத்துயிர்களுக்கும், அனைத்துலகிற்கும் வினை முதற் காரணமானவன் சிவபெருமான். அன்பாகிய திருவருளுடன் கலந்து எங்கும் நீக்கமற நிற்பவன். திருமாலின் நடு உடல் என்று சொல்லப்படும் நெஞ்சில் இருப்பவனும் சிவனே. அதுபோல அனைத்துயிர்களாலும் அன்பினால் ஓதப்படும் ஒன் பொருளும் அவனே, நான்முகனுக்கு நிலையினைக் கொடுப்பவனும் அவனே. ஆருயிர்களை அறவழியில் நடத்தும் ஆரணமாகிய மறையாய் விளங்குபவனும்

அவனே. உலகமே உருவாகக்கொண்டு திகழ்பவனும் சிவபெருமானே.''

''சிவனடியார்களே, இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கதிரேசனின் மகன் முகுந்தனைக் கற்பிக்கும் ஆசிரியரான ரவீந்திரன் என்பவர் கதிரேசனிடம் வந்து, ''ஐயா, பரீட்சை கிட்டுகிறது. முகுந்தன் கோவில் கட்டிட வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறானே தவிரப் படிக்கிறானில்லை. ஏவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கிறானில்லை. நேற்று ஒரு வகுப்பு வைத்தேன். கடந்தகால வினாத்தாள்களில் உள்ள வினாக்களுக்கு விடை சொல்லிக் கொடுத்தேன். அவனைத் தவிர ஏனைய எல்லோரும் வந்தனர். ஓரிரு வாரங்களில் பரீட்சை முடிந்து விடும். அதன் பின் கோவில் வேலைகளைச் செய்யலாம் தானே'' என்றார். கதிரேசன் அதிர்ந்து போனார். அவர் தன்னைச் சுதாகரிக்கச் சில நிமிடங்கள் சென்றன. பின் சொன்னார்,'' நீங்கள் ஒரு நல்லாசிரியர். முன் வராதது எனக்குக்கவலையாக உள்ளது. எல்லாம் சிவன் செயல். அவன் எல்லாவற்றையும் நடத்துபவன். அவனது விருப்பம் அதுவானால். நான் என்ன செய்யமுடியும்'' என்றுகூறிவிட்டுச் சென்றார். அவர் வீடு சென்ற போது முகுந்தன் வந்து சொன்னான்,''அப்பா கோவிலில் வேலை செய்யும் கொத்தனார் சீமெந்தைக் குழைத்து விட்டார். அவருடன் வேலை செய்யும் சிவகுருவின் தாய்

இறந்தமையால் கூலியாட்கள் அங்கு சென்று விட்டனர். அதனால் என்னை உதவி செய்யும்படி கொத்தனார் கேட்டார். மறுக்க முடியவில்லை. அதனால் இன்று வகுப்புக்குச் செல்லமுடியவில்லை'' என்றான். அதைக்கேட்ட கதிரேசன் மகிழ்வுடன் சிரித்தார். பின்பு, ''எல்லாம் அவன் செயல்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஒரு மாதத்தின் பின் க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வந்தது. முகுந்தன் மாவட்டத்தில் முதல் மாணவனாகத் தேர்வில் சித்தியடைந்தான். எல்லாம் அவன் செயல் என்று புரிந்தவர்களுக்குத்தான் செயலின் முடிவு தெரியும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**379. பயன் எளி தாம்பரு மாமணி செய்ய**
**நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு**
**அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்**
**பயனொளி தாம்வய ணந்தெளிந் தேனே.**

''சிவனடியார்களே, செம்மையான திருவடி இன்பத்தை எளிதாகப் பக்தர்களுக்கு அளித்தருளும் சிவபெருமான் மெய்யன்பர்களுக்கு எல்லா பயன்களையும் எளிதாகத் தந்தருளுவான். அதனால் ஒப்புவர்வில்லாத சிறந்த செம்மணியாக அவன் திகழ்கிறான். அயனுடைய அறிவிற்கு அறிவாய் கலந்து நின்று படைப்புத்தொழிலைச்

செய்பவனும் அவனே. இதற்குக்காரணம் அவன் பேரருளாக இருப்பதே. சிவபெருமான் ஆருயிர்களுள் சிலவற்றைத் தகுதியுடையனவாக்கி அவற்றைக் கொண்டு ஏனைய உயிர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தருளுகிறான்''.

''சிவனடியார்களே, திருமாலுக்குள் உள்நின்று படைத்தல் தொழிலைச் செய்வது போலத் தனது மெய்யடியார்க்குத் தேவையானவற்றைக் கொடுத்துப் பிறருக்கு உதவிகளைச் செய்விக்கிறான். ரவீந்திரன் ஆசிரியர் பெரும் சிவபக்தர். அவருக்கு அளவுக்கதிகமான அறிவையும் அருளையும் கொடுத்துள்ளான். அதனால் தான் முகுந்தன் வகுப்புக்கு வராமையால் துன்பப்பட்ட ரவீந்திரன் ஆசிரியர் கதிரேசனைத் தேடிச்சென்றனர். இன்றைய ஆசிரியரில் சிலர் பாடசாலைக்குச் செல்லாது கட்டணம் வசூலிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். அதுபோல மெய்யடியாரான கதிரேசனுக்குத் அன்புள்ளத்தையும் செல்வத்தையும் கொடுத்துள்ளார். அதனால் ஊரவர் பயனடைகின்றனர். இது சிவனின் அருட்செயல்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**380. போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்**

**தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து**

**மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுந்**

**தாக்குங் கலக்குந் தயாபரன் தானே**

"சிவடியார்களே, அனைத்தையும் ஒடுக்கும் சிவனே பேரொடுக்கத்தையும் செய்கிறான். யாவற்றையும் அழித்தபின் புதுப்படைப்பினைச் செய்தருள்பவனும் அவனே. பின் படைத்த உலகைக் காப்பவனும் அவனே. இவை யாவும் சிவனின் திருவுள்ளக் குறிப்பால் நடை பெறுகின்றன. எட்டுத்திசைகளிலும் சிவபெருமான் வேறறக்கலந்து நின்றே இவற்றைச் செய்கிறான். அவன் அவ்வாறு கலந்து நிற்பதற்கான காரணம் அவனது எல்லையில்லாத பேரருளேயாகும்".

"சிவனடியார்களே, ஒரு தென்னந்தோட்டக்காரன் வயது முதிர்ந்தமையால் தென்னை மரங்கள் பலவற்றை வெட்டி அகற்றிவிட்டு இளம் தென்னம் பிள்ளைகளை நடுகிறான். அவனது தோட்டம் அது. அவன் அழித்தவற்றை அவனே ஆக்குகிறான். இதற்குக் காரணம் அவன்தன் பிள்ளைகளின் மீது கொண்ட அன்பு. இது போலத் தான் உலகில் அழிக்கப்படும் உயிர்களை மீண்டும் பிறப்பிக்கிறான். உயிர்கள் படைக்கப்பட்ட பின்பு கூடிக்குறைவதில்லை. இதை உணர்தவர்கள் படைப்பின் இரகசியத்தை உணர்வர். கதிரேசனின் இளையமகன்

திடீரென நோய் வாய்ப்பட்டுச் சில வருடங்களுக்கு முன் இறந்து போனான். கதிரேசன் கவலைப்பட்ட போதும் உண்மையை உணர்ந்து கொண்டார். சிவன் தந்தான். அவனே எடுத்தும் விட்டடான். அவன் தருவான் என்றார். அதன் பின் அவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. இது எட்டுத்திசைகளிலும் நடைபெறும் சாதாரணநிகழ்வு. எட்டுத்திசைகளிலும் சிவபெருமான் வேறறக் கலந்து நிற்பதால் அவனது பேரருளாலே இவையெல்லாம் நடைபெறுகின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**381. நின்றுயி ராக்கு நிமலன்என் னாருயிர்**

**ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற**

**முன்துய ராக்கும் உடற்குந் துணையதா**

**நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே**

“சிவனடியார்களே, உயிர்க்கு உயிராய் நின்று எல்லாவற்றையும் இயைந்து இயக்கும் சிவபெருமான் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன் அவனே என் ஆருயிராய் உள்ளான். ஆருயிர்களை அன்பு செய்வதற்குக் கருவியாக உடலுடன் ஒன்றும் படி பொருத்துபவனும் அவனே. அப்போது அவ்வுயிர்கள் முன்பு செய்த வினைக்கீடாகப் பேறு, இழவு இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறும் அவ்வுயிர்களுக்குக் கருவில் அமையப் படைத்தருள்பவன்.

அவையே அவ்வுயிர்களைத் துன்புறுத்தும். அந்நிலையிலும் சிவபெருமான் அவ்வுயிர்களோடு நின்று அருள்பவன். அவன் அனைத்திற்கும் காவலாய் நடுவு நின்று அருளுவான்''.

''சிவனடியார்களே, யாவும் சிவன் செயல் என்று எண்ணுங்கள். ஒவ்வொரு உயிரும் எண்ணற்ற பாவங்களைச் செய்யும். அப்பாவங்களில் பல தெரிந்தே செய்யப்படுகின்றன. கதிரேசன் பாடசாலைக்குச் செல்லாதவர். அவர் இயல்பாகவே சமூக நீதிகளை உணர்ந்தவர். பிரசங்கங்கள், பெரியவர்களின் உபதேசங்களைக் கேட்டு நடப்பவர். ஆனால் குமாரசாமி அப்படியானவர் அல்ல. பட்டதாரி. சகலவற்றையும் தன் கல்வி மூலம் அறிந்தவர். இருந்தும் அவற்றிற்குப் பயப்படாது தீய செயல்களைச் செய்பவர். அதனால் ஏற்படும் பாவத்திற்கிணங்கவே அவருக்கு வாழ்க்கை நடைபெறும். பாவம் என்பது விதை. அது முளைத்துப் பயன் கொடுக்கும் போது வாழ்க்கை சீரழியும். முற்பிறப்பில் செய்த வினையின் தன்மைக்கேற்ப எமக்குக் கருப்பை கிடைக்கும். அக்கருப்பை புண்ணியம் செய்ததனால் பிறப்பின் பின் நற்பலன் கிடைக்கும். கருவிலேயே சிவபெருமானால் வினைக்கீடான பயன்குறைவடையும். ஆனால் பிறந்த பின்பும் பாவம் செய்வோர் எடுக்கும் பிறவிகள் தோறும் துன்பப்படும் தன்மை உண்டாகும். ஆதனால் கிடைததற்கரிய மானிடப் பிறப் பெருத்த நீங்கள்

நல்லவற்றைச் செய்யுங்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**382. ஆகின்ற தன்மையில் அக்கணி கொன்றையன்**
**வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்**
**போகின்ற சிவன் புகந்துட லாய்உளன்**
**ஆகின்ற தன்மையைசெய் ஆண்டகை யானே.**

''சிவனடியார்களே, சொல்லுலகும் பொருள் உலகும் சிவபெருமானின் திருவருளால் மீண்டும் தோன்றும். அப்படித் தோன்றும் போது சிவன் சிவமணியும் கொன்றை மாலையும் அணிந்தவனாகத் திகழ்வான். அப்போது அவனது திருமேனி புடமிட்ட பொன் போலத்திகழும். பேரொடுக்கக் காலத்தில் உலகையும் உடம்பினையும் ஒருங்கே நீக்கிச் செல்லும் ஆவிகளுக்கு நிலைக்களமாகிய உடலாக உள்ளவன் சிவபெருமானே. எக்காலத்திலும் ஆருயிர்களுக்குச் சீர் சிறப்புக்களைச் செய்தருளுபவனும் சிவபெருமானே''.

''எல்லாம் சிவன் செயல்களே இதை உணர்ந்தவர்கள் செய்யும் செயல்கள் யாவும். சீரும் சிறப்புமாக முடிவடையும். எல்லா உயிர்களையும் விருப்பு வெறுப்பின்றிச் சமமாக கருதும் சிவபெருமான் பேரொடுக்கக் காலத்தில் அதாவது ஊழிக் காலத்தில் எல்லா உயிர்களும் சென்றடைந்து தங்கும் உடலாக

விளங்குவான். அதனால் உயிர்கள் தங்கி இளைப்பாறும் ஒருவனுக்கு நன்மை அளிப்பதும் அவன். தீமையளிப்பதும் அவன் என்ற உண்மை புரிந்த சிவபக்தர்கள் நிம்மதியாகவும் இன்பமாகவும் வாழ்கின்றனர். குமாரசாமி போன்ற உணர்வற்றவர்கள் பெரும் இன்பம் வந்த போதும் அனுபவிக்காது துன்பப்படுவர். இது உலகின் இயல்பு'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**383. ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்**
**இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்**
**பருவங்கள் தோறும் பயன்பல வான**
**திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே**

''சிவனடியார்களே, ஒருவனும் ஒருத்தியுமாக இருக்கின்ற சிவபெருமானும் சிவையும் ஆருயிர்கள் உய்யும் பொருட்டு காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடு தலாகிய திருவருளைப்புரிவர். இவ் விளையாட்டை அருளிப் பாட்டு என்று கூறுவார்.இவ்விருவரினதும் அருளில் பாட்டினால் பருவங்கள் தோறும் பயன்கள் பலவாக விளையும். திருவாகிய நடப்பாற்றல் மாயையுடன் சேர்வதால் உலகம் தோன்றி நின்று வாழும்''.

''அர்த்தநாரீஸ்வரர்களான சிவனும் சிவையும் ஆருயிர்களின் நன்மைக்காகப் பல

திருவிளையாடல்களைச் செய்வர். இதை அருளிப்பாட்டு என்பார்கள். இதனால் காலத்திற்குக்காலம் தேவையானவை கிடைக்கும்? ஏன்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**384. புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்**

**புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்**

**புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்**

**புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே.**

“சிவனடியார்களே, சிவ பெருமான் உயிர்க்கு உயிராய்ப் புகுந்து நின்று அவ்வுயிரினது தொழிலை உணர்த்தியும் உணர்ந்தும் அருள்பவன். அதுபோலவே அயனின் உயிருள்ளும் உயிராய்க் கலந்து நிற்பவன். இம் முத்திறத்தோடும் புகுந்தறிந்து முடிப்பிக்கும். சிவபெருமானின் முடித்தலாகிய நிறைவேற்றுதலுக்கு கருவியாகி நின்றனர்”

“அடியார்களே, சிவன் உயிருக்குள் உயிராய் நின்று ஒவ்வொருவர் செய்யும் தொழிலை உணர்த்துவான். இதனால் தான் உயிர்கள் உணர்ந்து செயற்படுகின்றன. சிவனடியாரான ரவீந்திரன் ஆசிரியர் மிகுந்த அறிவாளி. அண்மையில் அவர் நிர்வாகசேவைக்கான பரீட்சை எழுதினார். அவரோடு கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் விடுமுறையில் நின்று கற்றனர். ஆனால் ரவீந்திரன் ஆசிரியர் மாணவர்களின் நன்மை கருதி விடுமுறை

எடுக்காது தினமும் பாடசாலைக்குச் சென்று கற்பிப்பார். இரவில் வாரத்திற்கு மூன்று தினங்கள் கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்குச் சனசமூக நிலையத்தில் கற்பிப்பார். அவர்களுக்குப் பரீட்சை நடைபெற இருந்ததால் அவர் தினமும் சென்று கற்பிப்பார். ரவீந்திரனின் நண்பனான முருகவேள் சொன்னான்,"நிர்வாக சேவைப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் விடுமுறையில் நின்று படிக்கின்றனர். நீ பாடசாலைக்குச் செல்கிறாய். இரவு வேளைகளில் பின் தங்கிய மாணவர்களுக்குக் கற்பிக்கிறாய். உனக்குப் பரீட்சை எழுதும் எண்ணமில்லையா? ஐயாயிரம் ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள் நூறுபேரைத் தான் எடுப்பார்கள். நீ விடுமுறை எடுத்துப்படி". என்றான்.

"முருகவேள் ஒவ்வொருவரினதும் உயிரில் உள்நின்று சிவன் அவர்கள் செய்ய வேண்டியவற்றை உணர்த்துவான். எனக்குப் பாடசாலைக்குச் செல்லும்படி உணர்த்தினானே தவிர விடுமுறை எடுத்துப் படிக்கச் சொல்லவில்லை" என்றான்.

"முழுவிசர் உனக்கு. சிவனாவது சொல்வதாவது. எனக்குச் சொன்னதை வேறு யாருக்கும் சொல்லாதே. ஊனக்கு பைத்தியம் என்பார்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான். அதன் பின் ஒரு வாரத்தில் பரீட்சை நடைபெற்றது. ரவீந்திரன் பரீட்சைக்குத் தோற்றிப் பரீட்சை எழுதினான். ஆறுமாதங்கள் கழிந்தும் ரவீந்திரன் நிர்வாக

சேவையில் சேர்ந்தான். ஏனைய எவரும் சித்தியடையவில்லை. அதனால் முருகவேளிடம் சென்று சொன்னான்,‘‘முருகவேள் சிவன் அவரவர் செய்யும் தொழிலை உணர்த்துவார். எனக்கு உணர்த்தியமையால் தான் நான் விடுமுறை எடுத்துப்படிக்கவில்லை’’.

‘‘அதனால் சிவபக்தர்களே சிவன் உணர்த்துவான் என்று நம்பினீர்களானால் உங்கள் வாழ்வு சிறக்கும்’’என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**385 ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்**

**காரிய காரண ஈசர் கடைமுறை**

**பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்து**

**ஆணவம் நீங்கா தவரென லாகுமே**

‘‘சிவனடியார்களே ஆணவ ஆற்றல் அகன்றாலும் பயிற்சி வசத்தால் ஏற்படும் வாசனை ஆகிய பசைவாற்றலை ஆணவச் சக்தி என்கின்றனர். அப் பசைவாற்றல் அகல தூமாயையில் தோன்றும் நிலைக் களம் ஐந்தாகும் அவற்றின் கண் வாழும் உயர்ந்த உயிரினத்தவரும் ஐவராவர். இவ்விரு வகையினரை முறையே உயிர்ப்பால் உடையான்பால் எனக் கூறுவார். ஊயிர்ப்பால் அணு பக்கம் உடையான் பால் சம்பு பக்கம் இவ் ஐவருள் அருளோனாகிய சதாசிவ நிலையில் உள்ள உயிர்ப் பாலார் நுகர்வுப்பசையுடையார். நுகர்வுப் பசை

என்பது போக வாசனை .அதன் பின் ஆண்டான் மெய்யாகிய ஈசுரதத்து வந்து ஆட்டுதற்பசையாகிய அதிகார மலவாசனை உடைய உயிர்ப் பாலார் உறைவார். ஆசான் மெய்யாகிய சுத்த வித்தியா தத்து வத்த மலவாசனை உடையவராய் கீழுள்ள குணதத்துவத்தில் இருந்து திருவாணைவழி படைத்தல் காத்தல் அழித்தல்களைப் புரியும் அயன் அரி அரன் அரி அயன் வேந்தன் முதலியோராகிய உயிர்பாலர் உறைவர். இந் நிலையில் சிவபெருமான் புரியும் ஐந் தொழில்களால் தூமாயையாகிய விந்து வினின்றும் அமைப்பு முறை பகுப்பாபம் விருத்தியாய் தோன்றும் இவர்கள் அனைவரும் மலப் பசை உடையவர்களாவர். இதனால் ஆணவம்நீங்காதவர் என்றனர். ஐந்தொழில்களைப்புரியும் ஐவரும் ஆணவம் நீங்காதவர்கள். அதனால் தான் சிவபெருமான் உள் நின்று அத்தொழில்களைச் செய்விக்கிறார். எல்லாவற்றையும் துறந்து விட்டோம். என்டறு கூறும் தவசிகளிடத்தும் பல்வேறு சமயங்களில் ஆசை மனதுள் தோன்றும் அதை அவர்கள் மறைத்த போதும் அது மலப்பசையாகி ஆன்மாவில் ஒட்டிக் கொள்ளும் அதைச் சிவன் அறிவார். முற்றும் துறந்து விட்டேன்.என்று கூறிய முனிவர் ஒருவரின் முன் அழகான பெண்ணொருத்தி சென்ற போது அவர் காம ஆசையால் சோதிடம் சொல்லவென்று அவளது கையைப் பிடித்தார். கண்களை மூடி வெகுநேரம் அவளது கையைப் பிடித்த போது அவரால் எதையும் சொல்ல முடியவில்லை. அதற்குக் காரணம் அவர் அப் பெண்ணைத் தொடுவதில்

சலித்திருந்தார். அது அவருக்கு புதிய இன்பத்தைக் கொடுத்தது.'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**386 உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமா**

**மற்றைய மூன்று மாயோ தயம்விந்து**

**பெற்றவன் நாதம் பரையிற் பிறத்தலால்**

**துற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே.**

"சிவனடியார்களே அருஞ்சைவத் தத்துவம் முப்பத்தாறு. அதனுள் நிலம் முதல் மாயை வரை உள்ள தத்துவம் முப்பத் தொன்று. இம் முப்பத் தொன்றும் தூமாயை என்று சொல்லப்படுகிறது.இக் கருத்துக்குப் பாடம் முப்பாலொன்று எண்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் கொண்டால் மற்றைய மூன்று ஆகிய ஆசான்மெய், ஆண்டான்மெய், அருளேபன் மெய் என்னும் மூன்றும். தூமாயையின் விளக்கங்களாகும். அதன் மேல் விந்து இவ் விந்து நாதத்தில் இருந்து தோன்றும். நாதம் பரை நிறைவில் தோன்றும். இவை அனைத்தும் சிவபெருமான் பரையில் பொருந்துவதால் தோன்றுபவை. இனி முப்பால் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழிலுக்குரிய முப்பண்புகளென்றாலும் ஒன்று இம் முப்பண்புகள் மூலப் பகுதியில் தோன்றுவன. இவை அமைதி ஆட்சி அழுத்தல் எனக்கூறப்படும். இவற்றை முறையே சத்துவம் இராசதம் தாமதம் என்பர். இம் மாயையின் குணம் காரியக் கடவுளார்க்கு உள்ளன. ஊணர்த்து மெய்,

உணர்வுமெய் உடன் மெய் ஆகிய மூன்றும் காரண மாயையில் இருந்து தோன்றுவன. இம் மூன்றையும் முறையே விந்து மோகினி மான் என்று சொல்லப்படும். விந்து தூமாயை மோகினி தூவா மாயை, மான் மூலப்பகுதி. விந்து நாதத்தில் இருந்து தோன்றும். நாதம் திருவருள் நிறைவில் தோன்றும். இவையனைத்தும் நீக்கமறக்கலந்து வேறற நிற்கும்'' என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**387. ஆகாய மாதி சதாசிவ ராதியென்**

**போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்**

**மாகாய ஈசன் அரன்மால் பிரமானம்**

**ஆகாயம் பூமி காண அளித்தலே**

''சிவனடியார்களே, வான்வளி தீ நீர்நிலம் என்னும் ஐம்பூதங்களும், அவற்றை முறையே இயக்கும் கண்காணித் தெய்வங்களான அருளோன். ஆண்டான் அரன், அரி, அயன் என்னும் ஐவரும் தோற்றக் கேடில்லாத திருவருளின் ஆற்றலுடன் இயங்குகின்றனர். இத் தோற்றம் அருள் வெளியாகிய மகாயத்தில் தோன்றியது. அருளேளன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் இவர்களால் நாம் காணும் ஐம்பூதங்களும் தோன்றின'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**388. அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்**

**அளியார் திரிபுரை யாம்அவள் தானே**

**அளியார் சதாசிவ மாகி அமைவாள்**

**அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே.**

“சிவனடியார்களே, தூமாயையில் இருந்து திருவருளின் உதவியினால் முக்கோணம் தோன்றும். அம் முக்கோணத்தில் வீற்றிருப்பவள் திரிபுரை. இவள் அருளோனாகிய சதாசிவத்திற்கு உடலாக அமைந்தவள். அவளே படைத்தல் காத்தல் அருளல் மறைத்தல் என்றும் ஐந்தொழில்களையும் புரிபவள். இவ் ஐந்தொழில்களும்.அருளால் புரியப்படுவன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். சிவபெருமானின் அருட் திருமேனிகளில் ஒன்று சதாசிவன். சதாசிவனுக்கு உடலாக அமைந்தவள் திரிபுரை. அவளே சக்தியாவாள். அவள் சிவனருளால் ஐந்தொழில்களையும் செய்கிறாள்” எள்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

**389. வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி**

**காரணி காரிய மகாக் கலந்தவள்**

**வாரணி ஆரணி வானவர் மோகினி**

**பூரணி போதாதி போதமு மாமே.**

"சிவனடியார்களே, திருவருள் அருளோன் நிலையில் மனோன்மணி என்று அழைக்கப்படுகிறாள். சிவனது நிலையில் மனோன்மணி மங்கலி என்று அழைக்கப்படுகிறாள். திருவருள் அம்மையே அனைத்திற்கும் வினை முதற்காரணியாவாள். காரியப் பொருட்களில் இவள் கலந்து நின்று இயக்குவதால் கலந்தவளும் ஆவாள். படைக்கும் போது வாரணி என்றும், காக்கும் போது ஆரணி என்றும்,அழிக்கும் போது காளி என்னும் வானவர் மோகினி மோகினி என்றும், மறைத்தலின் போது ஆதி பூரணியென்றும் அருளலைப் புரியும் போது திருவருள் என்றும் அழைக்கப்படுவாள். இவ்வாறு திருவருள் அம்மை எல்லமாக நின்று ஐந்தொழில்களையும் செய்கிறாள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

390. **நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்**

**சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்**

**மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்**

**என்றிவ ராகா இசைந்திருந் தானே.**

“சிவனடியார்களே, திருவருளுடன் தானாய் நின்று நிறைந்த ஆண்டானும் திருவானைப்படி இயக்க இயங்கும் அரன் அரி அயன் என்றும் மூவரும் கலப்பால் சிவபெருமானே யாவர். திருவினைப் பெருவாழ்வெனக் கொண்டு விளங்குபவன் திருமால். மணம் கமழும் செந்தாமரையில் வீற்றிருப்பவன் அயன். இவர்கள் எல்லோரும் திருவருளால் பெருந்தி இருக்கின்றனர். சிவபெருமானால் ஐந்தொழில்கள் புரிவது உலகம் படைக்கப்பட்டது. சிவபெருமானின் கருணையினால்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

391. **ஒருவனு மேஉல கேழும் படைத்தான்**

**ஒருவனு மேஉல கேழும் அளித்தான்**

**ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்.**

**ஒருவனு மேஉல கோடுயிர் தானே.**

“சிவனடியார்களே, ஒப்பில்லாத முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே ஏழு உலகங்களையும் படைத்தவன். அவனே ஐந்தொழில்களையும் புரிபவன்.

அவனே கலப்பினால் உலகமாயும் உயிர்களாயும் திகழ்பவன். அயன், அரன் அரி ஆகிய மூவரும் சிவபெருமானிடம் திருவாணையைப் பெற்றுத் தத்தமது தொழில்களைச் செய்கின்றனர். ஏவுதற்கருத்தாவின் ஏவலர்கள் அவர்கள். சிவபெருமான் உயிர்களின் வேண்டு கோள்களை ஏற்று அவ்வுயிர்களைக் கொண்டே அனைத்தும் செய்விப்பவன்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**392. செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை**

**மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்**

**கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்**

**அந்தார் பிறவி அறுத்துநின் றானே.**

''சிவனடியார்களே, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் செந்தாமரைப் பூவின் நிறத்தையும் தீயை ஒத்த வண்ணமும் உடையவன். வலிமைமிக்க முகில் வண்ணனாகிய மாயனான மன்மதன், ஒவ்வொருவரினதும் வினைக் கீடாகச் செய்யும் மயக்க ஆசையால் அழகான பெண்களும் ஆடவர்களும் கூடிய கூட்டத்தால் இருள் நீங்கா ஆருயிர்களுக்குப் பிறவி வந்து சேரும். அப்பிறவியின் நற்தவத்தால் வினைகளை அறுத்து அருள் புரிபவன் சிவபெருமான். பிறப்பித்தலும் சிறப்புக்கள் கொடுப்பதும் சிவபெருமானுக்கே உரிய ஒப்பில்லாத திருவருட் செயலாகும்''

“சிவனடியார்களே, பிறப்பு வினைக்கீடாகவே ஒவ்வொருவருக்கும் வந்தமைவது போல மனையாளும் வந்தமைகிறாள். மனையாளுடன் கூடிவாழும் வாழ்க்கையினால் தான் ஆருயிர்கள் சிறப்பை அடைகின்றன. கதிரேசனின் மனைவி மகாலட்சுமி குடும்பத்திற்கேற்ற பண்புகள் அத்தனையையும் கொண்டவள். அதனால் தான் அவர்களுக்கு உத்தமமான கல்வியில் சிறந்த புத்திரர் பிறந்தனர். குமாரசாமியின் மனைவி கௌரி. கனவனுக்கு அடங்காதவள். தீயகுணங்களை உடையவள். அதனால் தான் அவர்களுக்குத் தீய புதல்வர்கள் பிறந்தனர். காதல் கடவுளான மன்மதன் சிவபெருமானின் கட்டளைப்படி வினைக்கீடாக ஆணையும் பெண்ணையும் இணைத்து வைப்பான். இதனால் பிறவிகள் வரும். அப்பிறவிகளில் நற்செயல்களைச் செய்வோர் சிவபெருமானின் கருணையால் மேலான நிலையை அடைவர். இது தான் உலகின் இயல்பு” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**393. தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்**
**கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி**
**ஊடு மவர்தம துள்ளத்தின் உள்நின்று**
**நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே.**

“சிவனடியார்களே, எட்டுத் திசைகளிலும் வாழ்வின் பொருட்டு ஆருயிர்கள் உடல்களைப்

பெறுகின்றன. அவ்வுயிர்களை வினைக்கீடாக உடலோடு சேர்ந்து வைப்பவன் சிவபெருமான். அத்துடன் அவ்வுயிர்களுக்கு வேண்டியவற்றை அளிப்பவனும் சிவபெருமானே. பிறவி எடுத்த உயிர்கள் சிவனை அடைய வேண்டிய நிலையில் நில்லாது மாறுபாடு உடையனவாகவே வாழ்கின்றன. அத்தகைய உயிர்களின் உள் மறைந்து நின்று அதனை ஆராய்பவன் சிவபெருமான். அதனைச் சிவனின் அருளால் நான் அறிந்து கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்''.

''சிவனடியார்களே, சிவனை அறியாது எந்த உயிரும் எதையும் செய்யமுடியாது. ஏனெனில் சிவபெருமான் ஒவ்வொரு உயிரிலும் கலந்து நிற்கிறார். கண்களை அறியாது பார்க்க முடியாததைப் போல சிவனை அறியாது செல்களைச் செய்யமுடியாது. தாமோதரன் என்ற வியாபாரி கலப்படம் செய்து தான் பொருட்களை விற்பவன் அதனால் அவனுக்கு நல்ல இலாபம் கிடைக்கும் பொருட்களைப் பரிசீலிக்கும் அதிகாரியான சுந்தரத்திற்கு தாமோதரரன் பெருந்தொகையாகப் பணம் கொடுப்பான். ஒரு நாள் தாமோதரரனின் வீட்டுள்ப்புகுந்த திருடர்கள் அவரது பணம் பொருளையெல்லாம் அள்ளிச் சென்றனர். சுந்தரத்தின் நண்பன் துரைசிங்கம் அவன் சுந்தரத்திற்கு பண ஆசையைக் காட்டி வேறொருவனுக்குத் தங்க நகைகளுக்குப் பணம் கொடுக்குமாறும் அதனால் வட்டிப்பணம் கிடைக்கும் என்று கூறிப் போலியான

நகைகளைக் கொடுத்துப் பெருந்தொகைப்பணத்தைப் பெற்றுக் கொண்டான். இது தான் உலகம். சிவபெருமான் உள்நின்று நல்லவற்றைக் கூறினாலும் மனங்கள் அதைக்கேட்கவிடா. அதனால் தான் துன்பங்கள் உண்டாகின்றன. நல்லவர்கள் சிவனது சொற்களைக் கேட்பதால் அவர்களுக்குத் துன்பம் வருவதில்லை. ஒவ்வொருவரது மனச்சாட்சி தான் சிவன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**394. ஓராய மேஉல கேழும் படைப்பதும்**

**ஓராய மேஉல கேழும் அளிப்பதும்**

**ஓராய மேஉல கோழும் துடைப்பதும்**

**ஓராய மேஉல கோடுயிர் தானே.**

''சிவனடியார்களே, சிவனும் சிவையும் கூடியிருப்பதால் தான் ஏழு உலகங்களும் இயங்குகின்றன. ஓராயம் என்பது சிவனும் சிவையும் கூடி நிற்கின்ற நிலை. அதனால் தான் உயிரோடு உடல் கூடி நிற்கின்ற நிலை. அதனால் தான் உயிரோடு உடல் கூடி வாழ்கிறது. அத்துடன் உலகமும் காக்கப்படுகிறது. அழிக்கப்படுகிறது''

''சிவனடியார்களே சிவனும் சிவையும் கூடி ஓருருவாக இருப்பதால் தான் உயிர்கள் கூடி வாழ்கின்றன. ஒரு உடலை எடுத்தால் அது ஆணும்

பெண்ணும் சேர்ந்ததால் உண்டானது. சேராவிட்டால் எந்த உடலும் தோன்றமாட்டாது. ஆணும் பெண்ணும் ஒருயிரும் இருடலுமாக வாழ்ந்ததால் தான் உலக இன்பங்களை அனுபவிக்கலாம். ஓர் உயிர் என்றும் போது அதை ஒரு மனம் என்று எடுத்தல் வேண்டும். ஒரு செயலைச் செய்யும் போது கணவனும் மனைவியும் ஒரே நோக்கு உடையவராக இல்லாதிருத்தல் அச் செயல் நடைபெறாது. கதிரேசன் மனைவியின் சம்மதமில்லாமல் எதையும் செய்யார். அது போல மனைவியும் கதிரேசனுக்கு விருப்பமில்லாததைச் செய்யார். ஆனால் குமாரசாமி மனைவிக்குத் தெரியாமல் செயல்களைச் செய்வார். அதை அறிந்த மனைவி கொதித்தெழுவாள். அதனால் வாழ்க்கை சீரழிந்து விடும். சிவனே சிவையோடு கலந்து கொள்ளாது எதையும் செய்வதில்லை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**395. நாதன் ஒருவனும் நல்ல இருவருங்**
**கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்**
**ஏது பணியென் றிசையும் இருவருக்**
**காதி இவனே அருளுகின் றானே**

''சிவனடியார்களே, எல்லோராலும் முதன்மையானவன் என்று போற்றப்படுபவன் சிவபெருமான். அரியும் அயனும் குற்றம் பொருந்திய

தூவாமாயை ஆக்கப்பாடுகளாகிய முப்பத்தொரு தத்துவங்களுடனும் கூட்டிக் குழைக்கப்பட்ட உடம்பினை உடையவர்கள். அப்படியான இருவரும் சிவபெருமானிடம் இரந்தே பணி செய்யவேண்டுவர். சிவபெருமான் அவர்களது வேண்டுகோள்களை ஏற்று அவர்கள் காத்தலையும் படைத்தலையும் செய்ய அருள்புரிவார்''.

''சிவனடியார்களே, சிவனையும் சிவையையும் தவிர மற்றெல்லாரும் தூமாயையின் தத்துவங்கள் முப்பத்தொன்றையும் பெற்றவர்கள். அதனால் நான் தான் பெரியவன். தன்னைவிட்டால் செய்ய யாரும் இல்லை என்ற ஆணவ முனைப்புக் கொண்டவர்கள். இவர்களுக்குச் சிவனின் அருள் இருந்தும் ஆணவ முனைப்பால் இயங்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஒரு மேலதிகாரி ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிட்டால் அதைச் சரிவரச் செய்ய வேண்டியது. ஊழியரின் கடமை. ஊழியன் ஆணவமுனைப்பால் தனது கடமைகளை மறப்பதால் அவன் எதற்கும் மேலதிகாரியின் ஆலோசனையை எதிர் பார்ப்பான். அத்துடன் அவன் அச்செயலைச் செய்ய மாட்டான் என்று தெரிந்து கொண்ட மேலதிகாரி அவன் செய்யும் செயல்களை ஆணைப்படி செய் என்பார். அரனும் அரியும் இத்தகையோர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**396. அப்பரி செண்பத்து நான்நூறாயிரம்**

**மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்**

**பொய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்**

**கிப்பரி சேஇருள் மூடிநின் றானே.**

“சிவனடியார்களே, சிவபெருமானின் திருவினைப்படி அயன் நால் வகைத் தோற்றத்து ஏழுவகைப் பிறப்பினுள் எண்பத்தி நான்கு நூறாயிரம் வேறு பாடுகளோடு கூடிய உடம்புகளை ஆருயிர்களுக்குக் கொடுத்தருளியுள்ளான். சிவபெருமான் அம்மை அப்பராக விளங்கும் தன்மையினால் ஆருயிர்கள் இவ்வாறான உடம்பைப் பெற்றன. இதைப்புரியாத நாத்திகர்கள் இதெல்லாம் பொய் என்பர். அதனால் சிவபெருமான் ஆணவமிடுக்குக் கொண்ட அவர்களை அவ் ஆணவ வல்லிருளில் மூழ்க வைத்துள்ளார்”.

“சிவனடியார்களே, நாத்திகர்கள் இவற்றை நம்பதாதால் அவர்களை ஆணவ வல்ளிருல் மூடியுள்ளது. அதை அவர்களால் விலக்க மூடியாமைக்குக் காரணம் அதை உண்டாக்கியவர் சிவபெருமான். கதிரேசன் படிக்கவில்லை. ஆனால் சிவனருளால் அவருக்கு யாவும் தெரியும். ஆனால் குமாரசாமி படித்தவன். அவன் கற்ற கல்வியால் ஆணவம் கொண்டு அதில் மூழ்கியிருந்து தீய செயல்களைச் செய்கிறான். இதை விலக்கச் சிவன்

தேவையில்லை. அது அவரது தொழிலும் அல்ல. ஒருவன் கற்ற கல்வி தீயதை விலக்க வேண்டும். கல்விக்குள் கலந்திருக்கும் சிவன் நல்லவர்களுக்கு வழிகாட்டுவார். தீயவர் கேட்டால் மட்டும் உதவுவார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**397. ஆதித்தன் சந்திரன் அங்கிஎண் பாலர்கள்**
**போதித்த வானொலி பொங்கிய நீர்புவி**
**வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்**
**ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.**

''சிவனடியார்களே, தூவாமாயையின் காரியமாகிய மூலப்பகுதியின் காரியங்களாகச் சூரியன், சந்திரன், தீ ஆகிய முச்சுடர்களும் எண்திசைக் காவலர்களும் தோன்றினார். போதத்திற்கு வாயிலாகிய எழுத்தோசைக்கு இடனாசு இருப்பது வான். அவ்வானும் காற்றும் நீரும் நிலமும் ஆகிய பூதங்களும் தூவாமாயையின் காரியங்களே.

ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் எனப்படும் தன்மாத்திரைகள் ஐந்தும் அதன் காரியங்களே வாக்காதியாதிய செய்தற்கருவிகள் எனப்படும். வாய்கால், கை, எருவாய் கருவாய் என்ற ஐந்தும் அதன் காரியங்களே. மனாதிகள் எனப்படும் எண்ணம் மனம் எழுச்சி இறுப்பு ஆகிய நான்கும் அதன் காரியங்கள் ஆகும். இவற்றை முறையே சித்தம் மனம் அகங்காரம்

புத்தி எனவும் கொள்ளலாம். செவி, கண்,மெய், நாக்கு, மூக்கு, என்றும் அறிதற்கருவிகள் ஐந்தும் அதன் காரியங்களே ஆகும். தூமாயையின் கீழாய் அடங்கிய மூலப்பகுதியின் கண் நின்று முறையாகத் தோன்றியனவே மேற்கூறப்பட்டவைகள்''.

''சிவனடியார்களே, சூரியன், சந்திரன், தீ, எண் திசைக்காவலர்கள், பஞ்சபூதங்கள், மனித அவயங்கள், உள் உணர்வுகள் போன்றன எவ்வாறு தோன்றினவென்றும் திருமூலர் கூறுகிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# காப்பு

**398. புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்**
**புகுந்தநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்**
**புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்**
**புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே.**

''சிவனடியார்களே, வெளியாகிய சிற்றறிவை விளக்கும் பொருட்டு அதனுடன் கலந்து நிற்பவன் சிவபெருமான் அதுபோல இருளாகிய அறியாமையைத் தொழிற்படுத்தும் பொருட்டு அதனுடனும் கலந்தும் கலவாமலும் நிற்கின்றவன் சிவபெருமான். சிற்றிவுள்ளவர்கள் சிவனைத் தொழுது புகழ்வர்.

அறியாமை உள்ளவர்கள் சிவனை நித்தித்து இகழ்வர். இப்படிப் புகழ்வோரிடத்தும் இகழ்வோரிடத்தும் கலந்து நிற்பவர் சிவபெருமான். ஆருயிர்களின் உடலுள் உடலாகவும், உயிர்க்குள் உயிராகவும் கலந்து இருப்பவன் சிவபெருமான். அதுபோல ஆருயிர்களின் அறிவுக்கு அறிவாக அவ் அறிவினை விளக்கி நிலை பெற்று நிற்பவனும் சிவனே''

''சிவனடியார்களே, சிவனைத் துதித்துப் புகழ்வோரின் உயிரிலும் இகழ்வோரின் உயிரிலும், உடலிலும், அறிவிலும், கலந்து நிற்பதால் சிவபெருமானுக்கு விருப்பு வெறுப்பு இல்லை. அவன் உயிரையும் உடலையும் அறிவையும் காப்பவன். ரவீந்திரன் அறிவுமிக்க சிவனடியான். அதனால் அவன் சிவனை வணங்கிக் கொண்டு தனது நாளாந்தக் கடமை செய்தபோது உடலுள் நின்று இயங்கிய சிவன் பின் அவன் நிர்வாக சேவைப் பரீட்சை எழுதும் போது அவனது அறிவினுள் அறிவாய் நின்று அப்பரீட்சையில் சித்தியடைய வைத்தார். அறியாமை மிகுந்தவர்களின் அறியாமைக்குள் நின்று அறியாமையை மேம்படுத்தியபடியால் அவர்கள் சித்தியடையவில்லை. அதனால் மக்கள் இறைவனை இகழாது, அறியாமையால் நிந்திகாது. அறிவுமிக்கவர்களாக இருந்தால் அவ் அறிவு மேம்படும். எதில் இறைவன் இருக்கிறானோ அதுவே மேம்படும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**399. தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்**
**தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்**
**தானே கடல்மலை யாதியு மாய்நிற்குந்**
**தானே உலகில் தலைவனு மாமே**

“சிவனடியார்களே, சிவபெருமான் திசைப்பாது காவலர்களான தேவர்களுடன் கலந்து தானாகவே நிற்பவன். அது போல உடலாய் உயிராய் ஏனைய தத்துவங்களுமாய் நிற்பவன். அதுபோலக் கடலும் மலையும் முதலாக எல்லாப் பொருளுமாய் நிற்பவன். அத்துடன் உலகிற்குத் தலைவனுமாக நிற்பவன் சிவபெருமான்”

“சிவனடியார்களே உலகில் உள்ள பொருட்கள், உயிர்கள் அனைத்திலும் சிவபெருமான் வீற்றிருக்கிறார். பிரதான வீதியில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெற்றுவந்தன. கந்தவனம் என்ற பெரியவர் வீதியால் செல்லும் வாகனங்கள் அளவுக்கு மீறிய வேகத்தில் செல்வதாக உணர்ந்து அதைத்தடுப்பதற்காக தனது வீட்டில் சிவலிங்கத்தைப் போலிருந்த ஒரு கல்லை எடுத்துச்சென்று வீதிக்குச் சமீபமாக வைத்து வழிபட்டார். அவ் வீதியால் சென்று வரும் சரவணன் என்ற வியாபாரி அந்தச் சிவலிங்கம் வைத்த இடத்தில் தனது வாகனத்தை நிறுத்தி அதை வழிபட்டுவிட்டுச் செல்வார். சில நாட்களில் அவரது வியாபாரம்

அதிகரித்ததை அறிந்த பலவியாபாரிகளும் மக்களும் தாமும் அவ்விடத்தில் தரித்து நின்று வழிபட்டனர். அவர்களின் எண்ணங்கள் பலவும் நிறைவேறின. அதனால் அவ்வீதியால் பயணிப்போர் அவ்விடத்தில் இறக்கிச் சிவலிங்கத்தை வழிபட்டனர். அதனால் வாகன வேகம் குறைந்தது. விபத்துக்கள் இல்லாமல் போயின. சிவனடியார்களே, எல்லாப் பொருட்களிலும் சிவபெருமான் வீற்றிருப்பதால் தான் இந்த நிலை உருவானது. எல்லா உயிர்களையும் இறைவன் குடியிருக்கும் கோவில் என்று கூறுவது இதனால் தான்''. என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**400. உடலாய் உயிராய் உலகம தாகிக்**
**கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்**
**இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி**
**அடையார் பெருவழி அண்ணல்நின் றானே.**

''சிவனடியார்களே, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் கலப்பால் உடல் உயிர் உலகமாக நிற்பவன். கடலாய், அக்கடல் நீரைப் பருகிக்கொண்ட கருமுகிலாய் நிற்பவன். அக்கடல் நீரால் பெய்யப்படும் மழையாகவும் இருப்பவன். இவற்றுள் உள்ளுறையாய் நிற்பவனும் அவனே. என்றும் அழிவின்றி எங்கும் தானாகி நிற்பவனும் அவனே. தன்திருவடியைப் புகலிடமாகக் கொண்டு தன்னை சாரும் மெய்யடியார்கள் என்றும்

இன்புற்று வாழும் தன்மையை உண்டாக்கிவனும் அவனே''.

''சிவனடியார்களே , எல்லாமாகி நிற்பவன் சிவபெருமான். அவன் கடலாகவும், அக்கடல் நீரை கவந்திழுக்கும் முகிலாகவும்,பின் மழையாகவும் இருக்கிறான். அவனே புகலிடம் என்று நினைக்கும் மெய்யடியார்க்கு அவன் வேண்டிய இன்பங்களையெல்லாம் அளிக்கிறான். கதிரேசன் சொல்வார் நாம் குளிக்க வேண்டுமானால் ஆற்றில் அல்லது குளத்தில் இறங்கவேண்டும். இல்லாவிட்டால் கிணற்றை நாடவேண்டும். அது போல ஒருவன் இன்பமாக வாழவேண்டுமானால் சிவனடியை அடைய வேண்டும். வீட்டில் இருக்கும் கிணறு எம்மைக் குளிப்பாட்டாது அது போல எமக்குள் இருக்கும் சிவமும் உரிய முறையில் வாழாவிட்டால் உதவி செய்யாது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**401. தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்**
**தானொறு கால்சண்ட மாருத மாய்நிற்குந்**
**தானொரு காலந் தண்மழை யாய்நிற்குந்**
**தானொரு காலந்தண் மாயனு மாமே**

''சிவனடியார்களே, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் ஒரு காலத்தில் ஒப்பில்லாத பேரறிவுப்

பெருஞ்சுடராக இருப்பான். ஒரு காலத்தில் பெருங் காற்றாய் நிற்பன். ஒரு காலத்தில் தொழிலின் பொருட்டுத் தலைக்குணத்தை மேற்கொண்ட குளிர்ந்த மாயவனாய் நிற்பான்.''

''சிவனடியார்களே, சிவபெருமான் எல்லாமாய் இணைந்து நின்று அவற்றை இயக்கும் தன்மையைத் திருமூலர் இத்திருப்பாட்டின் மூலம் கூறுகிறார். பெருந்தீயாகவும் பெருங்காற்றாகவும் பெரும் மழையாகவும் இருப்பவன் சிவபெருமான். அதனால் தான் மெய்யடியார்கள் பெருந்தீ ஏற்பட்ட போதும் பெருங் காற்று ஏற்பட்ட போதும், பெரும் மழை ஏற்பட்ட போதும், சிவனை மெய் அன்போடு வணங்குகின்றனர்.அதனால் அடியவர்களின் குறை தீர்க்க அவன் தன் வீரியத்தைக் குறைக்கிறான் கதிரேசன் சிவன் கோவிலில் ஆறாம் திருவிழாவைச் செய்பவர் அன்று தவராது மழை பெய்யும். கதிரேசன் சிவனை வணங்கி அடியார்கள் வந்து வணங்கிச் செல்லும் வரை ஓய்ந்திரு என்று சொல்வார். அதன் படி பூசை நேரம் மழை நிற்கும் பூசை முடியப் பெரு மழை பொழியும்'' என்றார் சுந்தர மூர்த்திநாயனார்.

**402. அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்**
**இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்**
**முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்**
**அன்புற ஐந்தில அமர்ந்துநின் றானே.**

“சிவனடியார்களே, அனைத்து உயிர்களிடத்தும் கொள்ளும் அன்பால் உண்மை அறிவு உண்டாகும். அவ் அன்பால் சிறப்பு மிக்க அடக்கம் உண்டாகும். இப்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்பவன் சிவபெருமான். அதுபோல நல்ல பண்புகளை உடைய காதலர் தம்முள்ச்சிவ நினைவுடன் எய்தும் இன்பமும், அவ் இன்பத்தின் பொருட்டுக் கூடும் கூட்டத்துணையும் சிவபெருமானே யாவன். பேரூழிக்குப் பின் உலகைத் தோற்றுவிப்பவன் சிவபெருமான். அங்ஙனம் தோற்றுவித்து நிலை நிறுத்திய பின்பு பேரொடுக்கம் செய்பவனும் அவனே. யாவரும் இலகுவாக வழிபட்ட ஈடேறும் பொருட்டு அன்பு செய்வதற்கேதுவாக ஐம்பெரும் பூதங்களாய் உருவெடு:த்திருப்பவனும் சிவபெருமானே. காதலர்கள் இன்பமடைவதற்குக் காரணம் சிவன் அவர்களுடன் உடனாய் நிற்பதே யாகும். ஐந்தில் அமர்ந்திருப்பவன் என்பது ஐந்தெழுத்தில் அமர்ந்திருக்கிறான் என்றும் பொருள் கொள்ளலாம்.”

“சிவனடியார்களே, அன்பு தான் சிவம். அன்பு கொண்டால் மன்னிக்கும் குணம் உண்டாகும். இது அடக்கம் எனப்படும். சிவனை இலகுவாக வழிபட உயிர்கள் மீது அன்பு செலுத்துதல் வேண்டும். மனைவி கணவன் மீது செலுத்துமத் அன்பும் கணவன் மனைவி மீது செலுத்தும் அன்பும் சிவனைச் சென்றடையுமென்று உபநிடதங்கள் கூறுகின்றன. காதலர் அதாவது கணவன் மனைவி அன்பு வசப்பட்டால் அந்த அன்பில் சிவன் கூடி

நின்று இன்பத்தை அதிகரிப்பான். அன்பில்லாமையால் தான் சேர்ந்த காதலர் பிரிக்கின்றனர். கதிரேசனும் மனைவியும் அன்பு மிக்கவர்கள். அத்துடன் ஏனைய உயிர்கள் மீதும் கொண்டவர்கள். ஆவர் பறவைகளுக்குத் தானிய மிடுவார். மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட மூத்தோருக்கும், அனாதரவான நாய் போன்ற விலங்குகளுக்கும் உணவிடுவார். பிற உயிர்கள் மீது அளவுக்கதிமாக நேசிப்பார். குமாரசாமி பிச்சைக்காரர்களுக்குக் கூட உதவமாட்டான். பெற்றோரையும் விரும்பமாட்டான். அப்படியானவன் எப்படி மனைவி மீது அன்பு கொள்வான். நிம்மதியாகவும் இன்பமுடனும் வாழும் குடும்பத்தினர் அன்புள்ளம் கொண்டவர்களாக இருப்பர்''. ஏன்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**403. உற்று வனைவான் அவனே உலகினைப்**

**பெற்று வனைவான் அவனே பிறவியைச்**

**சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை**

**மற்றும் அவனே வனையவல் லானே**

''சிவனடியார்களே, மாயயிலிருந்து உலகைப் படைத்தவன் சிவபெருமான். அவனே ஆருயிர்களுக்கு வினைக்கீடாகப் பிறவிகளைக் கொடுப்பவன். ஓர் அறிவு முதல் ஆறு அறிவுள்ள உயிர்களுக்கு உடல்களைக் கொடுப்பவனும் அவனே. அவன் படைத்தருளும் எட்டு

உறுப்புக்களோடு கூடிய நுண்ணுடம்பு மலத்துடன் படைக்கப்பட்ட இயற்கை உடம்பாகும். சிறப்புடம்பு நால்வகைத் தோற்றத்து வினைக்கீடாக அமையும் உடம்பாகும். வினைக்கீடாகச் செய்ய வேண்டிய தொழிலுக்கு வாய்ப்பான உடம்பு. இது செயற்கை உடம்பாகும். இவ்வுடம்புகள் இரு வினைக்கீடாகப் பல்வேறு வகையாகக் கொடுக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாகக் குயவன் பெரிய சிறிய குடம் சட்டிபானை முதலியவற்றைச் செய்து வைத்திருத்தலைப் போன்றது''.

''சிவனடியார்களே, மாயையிலிருந்தே உலகம் படைக்கப்பட்டதால் அது மாயத் தோற்றங்களைக் கொண்டது. வினைக்கீடாக உடம்புகள் இறைவனால் கொடுக்கப்படுகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவுள்ள உயிர்களுக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட உடல்கள் இயற்கை உடம்பென்றும் சிறப்புடம்பென்றும் சொல்லப்படும். செயற்கை உடம்பு இருவினைக் கேற்பப் பல்வேறு வகையாகச் சிவபெருமானால் கொடுக்கப்படும் . இது சிறிய பெரிய குடும்பங்களுக்கேற்றது போலக் குயவன் செய்யும் பாத்திரங்களை ஒத்தது'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**404. உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி**
**வெள்ளுயி ராகும் வெளியாய் நிலங்கொளி**
**உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரந்**
**தள்ளுயி ராவண்ணந் தாங்கிநின் றானே.**

“சிவனடியார்களே, உயிர் மூச்சாகவும் அம்மூச்சின் நிலைக்கனமான உடலாகவும் கலப்பு முறையில் நின்று நிறையும் பெருமைமிக்கவன் நந்தியாகிய சிவபெருமான். மலம் நீங்கிய உயிர் வெள்ளுயிர் எனப்படும். அவ்வுயிருக்கு இடங் கொடுத்தருளுபவன் சிவபெருமான். உயிருக்குள் உணர்வாய் நிற்பவனும், உயிரை உடலாகக் கொண்டு வீற்றிருந்தருளும் விழுப்பொருளும் சிவனே”

“சிவனடியார்களே, சிவபெருமான் உயிரிலும் அதுபெற்ற உடலிலும் கலந்து நிற்பவன். அதனால் மலங்கள் நீங்கிய உயிர் அவனது திருவருளுள் கலந்து நிற்கும். அவ்வாறு கலக்கும் உயிர்களின் உணர்வாகவும் இருப்பவன் சிவபெருமான். அதனால் தான் திருவருளோடு கலந்து இருக்கும். உயிர்களுக்கு சிவ நினைவைத்தவிர வேறு நினைவுகள் வருவதில்லை. மலம் நீங்காத உயிர்களுள் சிவன் கலந்து நிற்பானே தவிர திருவருளோடு கலக்காத உயிர்களை அதாவது மலம் நீங்காத உயிர்களை மீண்டும் பிறப்புக்குட்படுத்தி விடுவான்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**405. தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்**
**வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை**
**ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி**
**தாங்கிநின் றானும்அத் தாரணி தானே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் பல்லுயிர்களிலும் கலந்து நின்று காத்தருளுகிறார். பேரொடுக்கத்தின் போதும் பல்லுயிர்களையும் தன்னுள்த்தாங்கின் காப்பாற்றுகிறான். இந்த வகையில் செறிவு நெறியையும் அதன் வழியாகப் பெறப்படும் அறிவு நெறியையும் காப்பவர் சிவபெருமான். அவ்வுலக இன்ப நிறைவும் அவனே ஆவான்”.

“சிவனடியார்களே, சிவன் தான் ஐந்தொழில்களையும் செய்வோரின் உள்நின்று அவ்வவ் தொழில்களைச் செய்விக்கிறான். ஓவ்வொரு உயிரிலும் உள்நிற்பதால் அவ் உயிர்களின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றுகிறான். காத்தல் என்று சொல்லும் போது ஓர் உயிருக்கு வினைகளால் வரும் இடர்களைக் களைவதேயாகும். கதிரேசன் அடிக்கடி சொல்வார்,“நான் எங்கு சென்றாலும் எனது தெய்வமான சிவனை அழைத்துச் செல்வேன். அவன் எனது பிரயாணங்களின் போதும், முக்கிய நிகழ்வுகளின் போதும் என்னுடன் இருப்பதால் என்னை அவன் எந்நேரமும் காத்துக் கொள்கிறான். தவறான முடிவுகள் எடுக்க விடாது

காக்கிறான். வழமை போல நான் சென்ற வருடம் நெல் விதைக்க ஆயத்தமான போது ஒரு சந்நாசியார் எனது வீட்டுக்கு வந்து,“ மகனே நீ சிவபக்தன். நான் இவ்வழியால் அடுத்த ஊரில் உள்ள சிவனைத் தரிசிக்கச் சென்ற போது சிவன் உன்னைச் சந்தித்து விட்டுவா என்றார். அதனால் வந்தேன். நாளை நெல்லை விதைக்காதே. ஐந்து நாட்கள் கழிய விதை” என்று கூறிவிட்டுச் சென்றார். மறுநாள் இரவில் இருந்து பத்துத்தினங்களுக்கு பெருமழை பெய்ததால் விதைத்தவர்களின் நெல்லை வெள்ளம் தள்ளிச் சென்றுவிட்டது. இப்படிச் சிறுசிறு நட்டம் எனக்கு ஏற்படுவதைச் சிவன் தடுத்துக் காத்து விடுவார். இப்படி எத்தனையோ விடயங்களைச் சொல்லலாம். எனது மகனது விருப்பப்படி நான் ஒரு பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்ய நினைத்தேன். சிவன் எனது கனவில் வந்து ஆறு மாதம் கழித்துத் திருமணத்தைச் செய் என்றார். திருமணநாள் குறித்த பின் கனவு கண்டதால் பொண் வீட்டாருக்குச் சொல்லி ஆறு மாதங்கள் கழியத் திருமணத்தைச் செய்வோம். என நினைத்தேன். மூன்று மாதங்கள் கழிந்தன. அந்தப் பெண் தனது காதலனுடன் சென்று விட்டாள். அப்பெண்ணின் சகோதரனுடன் எனது மகன் வேலை செய்ததால் நட்புக் காரணமாக அவளைச் செய்ய விரும்பினான். இப்படி எத்தனையோ விடயங்களைச் சொல்லலாம்” என்பார். இதிலிருந்து

சிவன்தான் உயிர்களைக் காக்கிறான் என்று தெரியவில்லையா?'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**406. அணுகினுஞ்சேயவன் அங்கியிற் கூடி**

**நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்**

**பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்**

**தணிகினும் மண்ணுடல் அண்ணல்செய் வானே**

''சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்களுடன் கலப்பால் ஒன்று கூடி இருந்தாலும் அவ்வுயிர்களின் சிற்றறிவுக்கும் சுட்டறிவுக்கும் எட்டாதவனாகவே இருக்கிறான். உயிர்கள் உயிர்ப்புப் பயிற்சியால் மூலத் தீயுடன் ஒன்றித் திருவருளால் மேல் நோக்கிச் செல்லுதல் வேண்டும். அப்படிச் சென்றால் ஞானத்தைச் சிவபெருமான் அருளுவார். அப்படி அருளிய போதும் அவ்வுயிர்களால் சிவனைக் காண முடியாது. உயிர்களோடு கலந்திருந்தாலும் பொருள்த் தன்மையால் வேறானவன். அவன் மலங்களை அழிப்பதற்காகவே உடலைப் படைத்தான். அருள் வழி நிற்பவர்களின் மலங்கள் அவனால் அகற்றப்படும். மூலம் அகன்றால் திருவருள் அவர்களைச் சிவனது திருவடியிற் சேர்க்கும்''.

''சிவனடியார்களே, ஒரு நாள் குமாரசாமி நன்றாக மதுவைக் குடித்துவிட்டுச் சிவன் கோவிலுக்கு வந்து கதிரேசனைப் பார்த்து,''சிவன் தான் எல்லாம் செய்வதாகச்

சொல்கிறீர்கள். நீங்கள் சிவனைக் கண்டீர்களா? கண்டால் எனக்குக் காட்டுங்கள். ஏன் சிலரை ஏழைகளாய்ப் படைத்தாய் என்று கேட்கவேண்டும்'' என்றான்.

''கதிரேசனுக்கு அவனுடன் கதைக்கப் பிடிப்பதில்லை. இருந்தும் உள்ளுணர்வு அவனுக்கு விளக்கம் சொல் என்றது. '' குமாரசாமி, உலகில் பலவற்றைக் காணமுடியாது. உனது தாயாருடன் கூட இருக்கிறாய் அவள் உன்மீது செலுத்தும் அன்பைக் கண்டாயா..? காற்றைக்கண்டாயா…? மலர்களின் நறுமணத்தைக் கண்டாயா..? சுவையான உணவின் சுவையைக் கண்டாயா…? இவற்றை யெல்லாம் அனுபவ அறிவின் மூலம் உணருதல் வேண்டுமே தவிரக் கண்ணால் காணமுடியாது. பேய்தேவதைகளை நம்பும் நீ அவற்றைக் கண்டாயா….? நம்பிக்கை தான் வாழ்வு. பலர் சகுனங்களை நம்புகின்றனர். பலர் சோதிடத்தை நம்புகின்றனர். அதுபோல பலர் கடவுளை நம்புகின்றனர். அவர்களது நம்பிக்கை அவர்கள் செய்யும் தொழில் தங்கியுள்ளது. நான் சிவனால் தான் எல்லாம் நடக்கிறது என்கிறேன். நீ இல்லை என்கிறாய். நூன் உனது நம்பிக்கையில் தலையிடாதது போல நீ எனது நம்பிக்கையில் தலையிடாதே. சிவன் நேரடியாகவும் உதவுவான். இன்னொருவர் மூலமும் உதவுவான். இது அனுபவபக்பட்டால் தான் புரியும். சிவன் உயிர்களோடு கலந்திருந்தாலும் அவ் உயிருக்குப் புலப்படாதவன்.

அவனை உணர்வுகளால் தான் உணரமுடியும். சுவையைக் காணாது சுவையென்று சொல்லி மகிழ்வது போலச் சிவனை காணாத போதும் உணர்வுகளால் காண்பவன் தான் மனிதன். அதற்காகத் தான் ஆறாம் அறிவு கொடுக்கப்பட்டது'' என்றார். அது உண்மை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## அழிப்பு.

**407. அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது**
**அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது**
**அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது**
**அங்கியவ் வீசற்குக் கைஅம்பு தானே.**

''சிவனடியார்களே, சிவபெருமான் அங்கியாகிடு மெய்யுணர்வுத் தீயினைக் கொண்டு பேரொடுக்கத்தை நிகழ்த்துவான். அதுபோல ஆர்ப்பரிக்கும் அலைகடலையும் ஒடுக்கியவன். அதனால் மெய்யுணர்வென்ற தீ எப்பொருளும் அவனிடம் நிலை கொண்டுள்ளது. முப்புரத்தசுரர் களையும் ஒடுக்கியவன் சிவபெருமான்.''

''சிவனடியார்களே, சிவபெருமான் மெய்யுணர்வுத தீயால் பேரொடுக்கத்தை செய்தவன். அத்துடன் பேரொடுக்கத்தின் போதும் அதன் பின்பும் எல்லாப்

பொருட்களும் அவனிடம் தங்கியிருந்தே வெளிப்படுகின்றன. பேரொடுக்கம் என்ற அழிப்புக்கு முன் எல்லாப் பொருட்களும் சிவனைச் சென்றடையும். அதன்பின் அவனிடமிருந்து அவை வெளிப்படும். தீமைகள் செய்த முப்புர அசுரர்களை அழித்த சிவபெருமான் எப்பொழுதும் தீயவற்றை அழிப்பார். ஒரு நாள் நடராசா என்ற ஒரு கூலித்தொழிலாளி தனக்குக் குமாரசாமி பல நாட்களாக வேதனம் தரவில்லை என்று கதிரேசனிடம் முறையிட்டார். அதற்குக் கதிரேசன் சொன்னார்,‘‘எல்லாம் சிவனது திருவிளையாடல் தீயவற்றை அழிக்கின்ற சிவன் உனது வேதனத்தைத் தருவான்’’ என்று கூறினார். இரண்டு நாட்கள் கழிய குமாரசாமி நடராசாவின் கூலிப் பணத்தைக் கொடுத்தான். அதற்குக் காரணம் குமாரசாமி தனது நண்பனுடன் குடித்து விட்டு வெறியில்,‘‘ என்னைவிடப் பணக்காரன் யாரும் இல்லை’’ என்று கூற அவனது நண்பன் சொன்னான்,‘‘ அன்றாடம் பிழைத்து உண்பவர்களின் கூலியைக் கொடுக்காவிட்டால் நான் பெரும்பணக்காரனாகியிருப்பன். கூலிக்காரனின் கண்ணீர் அந்தக் குடும்பத்தைக் குலைத்து விடும். குணநாதன் கூலிக்காரர்களுக்குச் சரியாக வேதனம் கொடுப்பதில்லை. அவனது வர்த்தக நிலையம் மின்னொழுக்கால் எரிந்து சாம்பலாகி விட்டது. இப்போ அவன் சாப்பாட்டுக்கே திண்டாடுகிறான். சிவபெருமான் தீயவர்களை ஏதோ ஒரு வகையில் தண்டிப்பார் என்று கூறியதைக் கேட்டு

குமாரசாமி பயந்து விட்டான்.பயத்தை உண்டாக்குபவன் சிவன்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்

**408. இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பாந்த**

**நிலையன் றழிந்தமை நின்றுணர்ந் தேனால்**

**உலைதந்த மெல்லரி போலும் உலகம்**

**மலைதந்த மானிலந் தான்வெந் ததுவே**

"சிவனடியார்களே இலயங்கள் என்றால் ஒடுக்கங்கள். அவை மூன்று வகைப்படும். அவை நாளொடுக்கம்,ஊழியொடுக்கம், பேருழியொடுக்கம் என்று சொல்லப்படுகிறது. ஊழி முடிவின் போது உலகம் அழிந்தமையை அவனருளால் உணர்ந்தேன். உலையிலிட்ட அரிசி நல்ல முறையில் உணவாவது போல உலக உயிர்கள் நல்ல முறையில் வாழ்வதற்காகச் சில மண்ணுலகங்கள் அழியும். இது சிற்றூழி முடிவில் மான் என்று சொல்லப்படும் மூலப் பகுதியால்நடைபெறும். மூலப்பகுதி தூவாமயையில் இருந்து தோன்றிய கலையில் இருந்து தோன்றும். கலையினை உழைப்பு மெய் என்பார். மூலப் பகுதியே காமம் வெகுளி மயக்க விளைவுகள் ஆகமம் மூலப்பகுதியால் கலை மல ஆற்றலில் சிறிது நீங்குதலும் உயிராற்றலை விளக்குதலும் ஒருங்கு செய்யும்.''

“சிவனடியார்களே இப் பாடல் மூலம் தாம் சிவபெருமான் மூலம் உணர்ந்தவற்றை திருமூலர் எமக்கு விளக்குகிறார். ஊழிக்காலம் என்பது உயிர்கள் சிவபெருமானிடத்தில் ஒடுங்கும் காலம் அரிசி உணவாக மாற தன் நிலை அழிவது போலத் தீமைகளை அகற்றி நன்மைகளை உண்டாக்குவதற்காகச் சில மண்ணுலகங்கள் அழிக்கப்படுகின்றன. என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**409. பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்**

**உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாங்**

**குதஞ்செய்யும் அங்கி கொளுவியா காசம்**

**விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் சிறப்புற்று இன்பமாக வாழ்வதற்குப் பூவுலகம் துணை செய்வதால் இதை பதஞ்செய்வார் என்று ஞானிகள் அழைப்பர். இவ் மன்னுலகம் குளிர்ந்த மேகங்கள் தங்கும் பெருமலைகள் எட்டையும், ஓசை எழுப்புகின்ற ஏழு கடல்களையும் கொண்டன. இவையெல்லாம் திருவருளின் இயக்கத்தால் தோன்றியவை. இவற்றைக் காணும் தோறும், கேட்குத்தோறும், கேட்பிக்கும் தோறும், கேண்மையுறுந்தோறும் நுகரும் தோறும் அளவில்லாத மகிழ்ச்சி அனைத்துயிர்களுக்கும் உண்டாகும். பேரொடுகக்காலத்தில் சிவபெருமான் சிவஞான அனலால்

ஒடுக்குகிறான். இது கண்களுக்குப் புலனாகாது. அதுபோல மாயா காரியமாகிய உலகம் தன்காரணமாகிய மாயையில் உளதாய் ஒடுங்கித் தோற்றமில்லாததாய் இருக்கும். இதனைத் திருவருளால் உணரலாம். ஊணர்ந்தவர்களுக்கு வியப்பு ஏற்படாது''.

''சிவனடியார்களே, மலைகளையும் ஆறுகளையும் மரம் செடி கொடிகளையும் பிராணிகளையும் சிவபெருமான் ஆருயிர்களுக்காகவே படைத்தருளினான். அவற்றை நாம் கேடில்லாத முறையில் அனுபவித்து இன்பங் காணுதல் வேண்டும். ஆருயிர்கள் இன்பமடைவதற்காகத் தான் சிவபெருமானால் மண்ணுலகம் படைக்கப்பட்டது. இதை உணர்தவர்கள் திருவருளின் துணையோடு இன்பமாக வாழ்வர். இது மாயம் மிகுந்த உலகம். பல தீயவற்றை நல்லவையாகச் காட்டி மனதை மயக்கும். அதைத் திருவருளால் தான் உணரமுடியும். மனிதர்கள் தம்முயிரைப்போல பிற உயிர்களையும் நேசித்தால் அவர்களால் தீமை செய்யமுடியாது. இறைவன் மிருகங்களைப் படைத்தது மனிதர்களுக்குத் உதவி செய்யவே. பிற பொருட்களையும் படைத்தது பூவுலகில் வாழ்வோர் இன்பமாக வாழ்வதற்காகவே. ரவீந்திரன் ஆசிரியர் தனது மாணவர்களுக்குச் சொல்வார்,'' இறைவன் படைத்த பொருட்களுக்குத் தீங்கு செய்யாது அதனிமிருந்து உதவிகளைப் பெறுங்கள். எருதைக் கொண்டு வண்டியை இழுங்கள். வயலை உழுங்கள். பசுவில் இருந்து பால் தயிர் மோர்

வெண்ணெய் என்பவற்றைப் பெறுங்கள். அதை வருத்தாதீர்கள்.'' என்பார். அழித்தல் என்பது சிவபெருமானால் செய்யப்படவேண்டுமே தவிர வேறு எவராலும் செய்யப்படக் கூடாது'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**410. கொண்டல்வரைநின் றிழந்த குலக்கொடி**
**அண்டத்துள் ஊறி யிருந்தெண் டிரையாகி**
**ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்**
**குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே**

''சிவனடியார்களே,மழை திருவருள் என்றே கூறப்படும் திருவருளால் இயக்கப்படும் கொண்டல் எனக் கூறப்படும் அம்மழை குலக் கொடி என்றும் உருவககிகப்படும். இம்மழை ஆறாக அருவியாக கடலாக அமைவதோடு பூமியை நிரப்பி மீண்டும் பூமியில் நின்று கிணறாக ஆறாகக் கடலாக நின்று உயிர்களுக்கு உதவுகிறது. அதனால் தான் ஓமகுண்டத்தில் அழல் தோன்றியது. அவ் அழலினைச் சிவபெருமான் தனது கையில் ஏற்றுக்கொண்டார்.''

''சிவனடியார்களே, சிவபெருமானின் திருவருள் தான் மழையாகப் பூமியை வந்தடைகிறது. அதனால் பூமி குளிரபூமியில் உள்ள உயிர்க்ளெல்லாம் இன்புறுகின்றன. மழை ஆறாக அருவியாகக் கடலாகப் பல்வேறு

உருவங்களில் பூமியில் தங்கியிருக்கிறது. ஒருமுறை கதிரேசன் வாழ்ந்த ஊரில் இரண்டு வருடங்களாக மழை பெய்யவில்லை. அதனால் மக்கள் பெருந்துன்பப்பட்டனர். மிருகங்கள் நீரின்றி மாண்டன. மரம் செடி கொடிகள் எல்லாம் காய்ந்து கருகின. இதனால் மனம் வருந்திய கதிரேசன் கிராமமக்களை அழைத்துச் சிவன் கோவிலில் பூசை செய்யச் சொன்னார்,"சிவனடியார்களே, இயற்கை சிலசமயங்களில் மாறுபாடடையும். அப்போது நாம் சிவனை வணங்குதல் வேண்டும். அவனது திருவருள்தான் மழை. மனம்தளராது சிவனை அன்புடன் பூசியுங்கள்" என்றார். மறு நாள் பெருமழை பெய்தது. உயிரினங்கள் எல்லாம் உற்சாக மடைந்தன. இயல்பு வாழ்க்கை திரும்பியது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**411. நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்**

**வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்**

**சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்**

**உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே.**

"சிவனடியார்களே, நித்திய சங்காரமாகிய நாளொடுக்கம் தினமும் நடைபெறுவது அஃது உறக்கத்தில் அறிவு அடங்கியிருப்பது. இவ் உறக்கம் பேருறக்கம். ஆருயிர்கள் இளைப்பாறும் பொருட்டு தொன்மையிலேயே அமைக்கப்பட்ட ஒழுக்கம். இது ஐவகை நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலை. ஆருயிர்

கருவிகளுடன் கூடித் தொழிற்படாது அறியாமையுடன் மட்டும் ஒட்டியிருக்கும் தொழிலற்ற உறக்கநிலை. இது சுத்த சங்காரம் எனப்படும்.உய்த்த சங்காரம் என்பது திருவருள் நோக்கத்து ஒடுங்கியிருக்கும். ஒருநிலை. அது தூவா மாயையின் விரிவனைத்தும் எண் கூற்றுப்பேரால் முடிக்கப்படும். தூவாமாயை முப்பத்தொரு மெய்களை உடையது. அவை நிலமுதல் மாயை ஈறாகக் கூறப்படும். இது எட்டுக்கூறுகளை உடையது. பூதமொன்று, பூதமுதலொன்று, அறிதற்கருவி ஒன்று, செய்தற்கருவி ஒன்று. அகலக்கலன் ஒன்று குணம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, போர்வை ஒன்று என்பனவாம். இப்பாகுபாட்டினைக் காரண உடம்பு எனவும், பரதேகமெனவும் கூறுவர். இவ் உடம்போடு கூடித் திருவருளில் ஒடுங்கியிருப்பதாகும். இவை அனைத்தையும் திருவுள்ளத் தான் இயற்றி அப்பால் நிற்கும் நிலைபரன் உண்மையாகும். உயர்ந்த சங்காரம் ஆருயிர்களை அருளில் ஒடுக்கமாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**412. நிந்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்**
**வைத்தசங் காரமும் மாயாசங் காரமாஞ்**
**சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்**
**உய்த்தசங் காரஞ் சிவன்அருள உண்மையே.**

“சிவனடியார்களே, நாளொடுக்கத்துள் நுண்ணுடல் பருவுடல்களாகிய இரண்டித்தும் ஆருயிர்கள் பற்றின்றி இருக்குமாறு செய்தலும் ஒன்று. நிலைப்பித்த ஒடுக்கம் மாயையின் பற்றை அகற்றி ஒடுக்குதல். இது மாயாசங்காரம் எனப்படும். இது ஆருயிர் தன்னளவில் நிற்கும் நிலையாதலால் சுத்த ஒடுக்கம் எனப்படும். இது மனத்தைக் கடந்து நிற்கும் நிலை. மனத்தைக் கடத்தல் என்பது மனத்தொழில் அகன்றநிலை. அருளில் ஒடுங்கல் என்பது உய்த்த சங்காரமாகும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**413. நித்தசங் காரங் கருவிடர் நீக்கினால்**
**ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்**
**சுத்தசங் காரம் அதீதத்துட் டோய்வுறல்**
**உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே**

“சிவனடியார்களே, நாளொடுக்கத்துள் பிறவிப்பெரும் துன்பமாகிய கருவிடர் நீக்குதல் மேலானது. அது நீக்கினால் உயிர் உடலோடு கூடி வாழ்ந்தாலும் அவ்வுளிர் பற்றின்றி வாழும். இது தோய்வுறாநிலை, சுழன்ற நிலை என்று கூறப்படும்”.

“சிவனடியார்களே, பிறவிக்குத் துன்பம் தருவது பற்று. பற்று என்பது ஆசையாகிப்பின் அவாவாக மாறும். ஆசை களுள்க் கொடியது காமஆசை. காமத்தின் மூலம்

பல்வேறு துன்பங்கள் உண்டாகும். ஆசைகளை நீக்கினால் உயிர் உடம்போடு கூடி வாழ்ந்தாலும் அதன் மீது பற்று வைக்காது. ரவீந்திரனைப் பெற்றோர் திருமணம் செய்யும்படி வற்புறுத்துகிறார்கள். ரவீந்திரனுக்குக் காமஆசை இல்லை. அதனால் பொருள்தேடும் ஆசைகளும் இல்லை. தான் பிறந்தது சிவத்தொண்டு செய்வதற்கே என்று கூறுகிறான். பிள்ளைகளுக்கு இலவசமாகக் கற்பிக்கிறான். பிள்ளைகள் கற்க உதவி செய்கிறான். அதுதான் அவனுக்கு இன்பம் சரவணன் மிகவும் வறியவன். அவனது மகனது கல்விச் செலவை ரவீந்திரன் பொறுப்பேற்றுள்ளான். அவன் இந்த வருடம் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானானான். அதனால் ரவீந்திரன் பெற்றோரை விட மகிழ்வடைந்தான். இது தோய்வுறாநிலை. உயிர் உடம்பின் மீது பற்று வைக்காத நிலை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**414. நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்**
**வைத்தசங் காரமும் மன்னும் அனாதியிற்**
**சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்**
**உய்த்தசங் காரமும் நாலாம் உதிக்கிலே**

''சிவனடியார்களே, நாளொடுக்கம் என்று சொல்லப்படுவதனுள் என்றும் நிலைத்த ஒடுக்கமாவது நீண்ட இளைப்பாற்றுதல் ஆகும். இது படைப்போனாகிய அயனது நாள் முடிவின் கண் நிகழ்வதாகும்.

ஆருயிர்களை இளைப்பாற்றுதற் பொருட்டுத் தொன்மையில் அமைந்த இடைநிலை ஒடுக்கம் நீண்ட ஒடுக்கமாகும். இது சுத்த சங்காரம் எனப்படும். பேரொடுக்கம் மாறா ஒடுக்கமாகும். நாளொடுக்கம் இடைநிலை ஒடுக்கம், போரொடுக்கம் என்பவற்றின் மேல் திருவடியில் கூடுதல் நாலாவது நிலையாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**415. பாழே முதலா எழும்பயிர் அப்பயிர்**

**பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் பாழாகா**

**வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்**

**பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே**

''சிவனடியார்களே, குணங்குறிகள் அற்ற வினைகளில் இருந்து நீங்கிய அறிவை உடையவன் சிவபெருமான். அவன் உண்மை அறிவுள்ள இன்பவடிவினன். அவனை வினை முதலாகக் கொண்டு மாயா காரியமாகத் தோன்றியது இவ் உலகம். இவ் உலகத்தில் தோன்றிய உயிர்கள் எல்லாம் உலகையும் உடல்களையும்பாழில் அதவாது சிவத்தில் ஒடுங்கும் அப்படி ஒடுங்கினாலும் அப்பாழ் பண்டைப் பாலாகாது பண்டைப் பாழ் என்பது மலம் நீங்காத நிலையில் ஊழிகளின் போது ஒடுங்குமிடம் மலம் நீங்கிய பின்பே உயிர்கள் பேரொடுக்கத்தில் ஒடுங்கும். நிலைத்த சிவவாழ்வினை கொடுக்காத ஒடுக்கம் என்பது அயன் அரி

என்னும் இருவரது ஆட்சிக்குள் நிகழும் ஒடுக்கமாகும். இவ்விருவரும் ஊழிகளிலும் உயிர் திருவடிப்பேறு அடையாது ஒடுங்கியிருக்கும் நிலையே பாழ் நிலையாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**416. தீயவை தார்மின்கள் சேரும் வினைதனை**

**மாயவைத் தான் வைத்த வன்பதி ஒன்றுண்டு**

**காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்**

**ஆயம்வைத் தானுணர் வாரவைத் தானே.**

''சிவனடியார்களே எஞ்சிய வினையை சிவகுருவின் திருப்பார்வை எரியுண்ட வித்தைப் போலாக்கும். எரியுண்ட வித்து முளைத்துப் பயன் தராதது போல சிவகுருவின் திருப்பார்வையால் எரியுண்ட வினை தீங்கு செய்யாது. ஊழ்வினையை சிவனது திருவடியைத் துதிப்பதன் மூலம் உடலோடு அமையுமே தவிர உள்ளத்தில் ஒட்டாது. அவர்களைத் தொடரவும் மாட்டாது.''

சிவனடியார்களே செய்த பாவங்களால் ஏற்பட்ட வினைகள் ஆருயிர்களைப் பிடித்து துன்பப்படுத்தும் சிவ நினைவு அகற்றும் அகற்றிய பின்பு வினைகள் எஞ்சியிருந்தால் அவ் வினை குருவால் அகற்றப்படும். கதி வீட்டிற்குச் சென்றால் அங்கு எப்போதும் சிவனடியார்கள் கூடியிருப்பதைக் காணலாம். அவர்களுள் குருவாக இருப்பவரை கதிரேசன் காணும் போதெல்லாம் வணங்கி அவருக்குச் சேவை செய்வார். அவரை

ஆசனத்தில் அமர்த்தி அவரது கால்களைச் சுத்தமான நீரினால் கழுவி சுத்தமான பட்டால் துடைத்து தூபதீபங்காட்டி வழிபடுவார். அதனால் அவருக்கு எதிலும் பற்றிராது. கல்லையும் பொண்ணையும் ஒன்றாக மதிக்கும் தன்மை அவருக்குண்டானது. இந்த நிலை அவருக்கு குரு வழிபாட்டால் உண்டானது. சிவனே குருவாக வருவதாகச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றனார்.'' என்றனர் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## மறைப்பு

**417. உள்ளத் தொருவனை உள்ளுலு சோதியை**
**உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளயம் அவனை உருவறி யாதே.**

''சிவபெருமான் உயிருக்குயிராக உள்ளத்தில் நீங்காது வீற்றிருப்பதால் அவரை உள்ளத்துள் ஒருவன் என்கிறோம். அவன் உள்நின்று சோதியானவன். அவன் தன் சிறப்பால் ஆருயிர்களது உள்ளம் முழுவதையும் இடைவெளியின்றி நிரப்பியுள்ளான். இப்படிச் சிவன் இருந்த போதும் உயிர்கள் தமது சிற்றறிவினாலும் சுட்டறிவினாலும் அவனைக் காணமாட்டாது. முற்றறிவினால் அவனைக் காணலாம்.அதைச் சிவன் வெளிப்படுத்த வேண்டும். அவன் வெளிப்படுத்தாமல்

இருப்பதை மறைப்பு அருள் என்று கூறுவார். சிவன் தன்னைக் காட்டாத நிலையில் உயிர்கள் அவனைக் காணமாட்டாது. அவனது உண்மை நிலையை அறிய மாட்டாது.''

''சிவனடியார்களே கதிரேசன் சொல்வார் எனக்கு சிவ நினைவைத் தவிர வேறு எந்நினைவும் இல்லை. சிவனருளால் எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சிவநினைவுடன் மகிழ்வாக வாழ்கின்றனர். அதனால் நான் நினைவுகளின்றிச் சிவனுடன் இருக்கிறேன். என்உள்ளம் முழுவதையும் இடைவெளியின்றி சிவன் நிரப்பி-இருக்கிறான். இருப்பினும் அவனை நான் காணவில்லை. முயற்சித்தும் பயனில்லை. இதை எனது குருவிற்கு சொன்ன போது அவர் சிரித்தார். ''கதிரேசு அவனாகக் காட்சி தந்தால் தான் நாம் காணலாம். உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அவன் செயற்படுவான். நீ முழுமையான சிவபக்தன். கவலை கொள்ளாது அவனது திருவடிகளை நினைத்துக் கொண்டே இரு. கட்டாயம் காட்சி தருவான்.''என்கிறார். அவனது தரிசனத்தை எதிர் பார்த்திருக்கிறேன் என்பார். ஆகவே சிவனடியார்களே எந்த விதமான சிந்தனைகளும் இன்றி அவனது திருவடிகளைச் சிந்தியுங்கள். நீங்கள் நினைப்பது நடக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**418. இன்பப் பிறவி படைத்த இறைவனுந்**
**துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்**
**என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை**
**முன்பிற் கொளுவி முடிகுவ தாமே**

“சிவனடியார்களே திருவடி இன்பம் பெறுவதற்கு வாயிலாகக் கொடுக்கப்பட்டதே மனிதப் பிறவி அதனால் அந்தப் பிறவி இன்பப் பிறவி என்று சொல்லப்படுகிறது. அதாவது பேரின்பத்தை என்றும் தருகின்ற சிவனது திருவடியை அடையும் பிறவி இன்பத்தைப் படைத்த சிவனே துன்பத்தைப் படைத்துள்ளான். இதை ஆருயிர்கள் உணர்ந்து செயற்படல் வேண்டும். இவ் உடம்பு எலும்புகளை தசையால் இணைத்து வலிமையுடையநரம்புகளால் தொடுத்து தோலால் மூடியமைத்ததொன்றாகும்.

“சிவனடியார்களே, எலும்புகளையும் தசைகளையும் நரம்புகளையும் பிணைத்துத் தோலால் மூடிய இவ்வுடம்புக்கு சிவன் உயிரைக் கொடுத்துத் தானும் கூட இருக்கிறான். மனிதப் பிறவி உயர்ந்த பிறவி. இன்பங்களையும் துன்பங்களையும் படைத்த சிவன் மனிதர்களுக்கு ஆறாம் அறிவான பகுத்தறிவையும் கொடுத்துள்ளமையால் இன்பப்பிறவி என்று கூறப்பட்டது. சிவனடியாரான கதிரேசன் சொல்வார்,“ இளமையில் உழைத்தல் வேண்டும். பின் குடும்பத்தனாகிப்

பிள்ளைகளைப் பெறவேண்டும் அதன் பின் அவர்களைக் கரை சேர்த்துவிட்டுப் பேரின்ப நிலையை அடைய முயற்சிக்க வேண்டும். பிறப்பற்ற நிலையே பேரின்பநிலை. கடமைகளை முடித்து விட்டுச் சிவ நினைவுடன் இருப்பவர்களின் துன்ப துயரங்களைச் சிவன் கவனிப்பான் என்றிருப்போர்க்குத் துன்பங்கள் வராது. எனது மூத்த மகன் விபத்துக்குள்ளானான். நான் சிவநினைவுடன் இருந்ததால் நான் அவனைச் சென்று பார்க்குமுன் அவன் வீட்டிற்கு வந்துவிட்டான். விபத்தென்றதும் நான் சிவனை நினைத்தேன். எனது குரு அப்போது வந்து உங்கள் மகன் வந்துள்ளார். சென்று பாருங்கள்'' என்றார். எனது மகனுக்கு விபத்தேற்படவில்லை. எனது மகளின் பெயர் உள்ள ஒருவனே விபத்துக்குள்ளானான். அதனால் நான் எதையும் பெரிதாக எடுப்பதில்லை''. என்று சொன்னவர். அதனால் அவர் எப்போதும் இன்பமாக வாழ்கிறார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**419. இறையவன் மாதவன் இன்பம்' படைத்த**

**மறையவன் மூவரும் வந்துடன் கூடி**

**இறையவன் செய்த இரும்பொறி யாக்கை**

**மறையவன் வைத்த பரிசறி யாதே**

“சிவனடியார்களே, சிவபெருமான் படைத்தருளிய உடம்புள் அவர் படைத்த பின்பே அரனும், அரியும், அயனும் வந்து கூடினர். அவ்வாறு கூடச்செய்தவன் சிவபெருமான். இருப்பினும் சிவபெருமான் தான் படைத்த உடம்பின் கண் புகுத்திய திருவுள்ளக் குறிப்பினை அம் மூவரும் அறியார். சிவன் வினைப் பயனை நுகர்வித்தற் பொருட்டு தன்னை மறைத்து வைத்திருக்கும் திருவருளினை உடையவன் என்பதால் சிவபெருமானை மறையவன் என்றனர். முத்தேவரும் மறைப்பினுட்படுவர் அதனால் அவர்களும் சிவனை அடையமாட்டார்கள்.

“சிவனடியார்களே, உயிரோடு சிவன் கலந்திருப்பான். அத்துடன் அரன், அரி, அயன் ஆகிய முத்தேவர்களும் சிவபெருமான் படைத்த உடலினுள் உயிருடன் கூடியிருப்பார். இருப்பினும் உயிரும் முத்தேவர்களும் சிவனை அறியமாட்டார்கள். அன்போடு அவன் திருவடிகளை நினைத்துப் பஞ்சாட்சரமந்திரத்தை உச்சரிப்பவர்கள் தான் அவனின் நினைவோடு இருப்பதால் அவனைப்பற்றி அறிவார்கள்”.

“ரவீந்திரன் சொல்வான், “நான் சிவநினைவோடு தான் எந்தச் செயலையும் செய்வேன். சிவன் என்னுள் இருந்து வழி நடத்துகிறான். செயல்களைச் செய்விக்கிறான். தான் இருப்பதை உணர்த்துகிறான். இருப்பினும் காட்சி தருகிறானில்லை. காட்சி தராவிட்டாலும் என்னை நன்னெறிப்படுத்திச்

சிவகைங்கரியங்களில் ஈடுபடுத்துகிறான். செயல்களை வெற்றிபெறச் செய்கிறான். இதுபோதும்'' என்பான். ''சிவனடியார்களே, உங்களுக்கு ஓர் உதவி தேவைப்படும் போது அவ்வுதவி சிவனின் செயலால் தான் உங்களுக்குக் கிடைக்கிறது. அப்படியானால் சிவன் உங்களை அறிந்து வைத்திருக்கிறார். அவர் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**420. காண்கின்ற கண்ணொளி காதல்செய் தீசனை**

**ஆண்டெண் அலியுரு வாய்நின்ற ஆதியை**

**ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திடச்**

**சேண்படு பொய்கைச் செயலணை யாரே.**

''சிவனடியார்களே, சிவபெருமான் தன்னைக் கண்டு மகிழ்வதற்காகவே கண்ணொளியை எமக்களித்தான். அத்துடன் தானும் ஆண், பெண் , அலி என்னும் திருவுருவம் கொண்டருளினான். அலி என்பது அருவுருவத்திருமேனி. அவன் ஆதியாகிய அம்மையுடைய கலப்பால் சிவபெருமானானவன். சிவ உணர்வுடன் சுவைத்துண்ணும் நாவே நன் நாவாகும். அத்தகைய உணவினை ஏற்றுக் கொள்ளும் நெஞ்சமே நல்ல நெஞ்சமாகும். அத்தகையார் திருவருளால் சிவனை உணர்பவர்களாவார்கள். உணர்ந்தவுடன் பிணிப்புக்கள்

எல்லாம் அகன்றுவிடும். நிலையில்லாத உலக நினைவுகள் அவர்களது மனதை விட்டு அகன்றுவிடும்''

''ரவீந்திரனின் தகப்பனின் தொல்லையைத் தாங்க முடியாத கதிரேசன் பாடசாலைக்குச் சென்று ரவீந்திரனைச் சந்தித்துச் சொன்னார்,''மகனே, உனது தந்தை நீ திருமணம் செய்யாததால் பெருந்துன்பப்படுகிறார். அவரின் துயரைத் தீர்ப்பது மகனான உனது கடமை. திருமணம் சிவ நினைவைக் குலைக்காது. நல்லதொரு பெண் தவவாழ்விற்கு உறு துணையாக இருப்பாள். எனது மனைவியின் அன்பு தான் என்னைச் சிவனடியானாக்கியது. சிவபெருமானுக்கு உமாதேவியாரின் துணைதான் சகலசக்திகளையும் கொடுக்கிறது. அவன் ஆதியாகிய அம்மைப்படியுடன் இரண்டறக் கலந்துள்ளான். தவவாழ்விற்குத் தகுதியான தூய உணவினைச் சுவைத்துண்ணும் நாவே நன் நா என்பவர்கள். அது தேவார திருவாசகங்களையும் ஓதும் நாவையும், முறைப்படி சமைத்த உணவை உண்ணும் நாவையும் குறிக்கும். நல்ல மனைவியால் தான் சிவ உணர்வுடன் உனக்குச் சமைத்துத்தரமுடியும். அத்தகைய உணவை மகிழ்வுடன் ஏற்கும் மனமே நல் மனமாகும். அத் தகையமனமுடையவர்களே சிவனுக்குப் பிரியமானவர்களாவர். அதனால் நீ திருமணம் செய்ய வேண்டும்'' என்றார் அதை ரவீந்திரன் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டான்.''என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**421 தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்**

**அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானுஞ்**

**சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்**

**இருளும் அறநின் றிருட்டறை யாமே**

"சிவனடியார்களே மண்ணுலக மக்களுக்கும், விண்ணுலக தேவர்களுக்கும் தனது திருவருளால் இன்பத்தை அருளுபவன் அம்மை அப்பராகிய சிவபெருமான். வளர்வதும் தளர்வதுமாகிய தன்மை சுருள் எனப்படும். அத்தகைய தன்மையுள்ள சந்திரனும், சூரியனும், வெப்பமான தீயும், இவற்றால் போக்கப்படும் புற இருளும் முற்றும் அடங்கத் திருவருள் தோன்றும். ஆயினும் சிவ நினைவில்லாதவர்களுக்குத் தன்னைக் காட்டாமையால் அவ்விருள் இருட்டறை போன்று மறைப்பினைச் செய்யும். இருட்டறை என்பது அக இருட்டாகிய ஆணவத்தை அறுக்கும் பொருளாகும்".

"கதிரேசன் ரவீந்திரனுக்குச் சொன்னார்,"ரவி, மண்ணுலக மக்களுக்கும், விண்ணுலகத் தேவர்களுக்கும் தமது திருவருளால் இன்பத்தை அளிப்பது அம்மை அப்பராகிய சிவபெருமான். அவர் தனித்திருந்து வரங்களைக் கொடுப்பதில்லை. அம்மையுடன் சேர்ந்தே கொடுக்கிறார். சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்று நீ அறியாதவன் அல்ல. இப்போது நீ உனது உழைப்பைக்

கொடுக்கிறாய். அறிவைக் கொடுக்கிறாய். ஓர் அடியவன் வந்து பசிக்கிறது ஏதாவது உண்ணத்தா என்று கேட்டால் உன்னால் கொடுக்கமுடியுமா? இதற்கல்ல இன்னும் பல விடயங்களுக்காகத்தான் திருமணம் சிவபெருமானால் நிறைவேற்றி வைக்கப்படுகிறது. சிவனடியானான நீ இவற்றை உணருதல் வேண்டும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**422. அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை**
**உரைக்கின்ற ஆசையும் ஒன்றோடொன**
**றொவ்வாய்**
**பர்க்கும் உருவமும் பாரகந் தானாய்க்**
**கரக்கின் றவைசெய்த காண்டகை யானே.**

''சிவனடியார்களே, நடப்பாற்றாகிய ஆதிவினைக்கீடாகத் துன்புறுத்துவது அருள் ஆகும். அவ் அருள் மாயா காரியமாகப் படைக்கும் பொருட்கள் பல. அவற்றுள் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற புலன்கள் ஐந்தாகும். இவற்றை நுண்மை எனவும், பூதமுதல் எனவும் தன் மாத்திரை எனவும் சொல்லப்படும். அவை போலப் புறப்பொருளில் இருந்து வரும் ஓசை உறு ஒளி சுவை நாற்றம் என்றும் ஐந்தும் புலன்களாகும். இவ்விரண்டும் புலன்கொளி, புலன் என்று சொல்லப்படும். புலன் கொளியானது புலனுடனும் கலந்து பற்றிக் கட்டளையிடும். அதை ஏற்றுப் புலன் கொளியும் கொண்ட புலத்தின் வண்ணமாக இருக்கும். அவ்வாறு இருப்பதற்கு அவா வினைக்கொடுப்பது மனம். எனவே ஐம்புலன்

கொளியும் மனமும் ஒன்றோடு ஒன்று ஒவ்வாத ஐம்பூத உடம்போடு உருவமாகக் கலந்திருக்கும். அது போல நிலவுலகிலும் பரந்திருக்கும். இவை அனைத்தையும் செயற்படுத்தும்ஆதியருள் இவற்றுடன் கலந்து மறைந்து நின்று அருள் புரியும். இவற்றைத் திருவுள்ளத்தால் சிவபெருமான் கண்டறிவார்.

‘‘கதிரேசன் சொல்வார், புலன்கள் ஐந்தையும்அருள் மாயையின் உதவியோடு படைக்கிறது. இப் புலன்களை புறப் பொருட்களில் இருக்கும் கவற்சி மாற்றமடையச் செய்யும். அதனால் அவா உண்டாகும். இது உண்டாகக் காரணம் அவா. மனமும் ஐம்பொறிகளும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டாலும் உடம்பில் கலந்திருக்கும். இதனால் ஐம்பொறிகள் ஏவுவதை மனம் செய்யும். முக்கியமாகப் பெண், பொன், மண் ஆசையை ஊட்டுவதும் மனம். ஆரம்பத்தில் ஐம்பொறிகளின் விருப்பை மனம் கேட்காது விட்டாலும் அதன் பின் ஆசை அவாவாக மாறியதும் மனம் கேட்டு நடக்கும். அது பழிபாவங்களுக்கும் அஞ்சாது தீய செயல்கள் பலவற்றையும் செய்து கொண்டே இருக்கும். இது யாருக்கும் தெரியாது என்று தான் செய்வோர் நினைக்கிறார்கள்.உலகில் நடப்பவை எல்லாவற்றையும்உயிருடன் கலந்து நிற்கும் சிவபெருமான் தனது திருவுள்ளத்தால் அறிந்து கொள்வார் என்று கதிரேசன் சொல்வார் அது உண்மை’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

423 **ஒளித்துவைத் தேனுள் ளுறவுணர்ந் தீசனை**

**வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே**

**களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை**

**வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே.**

‘‘சிவனடியார்களே, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை எப்படித் தான் உணர்ந்தேன் என்று இப்பாடலில் திருமூலர் கூறுகிறார்; ‘‘சிவனின் திருவடியினை திருவருளால் உணர்ந்து கொண்டேன். பின் அவரை உள்ளத்தில் இருத்தித்திருமுறைகளை ஓதித் தொழுதேன். அக வழிபாடு அறிவிற்கு அறிவாய் விளங்கும் சிவனை உணர்த்தும் அச்சிவபெருமானைப் புறவழிபாடு செய்ய வேண்டுமானால் அருளோன், கூத்தப்பெருமான், அம்மை, ஆலமர்செல்வர், அம்மையப்பபிள்ளை, மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார் என்ற ஏழு பேரையும் அவர்களோடு சேர்த்து மெய்யடியார் திருவுருவம் ஒன்றையும் வழிபடல் வேண்டும். இதில் அடியார்கள் மனம் விரும்பிய ஒன்றை வழிபடுதல் வேண்டும்.அவ்வழிபாடு சிவனை வெளிப்படச் செய்து அருள் புரிய வைக்கும். அளவுக்கதிகமான அன்புடனும் பக்தியுடனும் வழிபட வழிபட அருள் மிகுந்து தோன்றும்’’ என்று திருமூலர் கூறுகிறார் அதைக் கற்ற கதிரேசன் தினமும் தன்னை நாடி வருவோருக்கு அவற்றைக் கூறுகிறார். திருமூலர் கூறியபடி

வழிபட்டமையால் தான் சிவனின் அருளை அளவுக்கதிகமாகத் தானும் தனது குடும்பமும் பெற்றதாக அவர் மகிழ்வுடன் எனக்குச் சொன்னார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**424 ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்**

**இருங்கரை மேலிருந் தின்புற நாடி**

**வருங்கரை ஓரா வகையினிற் கங்கை**

**அருங்கரை பேணில் அழுக்கற லாமே.**

''சிவனடியார்களே ஆருயிரும் பாசமும் வேறானவை என்று சொல்ல முடியாத படி கலந்துள்ளன. இவ்வாறு கலந்து நிற்கும் பாசத்தோடு கூடிய ஆருயிரில் அதன் நன்மைக்காகக் கலந்து தோய்வின்றிக் கலந்து நிற்பவன் சிவபெருமான். அவன் தன்னைச் சார்ந்தவர்கள் அனைவரையும் காத்தருள்பவன் அத்தகைய சிவபெருமானின் நிலை பேறாகிய அழிவில் புகலிடம் இருங்கரை எனப்படும். அப் புகலிடத்தில் புகுந்து பேரின்பம் அனுபவிப்பதற்கு விருப்பம் கொள்ளுங்கள். அப்படி புகுந்து கொண்டீர்களேயானால் தொடர்ந்து வரும் பிறவித் துன்பங்கள் இல்லாமற் போய் விடும் அங்ஙனம் போகத் திருவருள் உதவி செய்யும் அதனால் மல அழுக்குத் தொடக்கம் எல்லா அழுக்குகளும் அகலும்'' என்று திருமூலர் கூறுகிறார்.

“சிவனடியார்களே பாசம் தான் ஆருயிர்களை அழிப்பது மனம். ஒருவருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தாலும் அவற்றில் வெவ்வேறான பாசத்தையே காட்டும். இதனால் ஒவ்வொரு பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்காகப் பிரித்து வைத்துவிட்டு பிள்ளைகளை அழைத்து விரும்பியதை எடுங்கள் என்றார். உலக இயக்கத்தைச் சிவனருளால் அவரது பிள்ளைகளுக்குக் கூறியமையால் அவரது பிள்ளைகள் சொத்துக்களை விட்டுவிட்டுத் தமது தந்தையும் தாயும் சிவனும் உமையும் போல இருப்பதால் அவர்கள் தான் தமது சொத்தென்றனர் கதிரேசன் வியப்படையவில்லை. ஏனென்றால் அவர் பிள்ளைகள் மீது பாசம் கொண்டிருந்தாரே தவிர பற்றுக் கொள்ளவில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**425 மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்**
**உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே**
**கண்ணொன்றுதான்பல காணுந் தனைக்காணா**
**அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே**

“சிவனடியார்களே மண்ணானது பொருள் முதற்காரணியாக நின்று பானை, சட்டி, கலசம், குடம் முதலிய பல்வேறு வடிவங்களாக மாற்றமடையும். அம் மாற்றம் அதனைப் பெற்றுப் பயனடைவோரின் தகுதிக்கேற்றவாறு அமைந்ததாகும். அவ்வமைவு வினை முதற்காரணனான ஒரு குயவனால் ஏற்பட்டதாகும். இது

போல ஆருயிர்களுக்கு உயிருக்குயிராக என்றும் பிரியாது நின்றருளும் முழுமுதற்கடவுளான சிவபெருமான் ஒருவனே வினை முதற் காரணன் ஆவான். அவன் நால்வகைத் தோற்றத்து எழுவகைப்பிறப்பினுள் எண்பத்து நான்கு நூறாயிர வடிவ வேறுபாட்டோடு உடல்களை தூவமாயையில் நின்று படைத் தருளியுள்ளான். அவனுக்குத் துணைக் காரணங்களாவன அவனின் வேறல்லாத திருவருளும், ஆருயிர்களின் இரு வினைகளுமே. கண்கள் இரண்டும் பல்வேறு பட்ட பொருட்களையும் உயிர் கலந்து காட்டக் காணும் ஆனால் கண்கள் காட்டிய உயிரைக் காண மாட்டாது. காணும் தன்னையும் காண மாட்டாது. இது போல ஆருயிர்களுக்கு கட்டு ஒட்டு என்னும் ஈரிடத்துமும் சிவபெருமான் உடனாய் நின்று முறையே கூட்டுப்பொருட்களையும் சுட்டிறந்து நின்ற முற்றுப் பொருளாகிய தன்னையும் காட்டுவான். அவ்வுயிர் சுட்டு நிலையில் காட்டுகின்ற சிவனையும் காண்கின்ற தன்னையும் காணமாட்டாது. ஒட்டு நிலையில் தன்னையும் தலைவனையும் அன்னவன் அருளால் கண்டு இன்புறும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# அருளல்.

**426. எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு**
**வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்**
**ஒட்டி உயிரநிலை என்னும்இக் காதயப்பை**
**கட்டி அவிழ்ப்பன் கண்ணுதல் காணுமே**

“சிவனடியார்களே, எட்டுத் திசைகளிலும் ஆருயிர்கள் இன்பமாக வாழ்வதற்காக வளியென்று சொல்லப்படும் காற்று வீசுகிறது. அது உலகம் முழுவதையும் வட்டமான ஆடை போர்த்தியிருப்பது போலச் சூழ்ந்திருக்கிறது. அதுபோல உலகைச் சூழந்திருக்கும் கடலை வட்டத்திரை என்பார்கள். ஐம்பெரும் பூதங்களான காற்று, நீர், தீ, நிலம், ஆகாயம் என்பவற்றால் ஆனது உயிர் நிலை. இதனைக் காயப்பை என்பர். ஆருயிர்களுக்கு வினைக்கீடாக உடல்களைப் படைத்துத் தனது அருளால் கட்டிப் பிணைத்திருப்பவன் சிவபெருமான். இரு வினையொப்பு உற்ற காலத்தில் அப்பெருங்கட்டினை அவித் தருளுபவனும் அவனே. அவ்வருள் வடிவம் நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானே ஆகும்”.

“உலகில் நடைபெறுவன அணைத்தும் சிவன் செயல். சிவன் ஐம்பூதங்களையும் படைத்து அதில் உயிர்கள் இன்பமாக வாழும் பொருட்டுப் பல்வேறு

வகையான பொருட்களையும் படைப்பித்தான். அதலால் அவனையே நினைத்திருங்கள்''என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**427. உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை**
**நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை**
**விச்சும் விரிசுடர் மூன்றும் உலக்குத்**
**தச்சும் அவனே சநமைக்கவல் லானே.**

''சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய் முப்பத்தாறினுள் முடிந்த முடிவாக விளங்கும். முப்பத்தாறாம் மெய் ஒலி என்ப. அ∴து ஒளி வண்ணமாக இருக்கும் அது மெய்களின் உச்சியில் சிறந்திருக்கும். அவ் ஒளி வண்ணமான ஒலியின் நேரே இயங்கும் சிவபெருமானை முழுவிருப்புடன் வழிபட்டு இன்பமடைபவர்களுக்குத் தொல்லை தரும் பிறப்பு உண்டாவதில்லை. அதனால் அவர்கள் மரணமடையும் போதும் கூற்றுவனுக்கு அவரிடத்து வேலை இல்லை. அவ்வுயிர் சிவநினைவுடன் சிவத்தோடு கலக்கும்''.

''ஒளி வண்ணமான சிவபெருமான் ஒலி வடிவமாகத் திகழ்கிறார். அதை உணர்ந்து ஐந்தெழுத்தாகிய நமசிவாய, சிவாய நம, சிவயசிவா, சிவசிவ என்ற மந்திரத்தில் ஒன்றையோ அல்லது நான்கையுமோ ஓதுவார்க்கு யமபயம் இல்லை.

அவர்களிடத்து யமன் செல்லமாட்டான். சிவனருளாலே அவ்வுயிர் பிரிந்து திருவருளுடன் சென்று சிவனை அடையும்'' என்று கதிரேசன் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**428. குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்**
**குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்**
**குசவனைப் போல்எங்கள் கோல்நந்தி வேண்டில்**
**அசைவில் உலகம் அதுஇது வாமே**

''சிவனடியார்களே, குயவன் மண்ணைச் செப்பனிட்டுப்பல்வேறு வகையான பாத்திரங்களைப் படைத்து ஆருயிர்களின் நன்மைக்காக அளிப்பான். அக்குயவனைப்போல பேரறிவுப் பெருந்தலைவரான நந்தியடிகள் அசைவில்லாத தனது வனப்பற்றலால் மாயையிலிருந்து அது இது என்று சொல்லப்படும் உடல் உலகம் உண்பொருட்களைப் படைத்தருளினார். நந்தியாகிய சிவபெருமான் படைப்புத் தொழிலை ஆருயிர்களின் நன்மையின் பொருட்டே செய்தருளுகிறான்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

429. **விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்**

**படையுடை யான்பரி சேஉல காக்குங்**

**கொடையுடை யான்குணம் எண்குணம் எண்குண மாகுஞ்**

**சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே.**

"சிவனடியார்களே, எருதை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டவன் சிவபெருமான். ஒருவரால் படைக்கப்படாது திருவருளால் பல்வேறு விதமான தோற்றத்தை உடையவன். அத்துடன் பூதப்படைகளை உடையவன். ஆருயிர்கள் உய்யும் பொருட்டு உலகையும் உடல்களையும் படைத்தருளியவன். எண்குணங்களை உடைய பின்னல் சடையை உடையவன். இத்தகைய சிவபெருமானைப் பற்றின்றி வணங்குவோர் அவனது திருவடியை அடைவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

430. **உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்**

**உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி**

**உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்.**

**உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே.**

"சிவனடியார்களே, யாரோடும் ஒப்பிடமுடியாத சிறப்புக்கள் பல கொண்ட சிவபெருமான் யாவரிலும்

உயர்தவன். உயர்ந்து நின்றே அவன் ஏழு உலகங்களையும் படைத்தான். அது போலப் பல ஊழிகளையும் ஐம்பெரும் பூதங்களையும் படைத்தான். ஆருயிர்களுக்கு வேண்டிய உடல்களையும் படைத்தருளினான்''.

‘‘கதிரேசன் ஒரு பெரும் விவசாயி. வயல்கள், தோப்புகள், தோட்டங்கள் எனப்பலவகையான நிலங்கள் அவரிடம் உண்டு. அவற்றில் பல்வேறு விதமான பறவைகள் குடியிருக்கின்றன. பல மிருகங்களை அவர் வளர்க்கிறார். பாடசாலை மாணவர்கள் விடுமுறை தினங்களில் ஆசிரியர்களோடு அவற்றைப் பார்க்க வருவார்கள். அவர் மாணவர்களுக்குக் கூறுவார்,‘‘இவையெல்லாம் சிவனின் படைப்புக்கள். மாமரத்தில் இருக்கும் குருவிகளைப் பாருங்கள். எவ்வளவு அழகாக இருக்கின்றன. அவற்றின் அழகை வர்ணிக்கமுடியுமா? அவை எவ்வளவு மகிழ்வுடன் கூடியிருக்கின்றன. அதுவும் சிவன் செயல் தான். பூந்தோட்டத்தைப் பாருங்கள். பூக்களின் அழகை வர்ணிக்கமுடியுமா? இவையெல்லாம் சிவனின் படைப்பு. ஆருயிர்களின் இன்பத்திற்காக இவற்றைப் படைத்துள்ளான். ரசித்து மகிழுங்கள்'' என்பார். இந்த அற்புதமான உலகைப் படைத்த சிவனுக்கு நன்றி சொல்ல அவனை வணங்குங்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**431. படைத்துடை யான்பண் டுலங்கள் ஏழும்**
**படைத்துடை யான்பல தேவரை முன்னே**
**படைத்துடை யான்பல சீவரை முன்னே**
**படைத்துடை யான்பர மாகிநின் றானே.**

“சிவனடியார்களே, உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே ஆருயிர்கள் உய்வதற்காக உடல் கலன் உலகம் உணாமுதலியவற்றை மாயையில் இருந்து படைத்து உயிர்களுடன் கொடுத்தவன் சிவபெருமான். இது தான் படைப்பு. உயிர்கள் என்னும் உள்ளன. படைக்கப்பட்டன அல்ல. மல ஆற்றல் குறைந்த உயிர்களைச் சிவபெருமான் தேவர்களாகப் படைத்தான். இத்தேவர்கள் பிறப்புத் தேவர்களாவர். இவர்களது நிலையை மக்களாகப் பிறந்தவர்களும் எய்துவர். அவர்கள் சிறப்புத் தேவர் என்று அழைக்கப்படுவர். மலக்கலப்பு அதிகமாக உள்ள உயிர்களுக்குத் துணை செய்வதற்காகவே தேவர்கள் சிவபெருமானால் படைக்கப்பட்டனர். அது போலப் பல சீவர்களாக உள்ள உயிர்களுக்கு உடல் முதலியவற்றைப் படைத்தவன் சிவபெருமான். எல்லாவற்றையும் படைத்தமையால் உடையான் என்னும் திருப்பெயரைத் தாங்கியவன் சிவபெருமான். அத்துடன் எல்லாவற்றுடனும் கலந்தும், எல்லாவற்றையும் கடந்தும் நிற்பவன் சிவபெருமான். அவன் காப்பு நிலையில் இறைவன் என்றும் கடந்த நிலையில் பரமன் என்றும் அழைக்கப்படுவான்”.

‘‘கதிரேசன் பிள்ளைகளுக்குக் கூறினார்,‘‘பிள்ளைகளே, சிவனின் படைப்பாற்றலைப் பாருங்கள். இப்போ நீங்கள் பருகிய இளநீர் எவ்வளவு சுவையானது. உண்ட வாழைப்பழம் எவ்வளவு இனிமையானது. மரம் செடி கொடிகளெல்லாம் எமக்கு உதவி செய்வதற்காகவே சிவனால் படைக்கப்பட்டன. சிவனால் படைக்கப்பட்ட தேவர்கள் முதல் மரம்செடி கொடிகள் வரை எமக்கு உதவுவதற்காகவே படைக்கப்பட்டன. அதுபோல நீங்களும் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். பிற உயிர்கள் மீது அன்பு கொள்ளல் வேண்டும். உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது. அப்படி வாழ்ந்தீர்களானால் சிவன் எவ்வேளையிலும் உங்களுக்கு உதவுவார்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**432. ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்**
**ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி**
**ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை**
**ஆதி படைத்தவை தாங்கிநின் றானே.**

‘‘சிவனடியார்களே, எல்லாவற்றிற்கும் வினைமுதற் காரணமாகவுள்ள சிவபெருமான் ஆதியான அம்மையுடன் இருப்பவன். ஆதியாகிய சிவபெருமானே, ஐம்பெரும்

பூதங்களையும் படைத்தவன். அவனே மலகன்ம மாயைக்குற்றங்களை நீக்குதற்கு வாயிலாகப் பல ஊழிகளைப் படைத்தருளியவன். அவனே எண்ணில்லாத தேவர்களையும் இயற்கையையும் படைத்தருளியவன். அத்துடன் தான் படைத்த அனைத்தையும் காத்தருள்பவனும் அவனே. படைத்தல் என்பது உயிர்களுக்கு உடல்களைக் கொடுத்து உலகையும் படைத்து அவற்றுடன் அவற்றைப் பொருத்தி வினைக்கீடாக நடத்துவதேயாகும்.''

''சிவனடியார்களே, ஆதியென்பது அம்மையுடன் கூடிய சிவபெருமான். அவன் அம்மையுடன் கூடி நின்றே யாவற்றையும் செய்வான். ஒருநாள் ரவீந்திரனிடம் கற்ற மாணவன் ஒருவன் ரவீந்திரனைக் கேட்டான்,'' குருவே, சில மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்கள். சிலர் எழுத வாசிகவே கஷ்டப்படுகின்றனர். இருவரையும் படைத்தது அம்மை அப்பர் எனில் ஏன் இந்த வித்தியாசம்'' என்று கேட்டான். அதற்கு ரவீந்திரன் சொன்னான்,'' அம்மை அப்பரான ஆதி என்ற சிவன் படைத்தாலும் அவர்கள் முன் செய்த வினைப்படியே படைக்கப்படுவர். அந்த வினைகளை நீக்கும் பல வழிமுறைகளையும் ஆதி படைத்துள்ளான். படைத்தல் என்பது வினைக்கேற்ப உடலையும் அறிவையும் கொடுப்பதாகும். அதன் பின் ஆருயிர்கள் தம் நிலையறிந்து ஆதியாகிய எம்பெருமானைப் பற்றுடன் வழிபட்டு நல்வாழ்வு

பெறவேண்டும்'' என்றவர். அது தான் உண்மை என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**433. அகன்றான் அகலிடம் ஏழுமொன்றாகி**

**இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்**

**சிவன்றான் பலபல சீவனும் ஆகி**

**நவின்றான் உலகுறு நம்பனு மாமே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் கலப்பினால் விரிந்த உலகங்கள் ஏழுடனும் ஒன்றாகி, நீக்கமற நிறைந்து நிற்கிறான். சிவபெருமான் அங்ஙனம் கலந்து நின்ற போதும் இவன் தான் சிவன் என்று இலகுவில் உயிர்களால் உணர்ந்து கொள்ளக் கூடியவன் அல்ல. அது போல அவன் கலப்பினால் ஆருயிர்களுடன் ஒன்றாகி நீக்கமற நிற்கின்றனன். சிவபெருமானே சிவகுருவாய் வந்தருளி ஆருயிர்களுக்கு முத்தியடையும் வழி வகைகளை உபதேசித் தருளுகிறான். உயிருக்குத்துணையாக பிறவிகள் தோறும் நின்றருளுபவன் சிவபெருமான். அவன் நம்புபவர்களின் நம்பிக்கைக்கு உறுதுணையாக என்றும் நிற்பவன்''

"சிவனடியார்களே, அந்த மாணவன் ரவீந்திரனைக் கேட்டான்'' நீங்கள் சொல்வதை எப்படி நம்புவது''?

"மகனே, சிவபெருமான் எல்லா உயிர்களோடும் உள்நின்று அருளுகிறார் என்று நான் நம்புகிறேன்.

நம்புபவர்களின் நம்பிக்கையை ஏற்று அருள்பவர். சிவபெருமான். நீ நம்பாவிட்டாலும் உன் உயிரோடு அவர் கலந்திருக்கிறார். அதை நீ உரிய காலம் வரும்போது உணர்வாய். சூரியன் உதிக்கிறான் பின் மறைக்கிறான். நாளையும் அவன் உதிப்பான் என்று நம்புபவன் தான் மகிழ்வுடன் வாழ்வான். சில சோதிடர்கள் ஏழு நாளைக்குச் சூரியன் உதிக்கமாட்டான் என்று சில நாட்களுக்கு முன் கூறினர். அதைக்கேட்ட ந ீவந்து சூரியன் ஏழு நாட்களுக்கு உதிக்கமாட்டான் என்று கூறுகிறார்கள். அது உண்மையா என்று கேட்டாய். நான் உதிக்கும் என்று நம்பிக்கையுடன் சொன்னேன். ஏழுநாளும் சூரியன் உதித்தான். இறைவனின் செயல்களை எதிர்வு கூற யாராலும் முடியாது. எதிர்வு கூறும் சோதிடர்களையும் புதுமைகள் செய்வதாகக் கூறும் விஞ்ஞானிகளையும் படைத்தவன் சிவன். அவனின் ஆணைப்படி தான் யாவும் நடக்கும்'' என்று ரவீந்திரன் சொன்னவர். அது தான் உண்மை. நம்பிக்கை'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**434. உண்ணின்ற சோதி உறநின்ற ஒருடல்**

**விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்**

**மண்ணிற வானோர் புகழ்திரு மேனியன்**

**கண்ணிற் மாமணி மாபோத மாமே.**

“சிவனடியார்களே, அனைத்துயிர்களின் உள்ளே நின்று இயங்கும் சிவபெருமான், அவ்வுயிர்களைத் தாங்குகிறான். அதனால் அவன் ஒப்பில்லாத உடல் போன்றவனாகிறான். பேரொளியாகத் திகழும் அவன் யாவையும் யாவரும் தன்பால் நிலவ நின்றருளுபவன். விண்ணின் கண் வாழும் விரும்பும் விழுத்துணைப் பொருளும் சிவபெருமானே. நிலவுலகில் வாழும் சைவசித்தந்தச் சான்றோர் அன்புடன் புகழ்ந்துரைக்கும் புகழுள்ள திருமேனியை உடைவன் சிவபெருமான். கண்ணுள் நிலைத்து நின்று பார்வையைக் கொடுக்கும் கருமணியைப் போன்றவன் சிவபெருமான்”.

“ஒருமுறை கதிரேசனுக்குக் கடுமையான நோய் வந்து விட்டது. அதனால் அவர் கண்டபடி பிதற்றினார். அவருக்கு ஆட்களை அடையாளம் தெரியவில்லை. ஊரவர்களும் இனத்தவர்களும் அவர் தப்பமாட்டார் என்றனர். ஆனால் அவரது மனைவி மகாலட்சுமி சொன்னாள்,“ எனது கணவர் பெரும் சிவபக்தர். அவர் தினமும் சிவனைப் புகழ்ந்து துதிப்பவர். சிவனடியார்கள் புகழ்ந்து துதிப்பதற்கேதுவான திருமேனியை உடைய சிவபெருமான் எனது கணவரின் உயிரைக் கவர மாட்டார். சிவன் அவரது கண்ணின் கருமணியாக இருக்கிறார். அத்துடன் உயிர்களின் உள்நின்று இயக்கும் சிவன் அவ்வுயிர்களைத் தாங்குகிறான். அதனால் விரைவில் எனது கணவர் நலம் பெறுவார்” என்று நம்பிக்கையுடன்

கூறினவள். ஓரிரு நாளில் அவர் குணமடைந்து விட்டார். அவரை இனத்தவர்கள் நீ மிகக்கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்தாய். அப்போது உனக்கு எம்மைத் தெரியவில்லை'' என்றனர். அதற்குக் கதிரேசன் கூறினார்,'' மறதியும் நினைப்பும் சிவனது அருட்செயல். நான் பதினைந்து தினங்களாகச் சிவனின் புகழை மெய்மறந்து பாடிக்கொண்டிருந்ததால் எனக்கருதில் நடந்தவை எவையும் எனக்குத் தெரியாது என்றாராம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**435. ஆரும் அறியாத அண்டத் திருவுருவப்**

**பார்முத லாகப் பயிலுங் கடத்திலே**

**நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்**

**சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே.**

''சிவனடியார்களே, மக்கள், தேவர், அசுரர் முதலியோரால் அறிய முடியாத அண்டத்திதிருமேனியை உடையவன் சிவபெருமான். உலகங்களுக்குள் உயிராய் நிற்கின்ற ஒப்பில்லாத திருவருள் சிவன். பஞ்சபூதங்களில் கலந்து நிற்பவனும் சிவன். இவ் ஐம்பூதங்களிலும் பாலில் கலந்த நீரைப் போலக் கலந்து நிற்பவன் சிவன். பால் தன் வண்ணத்தையும் சுவையையும் நீருக்குக் கொடுத்து நீர் என்னும் பெயர் பாலென்று மாறுவது போலச் சிவபெருமான் ஆருயிர்களைத் தூய்மையாக்கித் தனது

எண்குணங்களையும் பதிவித்துச் சிவமாம் பெருவாழ்வை அருளுகிறான். அதனால் அவ்வுயிர்கள் திருவடிப் பேரின்பத்தை அனுபவிக்கின்றன. அத்துடன் சிவனெனவே அழைக்கப்படுகின்றன. இதுவே புறத்தும் அகத்தும் புலனாகும் சிவ இன்பமாகும். இவ்வுண்மையைத் திருவருளால் அறிந்து மட்டற்ற இன்பம் அடைந்தேன் என்று திருமூலர் தனது அனுபவத்தைக் கூறுகிறார்''.

''சிவனடியார்களே, திருமூலர் கூறியவாறு கதிரேசனும் அந்த நிலையை அடைந்துள்ளார். வைத்தியர்கள் அவருக்கு எந்த நோய்களும் இல்லை என்றனர். ஆனால் கதிரேசன் மாறாட்டமாகத் கதைத்தார். யாரையும் தெரியாதென்றார். ஆனால் சிவனைப் பற்றி மாறிக்கதைக்கவில்லை. தேவார திருவாசகங்களை பிழையாகப் பாடவில்லை. அதனால் தான் அவரது மனைவி அவர் சிவனோடு கலந்திருக்கிறார். விரைவில் குணமாவார் என்று சொன்னார். பால்நீரோடு கலந்தால் இரண்டையும் பிரிக்க முடியாது. அதுபோலச் சிவத்துடன் கலக்கும் ஆருயிர்கள் அவனது திருவடி இன்பத்தைப் பெறுகின்றன'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

# கரு உற்பத்தி

**436. ஆங்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்**

**சாங்குகின் றானவ னாதிஎம் ஆருயிர்**

**ஆங்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்து**

**ஆங்குகின் றான் அவன் ஆவ தறிந்தே.**

“சிவனடியார்களே, உடலை விட்டுச் செல்லும் உயிர்வினைக்கீடாக அச்சுமாறிப் பிறக்கும். அச்சுமாறுதல் என்பது உடல் மாறுதல் அடைதல். ஆண் பெண்ணாக மாறலாம். பெண் ஆணாக மாறலாம். உயர்திணை அ∴றினையாகயாக மாறலாம். உடலை விட்டுப் பிரிந்த உயிர் நுண்ணுடம்பாகிய புரிவட்ட வடிவத்துடன் மீண்டும் கருப்பையினூடாக பிறப்பெடுக்கும். உயிர் ஒரு போதும் மாறுதல் அடைய மாட்டாது. உடம்பே வினைக்கீடாக மாறுதல் அடையும். அப்படிப்பட்ட இந்த வேற்றுமை உடம்பு பெரும்பூதம் ஐந்து, அறிதற்கருவி ஐந்து, செய்தற்கருவி ஐந்து, வளிபத்து ஆகிய இருபத்தைந்து பொருட்களால் ஆனது. அவை திருவருளால் அமைக்கப்பட்டன. இறப்பும் பிறப்பும் வேறு பாடடையும் உடம்புக்கேயாம். இப்பரு உடம்பின் கண் முன் நுண்ணுடம்புடனே பிரிந்து சென்ற ஆருயிரை சிவபெருமான் வினைக்கீடான உடம்பில் புகச் செய்கிறான். இதைத் திருவருள் கருப்பைக்குள் உயிர்க்கு உயிராய் நின்று அமைக்கின்றது.”

“சிவனடியார்களே எனது குருவான கெங்காதரன் எல்லா விலங்குகளையும் பூச்சி புழுக்களையும் மனிதருக்குக் கொடுக்கும் மரியாதை கொடுத்து வரவேற்பார். எமது குருகுலத்தில் ஏராளமான பறவைகளும் விலங்குகளும் இருக்கும். அவற்றுடன் எனது குரு மகிழ்வுடன் பேசி மகிழ்வார். ஒருமுறை அவரைத் தரிசிக்க வந்த ஒருவர்,“ஐயா தாங்கள் மிருகங்களையும் பறவைகளையும் மிக உயர்வாக மதிக்கிறீர்கள். அது ஏன் என்று அறிய முடியுமா?” என்று கேட்டார். அதற்குக் குரு சென்னார்; “மகனே உயிர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே உடல் கிடைக்கிறது. உயிர் ஒரு போதும் மரணமடைவதில்லை. அது அச்சுமாறுகிறது. அதனால் இவை சில சமயம் எமது உறவினர்களாகவும் இருந்திருக்கலாம். அத்துடன் நான் உடலை இழந்த பின் இப்படிப் பிறப்பை எடுக்கலாம். அதனால் தான் நான் அவற்றை மதிக்கிறேன். என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**437. அறிகின்ற மூலத்தின் மேல் அங்கி அப்புச்**
**செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்**
**பொறைநின்ற இன்னுயிர் போந்துற நாடிப்**
**பறிக்கின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே.**

“சிவனடியார்களே, நுண்ணுனர்வாளனான சிவபெருமான் அறியப்படுகிறது. மூலாதாரத்திற்கு மேல்

அகட்டுத்தீயும் நீரும் நிறைந்துள்ள கருப்பையில் அறிவோடு கூடிய உயிர் தங்கிய கருவுடன் தனது கால்களை முடக்கித் தலையுடன் ஓம் வடிவாய் அமைத்திருக்கும் படி சிவபெருமான் அமைக்கின்றனன். கருப்பையில் சுமையாக இருந்த அவ்வுயிர் நல்ல தவம் செய்த அன்னையின் வயிற்றில் பத்து மாதம் தங்கியிருந்து வெளிவரும்''

''சிவனடியார்களே, ஓம் என்ற வடிவில் குழந்தை தாயின் வயிற்றில் முந்நூறு நாட்கள் தங்கியிருக்கும் அது வினைக்கீடாகப் பிறப்பெடுப்பதால் அதன் எதிர் காலப் பயன்கள் அனைத்தும் கருவிலேயே புகுத்தப்படுகின்றன. அப்படிப் புகுத்தப்பட்டாலும் சிவனை வழிபடுவதன் மூலம் பயன்களை மாற்றியமைக்க முடியும். எனது குரு தன்னைச் சந்திக்க வரும் பிள்ளைகளுக்குமார்க்கண்டேயரின் வரலாற்றை எடுத்துக்கூறி சிவனை வழிபடுமாறு கூறுவார். அவர் கூறுவதைக் கேட்டு நடந்த பிள்ளைகள் நற்பயனைப் பெற்றுள்ளனர் என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**438. இன்புறு காலத் திருவர்முன் பூறிய**
**துன்புறு பாசத் துயர்மனை வானுளன்**
**பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்**
**அன்புறு காலத் தமைத்தொழிந்தானே.**

“சிவனடியார்களே. எக் காலத்திலும் நீங்காத இன்பத்தைத் தருவது மக்கட் பேறு மட்டுந் தான்.அதை அடைவதற்கு மனையறம் வண்டு இயல்புடையவர்களான கணவனும் மனைவியும் சிவபெருமானை மிகுந்த அன்புடன்வழிபடுபவர்களாக இருக்க வேண்டும். அப்படியான இருவர் கூடி மகிழும் போது இருவரும் பேரன்பு உடையவராக விருப்புடன் கூடுதல் வேண்டும். அக் கூடுதலின் மூலம் கருவுண்டாகும். அக்காலத்தில் அருள் வெளியாகிய வானத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஆருயிரின் கருவில் புகுந்து கொள்வான். ஆணவத்தைப் போக்குவதற்காகவே சிவபெருமானால் அவ்வுடல் ஆக்கிக் கொடுக்கப்படுகிறது. அவ்வுடலை அருவுடல் என்றும் நுண்ணுடல் என்றும் அழைப்பார். மாறி மாறிப் பிறப்பெடுக்கும் உயிர்களுக்கு அவ்வுயிர்களின் வினைக்கீடாகவே நிலவுலக வாழ்க்கையில் உண்டாகப்போகும் இன்ப துன்பங்களும் கருவினுள் பதித்தருளப்படும்.

“ஒருநாள் திருமணமான இளம் தம்பதிகள் எனது குருவிடம் ஆசிபெற வந்தனர். அவர் சொன்னார், “பிள்ளைகளே, வாழ்வின் முக்கியமானதொரு பகுதியில் இணைந்திருக்கிறீர்கள். உங்களுக்கு மகப்பேறு தான் பெரும் இன்பத்தை அளிக்கும். உயிர்கள் இறப்பதில்லை. உடல்தான் இறக்கிறது. உடல் இறந்ததும் உயிர்வினைக்கீடான ஒரு கர்ப்பப்பையை அடையும். மகளே, உனது கர்ப்பப்பையைப் புண்ணியம் செய்த

உயிர் ஒன்று வந்து தங்கவேண்டுமானால் நீ முழுமுதற்கடவுளாகிய சிவனைப் பேரன்புடன் வழிபடவேண்டும். சிறு பிள்ளையாக இருக்கும்போதே நீசிவபக்தை. அதனால் உனக்கு நல்லதொருமகன் பிறப்பான். சிவபெருமான் புண்ணியம் செய்த உயிர்களைச் சிவனடியார்களின் கர்ப்பத்துள்ச் சேர்ப்பார். அதனால் கவலைப்படாதே என்றார்'' என்று கூறினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**439. கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்**

**புருடன் உடலில் பொருத்துமற் றோரார்.**

**திருவின் கருக்குழி தேடிப் புகுந்தது**

**உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே.**

''சிவனடியார்களே, பிறவாமை பற்றிய திருவடியுணர்வுள்ள சிவனடியர்கள் கருவை ஒழிந்தவராவர். அவர்கள் பருவுடலுக்கெனக் கண்டறிந்த இருபத்தைந்து பொருட்களும் அவ்வுண்மையினைக் காணாதவர்களுக்குப் பொருந்தும். அவர்கள் மற்றோரார் ஓதப்பட்டவராவர். திருமகளை ஒத்த மனைவியின் கருவில் கணவனது வெண்ணீர் ஓடிச்சென்று அங்குள்ள செந்நீருடன் அது கலப்புற்று ஆண் பெண் என்றும் இரண்டு வடிவங்களுள் ஒன்றாக உருமாறி வளரும்.''

“எனது குரு சந்நியாசத்தை விரும்பி வந்த ஓர் இளைஞனுக்குச் சொன்னார்,“மகனே நன்றாக யோசித்து முடிவெடு. காமத்தை விரும்பாத உயிர்கள் இல்லை. அதன் கொடுமையைத் தாங்கிக் கொள்ளமுடியாது. அழகான பெண்ணைக்கண்டால் திருமணமானவனின் மனமும் சஞ்சலப்படும். விலைமகள் சிரித்தால் அவளுக்குப்பின்னால் பணம் பொருளுடன் செல்லப் பலர் காத்திருப்பர். பிறவாத நிலையை விரும்பும் சிவனடியார்கள் திருவடியுணர்வால் காமத்தை ஒழிப்பர். அவர்கள் திருவடியுணர்வை அடைந்ததால் பருவுடலுக்கென உருவான இருபத்தைந்து பொருட்களும் அவர்களைத் தாக்காது. எனவே நன்றாக யோசித்து முடிவெடு” என்றார்” சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**440. விழுந்து லிங்கம் விரிந்தது யோனி**

**ஒழிந்த முதல்ஐந்தும் ஈரைந்தொ டேறிப்**

**பொழிந்த புனல் பூதம் போற்றுங் கரணம்**

**ஒழிந்த நுதல் உச்சி உள்ளே ஒளித்ததே.**

“சிவனடியார்களே, பேறுகளிற் சிறந்தபேறு மக்கட்பேறு வாழ்க்கைத் துணைவனான கணவன் பேரன்புடன் இன்புறும் மகப்பெறுதற்பொருட்டுக் கூடும்போது இலிங்கமாகிய உரு உடம்பின் வாயிலால் விந்து புகும். அதனை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு கருவழியாகிய யோனி விரியும். நுண் உடலில் தங்கியிருக்கும் ஓசை,

உறு, ஒளி, சுவை, நாற்றம், என்னும் நுண்மை ஐந்தும்,அறிதற்கருவிகள். ஐந்தும், செய்தற் கருவாகிய ஐந்தும், நீர் முதலான பூதங்கள் ஐந்தும்,தோன்றின. அவற்றால் போற்றப்படும் கரணங்களும் கூடின. புருவநடுவிலும் உச்சியிலும் நின்று உணரும் தொழிலும் இடையறாது நிகழும்.''

''சிவனடியார்களே, கரு உற்பத்தி என்பது நல்ல பிரசைகளை உருவாக்குதல். அவர்களால் வீடும் நாடும் நன்மை பெற வேண்டும். ஐந்தறிவுள்ள உயிர்களால் மனிதன் பெரும் நன்மைகளைப் பெறுகிறான். இதை ஆறறிவுள்ள மனிதர்கள் உணர்ந்து சிவ வாழ்வு வாழ்ந்தால் நன்மக்கள் மூலம் பேரின்பத்தை அடையலாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**441 பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்**
**தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்**
**மேவிய சீவனில் மெல்ல நீள் வாயுவுங்**
**கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே.**

''சிவனடியார்களே பூவில் தங்கியிருக்கு நறுமணத்தைக் காற்றுக் காவி வந்து எங்கும் பரப்பும். அது போல அருவுடம்புடன் கருவில் உற்பத்தியான ஆருயிரை கருப்பையில் பொருந்தியுள்ள காற்று சிறிது சிறிதாக வளர்த்துப் பெருகும் மென்மையான உயிர்க்

காற்று பிறக்கும் நிலை உண்டானதும் உடலை வெளியே கொண்டு வரும்.''

''பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு விஞ்ஞானம் வளர்ச்சியடையாத நிலையில் கரு வளர்ச்சி பற்றித் திருமூலர் சிவனருளாலே அறிந்து கூறுகிறார். காற்றுத் தாயின் கற்பபையில் இருந்து கருவை வளர்த்து உரிய நேரம் வந்ததும் குழந்தையை வெளியேற்றும் என்று திருமூலர் கூறியதைப் படித்த ஒருவர் எனது குருவிடம் வந்து கருப்பையில் காற்றுள்ளது என்பதைஎப்படித் திருமூலர் கண்டறிந்தார் என்று கேட்டார். அதற்கு திருப்பொருள் தான் காரணம். இன்று விஞ்ஞானக் கருவிகளை வைத்துச் செயற்படுத்தி இயற்கையைக் காண்கின்றனர். இன்று மழை பெய்யும் என்பர். ஆனால் பெய்யாது. கடல் கோள் வருவது தெரியாது. வந்த பின் சொல்வர். இதனால் தான் சிவ உணர்வில்லாதோர் சொல்வது. எதுவும் நடப்பதில்லை. சிவஉணர்வுள்ள முன்னோர் சொன்னபடி தான் இன்னும் இயற்கை நடக்கிறது'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமியார்.

**442. ஏற எதிர்க்கில் இறையவன் றானாகும்**

**மாற எதிர்க்கில் அரியவன் றானாகும்**

**நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்**

**பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே.**

“சிவனடியார்களே, எனது குருவின் சீடன் ரவீந்திரன் அவன் திருமணம் செய்வதில்லை என்றிருந்தவன். கதிரேசன் கூறிய புத்திமதியின் பின் திருமணம் செய்ய விரும்பி எனது குருவிடம் வந்தான். அவர் சொன்னார்,“மகனே, சிவனை ஒரு கணமும் மறவாத காதலர் இருவர் கலந்து கூடுவதால் தோன்றும் வித்தாகிய விந்து நடு நாடி வழியாக ஒலியாற்றல் என்றும் நாத சத்திக்கு மேற்பட்டு எதிர்த்துச் செல்லுதல் சிறப்பானது. அங்ஙனம் சென்று கருத்தங்கினால் பிறக்கும் பிள்ளை சிவ வடிவாகத் தோன்றும்.அது போலன்றி அமைதியாக எதிர்த்தால் செயற்கரிய செயல்களைச் செய்யும் ஒழுக்கமுள்ளவனாகப் பிறக்கும். இதற்கெல்லாம் காரணம் சிவனது திருவருள். நல்ல பிள்ளை பிறக்கவேண்டுமானால் சிவ உணர்வுடன் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ வேண்டும். கணவனும் மனைவியும் மகிழ்வுடன் சிவனை வணங்குபவர்களாகவும், கூடியிருக்கு முன் சிவ உணர்வை மேம்படச் செய்பவர்களாகவும் இருக்கவேண்டும்” என்றவர். இவற்றையெல்லாம் திருமூலர் சிவனருளாலே உணர்ந்தவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**443. ஏயம் கலந்த இருவர்தஞ் சாயத்துப்**
**பாயுங் கருவும் உருவா மெனப்பல**
**காயங் கலந்தது காணப் பதிந்தபின்**
**மாயங் கலந்த மனோலய மானதே.**

“சிவனடியார்களே, அண்டங்கள் அனைத்திலும் வாழும் உயிரினங்கள் வினைக்கீடாக இருவராய் இணைந்து இல்வாழ்வு வாழ்ந்து நல்லறத்தைப் பேணுகின்றனர். அவர்கள் வாழும் வாழ்க்கையின் பயனாகக் கரு உருவாகும். அவ்வாறு உருகுவதற்குத் தாயின் உணவே காரணமாகும். அவ் உணவு மருந்தாகச் செயற்படும் இருவரின் உள்ளங்களும் சிவநினைவுடன் ஒன்றுபட்ட பெறுபேறே அறிவுள்ள மக்களாகும்”.

“ரவீந்திரா, உனக்கும் உனது மனைவியான சிவகாமிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்கிறது. அது சிவ உணர்வால் வந்த தொடர்பு. அதனால் தான் ஒன்று சேர்ந்தீர்கள். இன்பமாக வாழ்கிறீர்கள். இன்பமாக வாழும் குடும்பத்தினரும் வினைக்கீடாகவே அப்படி வாழ்கின்றனர். நல்ல உள்ளத்துடன் கூடி வாழ்ந்தால் அறிவுள்ள மக்கள் பிறப்பர். சிலர் காம உந்துதலால் போதை தரும் பானங்களை அருந்திவிட்டு விருப்பின்றியும் சிவ நினைவின்றியும் கூடுவதால் தான் தீயபிள்ளைகள் பிறக்கின்றன. மனைவியுடன் இன்பமாக வாழ்பவனால் தான் நல்ல பிள்ளைகளைப் பெறமுடியும்”

என்று குரு சொல்லும் போது நான் கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**444. கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளைகூட்ட**
**நிற்குந் துரியமும் பேதித்து நினைவெழ**
**வற்புறு காமியம் எட்டாதல் மாயேயஞ்**
**சொற்புறு தூய்மறை வாக்கினாஞ் சொல்லே.**

''சிவனடியார்களே ஆருயிர் கருப்பையினுள் அருவுடம் போடு மட்டும் இருக்கும். பல்வேறு கருவிகளாக விரியும் மாயா காரிங்களைச் செயற்படுத்துவது நடப்பாற்றல். உயிர் கருப்பையினுள் அருவுடம்புடன் இருக்கும் நிலை புலம்பு நிலை எனப்படும். புலம்பு நிலை என்பது உறக்க நிலை புலம்பு நிலையை நடப்பாற்றல் வேறுபடுத்தி நினைவெளச் செய்யும். அதன் பின் காமிய இன்ப நினைவுக்குரிய அன்பு எழும். அதனால் புறத்தே எழும் ஓசை முதலியன அகத்தே எட்டும். அங்ஙனம் எட்டச் செய்வதற்கு தூண்டு கோலாக இருப்பது அகப்புறக் காரணியாகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்றும் நான்குமாம். அத்துடன் அவற்றைத் தூண்டித் தொழிற்படுத்தும் கருவி நால் வகை ஓசைகளாகும். இவ்வோசை தூமாயையில் இருந்து வெளிப்படும். இவற்றைத் திருமூலர் திருவருளினால் உணர்ந்து கொண்டார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**445. எண்பால் மிடைந்தும்பு வரிக்கட்டிச்**
**செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து**
**இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்**
**நன்பால் ஒருவனை நாடுகின்றேனே.**

"சிவனடியார்களே, எலும்புகளை நரம்புகளால் வரிந்து கட்டி தசையினைக் குருதியால் இணைத்துச் சிவன் ஒரு மனையைச் செய்தான். அவ் மனை தான் உடம்பு அவ்வுடம்புள்ளே உயிர் தங்கியிருக்கும். அதனால் அஃது உயிர் நிலை என்று அழைக்கப்படும். உடலில் உயிர் தங்குவது இன்பம் அனுபவிப்பதற்காகவே. அதனால் இன்பால் உயர்நிலை எனச் சொல்லப்படுகின்றது. இதைச் செய்தருளியவன் சிவன். அவனே இறைவன். அவனே எல்லாவற்றையும் ஒழுங்கமைத்துச் செய்து முழுமுதல்வனானவன். அவன் ஒப்பில்லாதவன். அவனது திருவடியைச் சேர ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதல் வேண்டும்.

"சிவனடியார்களே எனது குருவைச் சந்திக்கவரும் பக்தர் பலர் எப்படி இறைவனை அடையலாம் என்று கேட்பர். அதற்கு அவர் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தை ஓதுங்கள். சிவபெருமான் உங்களைத் தேடி வருவார்" என்று சொல்வார். செந்தமிழ் ஐந்தெழுத்தென்பது "நமசிவாய, சிவாயநம" என்பனவாம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள். கூறினார்.

**446 பதம் செய்யுபால்வண்ணன் மேனிப் பகலோன்**

**இதஞ்செய்யு மொத்துடல் எங்கும் புகுந்து**

**குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்**

**விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே.**

“சிவனடியார்களே உடலுக்கு நிலையான அழகினைத் தரும் பால் போன்ற வெண்மை நிறம் பொருந்திய நெற்றி அமிழ்தை பால் வண்ண மேனி பகலோன் எனப்படும். அவ் அமிழ்து உடலெங்கும் ஒத்துப் புகுந்து நிறைந்து நின்றது. குதமாகிய மூலத்திடமாக நின்று தோன்றும். தீயின் வெப்பத்தினைத் தணிக்கும் பொருட்டு இவ்வமிழ்தினை அமைத்தருளினான் சிவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**447. ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே**

**வழிபல நீராடி வைத்தெழு வாங்கிப்**

**பழிபல செய்கின்ற பாசக் கருவைச்**

**சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு வினைத்தூய்ப்பு முடிந்த பின்பு இரப்பாகிய ஒழுக்கத்தினைச் செய்தருள்பவன் சிவன். அவன்பல வழிகளாலும் திருவருள் புரிந்து எழுவகையான பிறப்புக்களுள் உயிர் செய்த வினைக்கீடான ஒன்றில்

பிறக்குமாறு அருள்புரிவான். அங்ஙனம் அருள்புரிந்து தோற்றுவிப்பதால் பாவமும் பழியும் கருவில் புகுந்து கொள்ளும். இவ்வேளையில் கருப்பையில் ஏற்படும் பலவகையான துன்பங்களை நீங்கச் செய்வான். கருவை மூலத்தீ சுட்டுவிடா வண்ணம் அமைத்து வைத்தருளியுள்ளான்.''

''சிவனடியார்களே, ஓர் உயிருக்கு ஏழுவகையான பிறப்புக்கள் உண்டு. ஓர் உயிர் செய்யும் வினைக்கீடான பிறப்பினுள்ச் சிவன் அவ்வுயிரைப்பிறப்பிக்கும் போது அது செய்த பாவம் பழிகளையும் கருவுள்ளே வைத்தே பிறப்பிப்பான். ஆருயிர் கருப்பையில் இருக்கும்போது அதற்கு வரும் துன்பங்களை நீக்குபவனும் சிவனே. எனது குரு சொல்வார், ''யாரும் பாவம் பழிகையில் இருந்து தப்பிக்கமுடியாது. சிவன் ஓர் உயிர் செய்யும் பாவபுண்ணியங்களையும் சேர்த்தே கருவைப்படைக்கிறான். அதனால் தான் சிலர் பெரும் இன்பத்தை அனுபவிக்கின்றனர். சிலர் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். ஓர் உயிர் செய்யும் பாவ புண்ணியங்களுக்கேற்ற பிறப்பே அதற்குக் கிடைக்கும். அதனால் பாவம் செய்யாதிருங்கள்'' என்பார். என்று கூறினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**448. சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்**
**அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்**
**புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்**
**அக்கரம் எட்டும் எண் சாணது வாகுமே.**

“சிவனடியார்களே, நடு நாடி வழியாக வெளிவருவதே வித்து என்ற விந்து. வித்து என்பது தான் விந்துவாக மருவியது. பெண்ணிற்கும் அவ்வழியே தான் தோன்றும் செந்நீராகிய சுரோணிதயம். இச்சுரோணியம் யோனி என அழைக்கப்படுகிறது. எட்டு விரல் புறப்பட்டு அதன் பாதியாக நான்கு விரல்கள் உட்புகும். எழுத்தெட்டும் எண்சாண் உடம்பெனக் கூறப்படும் எழுத்தெட்டாவன, ஓங்காரத்துள் அமைந்த அகரவுகர மகரங்கள் மூன்றும், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்று கூறப்படும் ஐம்பூதங்களுமாம். அவை லாகார, வாகார, ரகார, யகார, அகார என்பனவாகும். இவ் எட்டு எழுத்துக்களும் வித்து எழுத்துக்கள் எனப்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**449. போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனுங்**
**கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில்**
**ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து**
**மோகத்துள் ஆங்கொரு முட்டை செய்தானே.**

“சிவனடியார்களே, உயிர் போகத்தை அனுபவிக்கும் பொருட்டுச் சிவபெருமான் போகியாக இருந்தருளுகிறான். இதற்காக அவன் தூய்மையான தன்புனிதத் தன்மையில் குறைவுபடாத முறையில் கணவன் மனைவியரிடையே பெரு வேட்கையினை உருவாக்கி உயிர்களைக் கருவாகிய முட்டையிற்புகச் செய்கிறான். அங்கு சென்ற உயிர் முறையாகப் பொருந்திய பின் உடம்பினைச் சாரும் உருவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்ப உடம்பு, ஆகிய உடம்புகளைளளச் சேர்த்து வைக்கிறான். இவற்றை முறையே அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பர். இத்தகைய கொடைத் தொழிலைச் செய்பவன் சிவபெருமான். இத்தகைய உடம்பு தூவா மாயையில் இருந்து ஆக்கப்படுகிறது. இவ் உடம்பு முப்பத்தொரு மெய்களை உடையது. அவை உடல் மெய் இருபத்து நான்கு. உணர்வு மெய் ஏழு. இவற்றை ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம் என்று அழைப்பர்”

“சிவனடியார்களே, ஒரு நாள் ஒரு குடும்பத்தன் எனது குருவிடம் வந்து சொன்னான்,“ சுவாமி எனக்கு மனைவியைப் பிடிப்பதில்லை. அவள் அன்பானவள். என்மீது அளவில்லாதபாசம் கொண்டவள். எனது தொழிலுக்கு உதவியாக இருக்கிறாள். இருந்தும் அவளை எனக்குப் பிடிப்பதில்லை. நான் என்ன செய்வது” என்று கேட்டான். எனது குரு சொன்னார்,“சிவனை உள்ளன்போடு வழிபடு. எனக்குப் பிள்ளை வரம் தா என்று கேள். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே அன்பை உண்டாக்கி அவர்களைக் கூடச் செய்பவன் சிவன். அவன் காம உணர்வைத்தூண்டுபவன். வீட்டுக்குச் சென்று வழிபடு” என்றார். ஒரு மாதம் கழித்து வந்த அவன் சொன்னான்,“இப்போ எனது மனைவி கர்ப்பமாக இருக்கிறாள். நீங்கள் கூறியது முற்றிலும் உண்மை. பிள்ளைவேண்டு என்று சிவனை நான்வழிபட எனது உணர்வுகள் காமவசப்பட்டன. விருப்பமில்லாதிருந்த மனைவி தேவதைபோலத் தோன்றினாள். இப்போ மனைவியைப் பிரிந்திருக்க முடியவில்லை” என்றான். எல்லாம் செய்பவன் சிவன்”. என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**450. பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்**

**பிண்டத்தின் ஊடே பிறந்து மரித்தது**

**அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை**

**அண்டத்து நாதத் தமர்ந்திடுந் தானே.**

''சிவனடியார்களே, பண்டமான உடம்புக்குள் ஐம்புலன்களாக ஓசை, ஊறு, ஒளி, சுவை நாற்றம் என்பன உண்டு. இவற்றைத் தன்மாத்திரைகள் எனவும் கூறுவர். ஐம்புலன்களாவன மெய் வாய் கண் மூக்கு செவி என்பனவாகும். இப்புலன்கள் அறிவுள்ளன போலத் தோன்றினாலும் அறிவற்றனவாகவே காணப்படுகின்றன. அதனால் இவற்றைப் பேதைப் புலன்கள் என்று அழைக்கப்படுகிறது. கருப்பை முட்டையாகிய அண்டத்தினுள் அருளால் பொருந்திய ஆருயிரின் கண் நாதத்தோடு புலன்கள் பொருந்தியிருக்கும்'' .

''சிவனடியார்களே, சிவபெருமானின் அருளால் கருப்பைக்குள் புகுந்த உயிரோடு ஐம்புலன்களும் சேரும். இதனால் புலன்களான மெய்வாய் கண்மூக்குச் செவி என்பன தோன்றும். தோன்றிய ஐம்புலன்களும் அறிவுள்ளவை போலக் காணப்பட்ட போதும் அவை அறிவில்லாதவையே. ஒரு நாள் அவ்வூரில் வாழும் ஒரு பெரிய தனவந்தர் தனது மகனை அழைத்துக் கொண்டு எனது குருவிடம் வந்து சொன்னார்,''சுவாமி, எனது மகனுக்குப் பதினைந்து வயதாகிறது. அவனது உடல்

உறுதியானது. பார்வை தெரியும். பேசுவான். சொல்வது கேட்டகும். ஆனால் புரிந்து கொள்ளமுடியாது. நெருப்புடன் விளையாடுவான். அது சுடும் என்று தெரியாது. உண்பான் சுவை தெரியாது. மிளகாயைக் கடித்து விட்டு இனிக்கிறது என்கிறான். நான் என்ன செய்வது? என்று கேட்டார். அவர் எல்லா வைத்தியர்களிடமும் சென்று சுகப்படாமையால் தான் எனது குருவிடம் வந்தார். குரு சொன்னார்,“ஐம்புலன்களுக்கும் அறிவு இல்லை. மூளைதான் அதை அறிந்து அறிவிக்க வேண்டும். புலன்களில் குறையில்லை. அதனால் நீங்கள் சிவனை வணங்குங்கள். நான் சொன்னபடி நடவுங்கள்” என்று கூறி அவருக்குப் பலவற்றைச் சொன்னார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**451. இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்**
**துலைப்பொறி யிற்கரு ஐந்துடன் ஆட்டி**
**நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி**
**உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் எனக்களித்த உடலும் பொறிகளும் நிலையானவை அல்ல. இப் பொறிகள் துணையின்றி இயங்காது. தூண்டினால் தான் இவை இயங்குவதால் இவை துணைப்பொறியென்று சொல்லப்படும். இவற்றுடன் உயிர்களை இணைத்து

வினைக்கீடாகச் செயற்படுத்துபவன் சிவன். அத்துடன் உடலில் ஒன்பது ஓட்டைகளை அமைத்தவனும் சிவன்''.

''தனது மகனின் குறைபாடுகளை நீக்க வந்தவனுக்கு எனது குரு சொன்னார்,''அன்பரே, சிவபெருமான் எமக்களித்த இவ் உடம்பும், இவ் உடம்பில் வீற்றிருக்கும் பொறிகளும் நிலையானவையல்ல. அத்துடன் அவை தாமே இயங்குபவையும் அல்ல. உமது மகனுக்குப் புலன்கள் ஐந்தும் நல்ல நிலையில் இருந்தும் அவை செயற்படுத்தப்படவில்லை. உடலையும் ஐம்பொறிகளையும் உயிரின் வினைக்கேற்பவே சிவன் கொடுத்தருளுகிறான். அவற்றைச் செயற்படுத்த மூளையால் மட்டும் முடியும். மூளையில் இருந்து வெளியாகும் அறிவு தான் ஐம்புலன்களையும் சரியானபடி இயக்குகிறது. அவ் அறிவு ஒழுக்கத்தை வலியுறுத்த வேண்டும். அப்படி வலியுறுத்தாமையால் தான் துன்பங்கள் உண்டாகின்றன. நீங்கள் வீடு சென்று சிவனைத் தொழுங்கள். வைத்தியர்கள் எல்லாம் கைவிட்டாலும் வைத்திய நாதனான சிவன் எவ்வுயிரையும் கைவிட மாட்டார். அவரேகதியென்று இருங்கள். யாவும் நலமாக முடியும். கவலைப்படாது நம்பிக்கையுடன் சிவனைத் தொழுங்கள்'' என்று கூறினார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

452. **இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்**

**துன்பக் கலசம் அணைவான் ஒருவனே**

**ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு**

**வெந்தது சூளை விளைந்தது தானே.**

“சிவனடியார்களே, இன்பத்தில் உள்ள இருவர் மகப்பேற்றிற்காகச் சிவனை வேண்டி இணைத்திருந்தலால் சிவன்கரு என்ற மண்ணைக் கருப்பையில் வைத்தான். உடம்பு துன்பமயமானது. அதனால் அதைத் துன்பக் கவசம் என்றனர். அவ்வுடம்பு ஓர் உயிர் தங்குவதற்காக அமைக்கப்பட்டது. அதற்கு ஒன்பது தொளைகள் உண்டு. அவற்றை நீர்ச்சால் எனப்படும். அவ் உடம்பில் பத்துப்பொறிகள் உள்ளன. அப்பத்தும் அறிதற்கருவிகளும் செய்தற்கருவிகளுமாகும். இவை பத்தும் புறக் கருவிகளாகும். மேலும் அகக்கருவிகள் எட்டுண்டு. அவை நுண்மைஐந்து. மனம் எழுற்சி, இறுப்பு மூன்று. இவற்றை அருவுடம்பு எனவும் புரியட்ட ரூபம் எனவும் கூறுவர். இவ் உற்கவசம் மூலத்தீயாகிய சூளையில் வெந்தாகும்.”

“அப்படியிருந்தும், வந்தவன் செல்லவில்லை. அவர் தனது சக்தியால் தனது மகனைச் சுகப்படுத்துவார் என்று நினைத்தான். அவனது மனக் குறிப்பை உணர்ந்த குரு சொன்னார்,“மகனே, சில மாந்திரீகர்கள் மந்திரத்தால் யாவும் செய்யலாமென்று கூறியாகம் செய்கின்றனர்.

பலியிடுகின்றனர். இவையெலாம்வேஷம். பிழைப்பதற்காகச் செய்யும் ஏமாற்று. நான் அப்படியானவன் அல்ல. உங்களது குறையைச் சிவனுக்கு எடுத்துக்கூறி அவரைக் கொண்டு உங்களது மகனது நோயைத் தீர்க்குமாறு பிரார்த்திப்பேன். வினைக்கீடானது தான் உடம்பு என்றாலும் பிரார்த்தனையின் வலிமை சிவனைச் செயற்பட வைக்கும். ஏனென்றால் கருவென்ற மண்ணைக் கருப்பையில் வைப்பவன் அவன். அவன் தான் வினைக்கீடாக உடலையும் பொறிகளையும் கொடுப்பவன். கொடுத்தவனிடம் இரத்தல் தான் முறையானது. அதனால் நானும் இரக்கிறேன். நீங்களும் இரவுங்கள். கட்டாயம் பயன்கிடைக்கும்'' என்றவர் என்றார்'' சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**453. அறியீ ருடம்பினி லாகிய வாறும்**
**பிறயீ ரதனிற் பெருகுங் குணங்கள்**
**செறியீ ரவற்றினுட் சித்திகள் இட்ட**
**தறியவீ ரைந்தினு ளானது பிண்டமே.**

''சிவனடியார்களே, முன்வினைக்கீடாக கருவினுள் புகுத்தப்பட்ட உயிருக்கு பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறு குணங்களும் உண்டாகும். இவ் உண்மையை திருவருளின் நாட்டத்தால் பலர் அறியாதிருக்கிறார்கள். இவற்றுள் தீயதை விட்டு விட்டு நல்லவற்றையாவது அறிந்திருத்தல் வேண்டும்.

நல்லவற்றைத் தெரிந்து அவற்றால் வரும் நற்பயன்களை அனுபவியுங்கள். கருவினுள் விந்து சென்றது முதல் பத்துமாதம் வரை தங்கியிருந்து முழவளர்ச்சி பெறும். அப்படியிருந்தும் திருப்தியடையாத அவர் மீண்டும் இருந்த இடத்திலேயே இருந்தார். அது மனித சுபாவம் என்று தெரிந்து வைத்திருந்த குரு சொன்னார்,''மகனே, கருவினுள் புகுத்தப்பட்ட உயிர் வெளியே வந்ததும் அதற்குப் பேறு என்ற செல்வம் இழவு என்ற வறுமை, மூப்பு என்ற தளர், இழிவு என்ற பிணிகள். துன்பம் யாவும் வரும். நல்லதும் வரும் கெட்டதும் வரும். நல்லதை மகிழ்வுடன் ஏற்பது போலத் தீயவற்றையும் மகிழ்வுடன் ஏற்கப்பழக வேண்டும். ஏனென்றால் அவ்வுயிர் செய்த பாவ புண்ணியங்கள் தான் அதைத்தேடி வருகின்றன. அவற்றைத் தடுக்க முடியாது. பிறந்த உடல் அழியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. சாவு தானாக வரும். ஓர் உடலின் காலம் முடிவடைந்த பின் அவ் உடல் அழியும். இது மரம் செடி கொடிகள் விலங்குகள் யாவற்றிற்கும் பொருந்தும். உமது மனது வினைப்பயன் அது. அது தானாக நீங்காது. சிவனின் அருளால் தான் நீங்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**454. உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்**
**மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்**
**திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்**
**கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே.**

“சிவனடியார்களே, சிவபெருமானே, வினைக்கீடாக உயிர்களை உடலோடு இணைந்து வைத்தவன். அதற்கு ஒன்பது வாயில்களையும் வைத்தவன். உச்சியில் ஆயிரம் இதழ்த் தாமரை நிலை களமும் அமைத்தருளினான். பேரொடுக்கம் செய்யும் சிவபெருமானை அந்தம் என்று அழைப்பார்கள். அதுவே கடைவைத்த ஈசன் என்று திருமூலரால் ஓதப்படுகிறான். திருவருளால் அச் சிவபெருமானை இடையறாது நினைத்து நற்றவ ஒழுக்கத்தை மேற்கொண்டுள்ளேன்” என்று திருமூலர் கூறுகிறார்.

“சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்களின் உச்சியில் தான் தனது நிலைக்களத்தை வைத்துள்ளார். உச்சியில் இருக்கும் மூளைதான் உயிர்களையும் உடலையும் இயக்குகிறது. அந்த நிலைக்களத்தின் உதவியால் தான் நற்றவம் புரிகிறேன்” என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

455. **கேட்டுநின் றேன்எங்குங் கேடில் பெருஞ்சுடர்**

**மூட்டுகின் றான்முதல் யோனி மயனவன்**

**கூட்டுகின் றான்குழம் பின்கரு வையுரு**

**நீட்டிநின் றாகத்து நேர்பட்டவாறே.**

“சிவனடியார்களே, நூல்களை நன்கு உணர்ந்தவர்களிடத்தும், நுண்ணறிவாளரிடத்தும் ஓதும் முறையைக் கேட்டேன். அவர்கள்,“எப்பொழுதும் எந்தவேளையிலும் கேடில்லாது பெருஞ் சுடராய் விளங்கும் சிவபெருமான், ஆருயிர்களை வினைக்கீடாக உலக உயிர்களில் பொருந்தும் வினை முதற்காரணன். குழம்பு போன்ற கருவை கூட்டிவைக்கிறவன். அதனை உருவாக்குகின்றவன். உடலை வளர்க்கின்றவன். அவ்வுடலில் கலப்பால் ஒன்றாக நின்றருளுபவன். இவ்வாறு கூறியும் திருப்திப்படாது அவ்வணிகன் மிகுந்த துயரத்துடன் அசையாமல் நின்றான். அவனது நிலை குருவுக்குத் துன்பத்தைக் கொடுத்தது, “மகனே, நூல்களைக் கற்றுணர்ந்தவர்களும், நுண்ணறிவாளர்களும், ஞானிகளும் சிவபெருமான் ஆருயிர்களை வினைக்கீடாகவே படைக்கிறார் என்று சொல்கிறார்கள். படைக்கும் போது வினைக்கீடாகவே படைப்பு நிகழும். அப்போது எதுவும் செய்யமுடியாது. ஏனென்றால் அவ்வுயிருக்குத் தான் என்னென்ன செய்தேன் என்று தெரியாது. பிறந்து வளர்ந்தபின் அனுபவிக்கும் போது

தான் யாவும் புரியவரும். புரிந்தபின் சிவனை அன்போடு தொழுது ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினால் வரும் துன்பங்கள் குறையும். இதைப்புராணங்கள் உணர்த்துகின்றன. இதற்காகச் சிவன் திருவிளையாடல்கள் பலவும் செய்தார். மார்க்கண்டேயரது சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். சிவபெருமான் தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்கு பால் கொடுத்தவரலாறும் எல்லோருக்கும் தெரியும். அசுரர்கள் தவம் செய்து அரியவரங்களைப் பெற்றனர். சிவபெருமான் அன்பானவர். அவரது உடல் அன்பாலானது. அவரை அன்புடன் வணங்கினால் அவரது உள்ளம் கரைந்து விடும். உடனே வரமளிப்பார். அதுதான் சிறந்தவழி'' என்று குரு கூறினார்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**456. பூவுடல் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்**
**காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்**
**நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்**
**பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே.**

''சிவனடியார்களே, பூவாகிய கருப்பையினுள் மொட்டாகிய விந்து சென்று பொருந்த அப்பூவிரியும். விரிந்தபின் குடும்பவிளக்கான கரு தோன்றிப் பிறந்திடும். அக்கரு நீர்க்குழியில் நிழல்போல நிற்கும். இதுவே பூதங்கள் ஐந்தும் பொறிகள் ஆகிய பதினைந்து கருவிகளாலான பருவுடல். இதனுள் நுண்மை ஐந்தும்,

மனம், எழுச்சி, இறுப்பு என்றும் மூன்றும், மொத்தமாக எட்டும் நுண்ணுடல் ஆகும். அவ்வுடலுடன் ஆருயிர். பருவுடலில் புகும். இதுவே பிறப்பின் இரகசியம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**457. எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங்**

**கட்டிய மூன்று கரணமு மாய்விடும்**

**ஒட்டியப ாச உணர்வென்னுங் காயப்பை**

**கட்டி அவிழ்ந்திடுங் கண்ணுதல் காணுமே.**

"சிவனடியார்களே,அருவுடலாகிய நுண்ணுடல் ஓசை, உறு, ஒளி, சுவை, நாற்றம், என்னும் புலன்கள் ஐந்தும் அகப்புறக் கலன்களாகிய மனம், எழுச்சி, இறுப்பு என்னும் கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினாலானது. இது படைப்புக்காலம் தொட்டுப் பேரொடுக்ககாலம் வரையில் அழியாதிருக்கும். இவ் நுண்ணுடலுடன் கூடிப் பருவுடலிற் புகுந்ததும் ஆருயிர்களுக்குச் சுட்டணர்வு உண்டாகும். சுட்டுணர்வு என்பது பாச உணர்வாகும். உருவுடல் காயப்பை எனப்படும். அக்காயப்பையினுள் நுண்ணுடலுடன் கூடிய உயிரைப் புகச் செய்பவன் சிவபெருமான். அந்த நிலையில் அவன் கட்டுவித் தோனாவான். பின் செவ்வி வந்தபோது அக்கட்டினை அவழ்த்துத் தன் திருவடியில் சேர்ப்பிப்பவனும் அவனே. அருவுடலில் காணப்படும் ஐம்புலன்களால் உணர்வெழுச்சியில் இருந்து தோன்றும்.

இவை நிகழ செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பன காரணமாகும். பாசம் கண்வழியாகவும் வரும். இதனைச் சுட்டுணர்வு என்பர். சிவபெருமான் வினைக்கீடாக ஆருயிர்களை உடலுடன் சேர்த்து வைத்துப்பின் வினை கழியும் போது உடலை அழித்திடுவான்.'' என்று கூறும்போது அவரது உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஆரூரன் என்பவன் கேட்டான்,'' ஐம்புலன்களான ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பவற்றால் வெளிப்படும் என்றீர்கள். இவை வெளிப்படுவதற்கும் மனம் தானே காரணம்''.

``ஆம்மகனே, மனம் தான் ஐம்புலன்களையும் இயக்குவது. அது எப்போதும் சுயநலம் உள்ளதாகவே இருக்கும். ஏனென்றால் அது தூவாமாயையினால் ஆனது. அதனால் உண்மையான நிலையைப் புரியவிடாது. ஆசை, மோகம், அவா, ஆணவம் என்பதைக் கொடுப்பது மனம். அந்தமனம் அறிவை அழிப்பதால் தான் மோசமான விளைவுகள் உண்டாகின்றன. ஐம்புலன்களையும் மனம் கட்டுப்படுத்தவேண்டும். பெரும்பான்மையானவர்களின் மனம் கட்டுப்படாது தனது ஆசையை அவாவைமோகத்தைத் தீர்க்கவே விரும்பும். இதனால் பிறவிகள் தோன்றும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**458. கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்**

**பண்ணுதல் செய்து பசுபாசம் நீங்கிட**

**எண்ணிய வேதம் இசைத்த பரப்பினை**

**மண்முத லாக வகுத்துவைத் தானே.**

“சிவனடியார்களே, நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் திருப்பெயர் நமசிவய என்பதாகும். இத் திருவைந்தெழுத்தும் அந்தக் கரணங்கள் நான்கும் ஆள் ஒன்றுமாகிய ஐந்தையும் இயக்குபவன் அவன். அங்ஙனம் கூறு மிடத்து ந என்ற நகரம் இறுப்பு மெய்யினையும், ம என்ற மகரம் மனத்தினையும், சி என்ற சிகரம் ஆளையும் வ என்ற வகரம் எண்ணத்தினையும் ய என்ற யகரம் எழுச்சியினையும் இயக்குவதாகும். இது சிவனது நாமம் கலந்த திருவருளைப் போற்றுவதாகும். திருவைந்தெழுத்தின் தொகையாகக் கூறப்படும் அகர, உகர, மகர நாதம் விந்து என்னும் ஐந்தும் முறையே எழுச்சி இறுப்பு மனம் ஆள் என்பவற்றை ஒத்திருக்கும். இவற்றால் திருவடியுணர்வு உண்டாகிப் பழி பாவம் நீங்கப்பெறும். பசு என்பது சிற்றுணர்வு பாசம் என்பது கட்டுணர்வு. இவற்றை நீக்குவதற்காகத் தான் வேதங்களையும் திருமுறைகளையும் சிவபெருமான் ஆக்குவித்தருளினான். அத்துடன் அவற்றை அன்பியல் அருளியல் என இரண்டாகப் பிரித்தருளினான். அன்பியல் என்பது உலகியலான அறம் பொருள் இன்பமாகும். அருளியல் வீடாகும். இனம் பற்றி அடியியல் திருவடிப்

பேறாகும். மண்முதல் என்பது நிலவுலக வாழ்க்கையாகும். அருளியல் என்பது மண்முதல் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களாகும் ஆகையால் நமசிவய என்பது சிவனது நாமங்களில் ஒன்றும் முந்தியடைவதற்கு ஓதப்படும் நாமமாகவும் அது திகழ்கிறது. ஒருவர் எவ்வேளையிலும் நமசிவய என்று மனதுள் நினைத்தவாறு எச் செயலையும் செய்யலாம். அந்நாமம் தொழிலைப் பாதிக்காது ஆகையால் அதை நினையுங்கள்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**459. அருளல்ல தில்லை அரனவன் அன்றி**
**அருளில்லை யாதலி னவ்வோர் உயிரைத்**
**தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்**
**வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே.**

''சிவனடியார்களே அருளும் சிவனும் மரமும் காழ்ப்பும் போலப் பிரிவில்லாத இருநிலைப்பட்ட ஒரு பொருளாகும். ஒரு நிலை அறிவுநிலை. மற்ற நிலை ஆற்றல் நிலை. அறிவு நிலை கடந்த நிலையாகும். ஆற்றல் நிலை கடத்து நிலையென்றும் கூறப்படுகிறது. அவனன்றி அருள் இல்லை. அருளின்ன்றி அவனில்லை. சிவபெருமான் படைத்தல் தொழிலைச் செய்யும்போது வனப்பாற்றால், நடப்பாற்றல் ஆகிய இருவகை ஒழுக்கத்தாயார் பால் ஒப்புவித்து அவ்விருவரையும் விழுத்திணைத் துணைப் பொருளாக்குவான்.

அவ்விருவராலும் சுரக்கின்ற திருவருளாகிய அன்பினைத் தன்பால் நண்பாகத் தானே சுரந்தருளும்படி அமைத்தனன்.'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**460. வகுத்த பிறவியை மாதுநல்லாளுந்**
**தொகுத்திருள் நீக்கிய சோதியவனும்**
**பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்.**
**வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே.**

''சிவனடியார்களே, நடப்பற்றலாகிய ஆதி என்பவர் ஆருயிர்களுக்கு வினக்கீடாகப் பிறவியைப் பிரித்துக் கொடுத்தருளுவாள். வனப்பாற்றலாகிய திருவருள் சோதி நல்லாள் ஆகும். அவளூடாக அருட்பெரும்சோதியாகிய சிவபெருமான் ஆருயிர்களின் இருளாகிய அறியாமையை நீக்கியருளுவான். அச்சிவபெருமான் பல்வேறு பட்ட உயிரினங்களை மாது நல்லாளாகிய ஆதியாற்றல் வழியாகப் பகுத்துணரச் செய்தருள்வான். அங்ஙனம் அமைத்தருளிய சிவபெருமான் உயிருக்கு உயிராய் உள்நின்று உணர்த்திச் சிறப்பருளினான்.

''சிவனடியார்களே, ஆதி என்பது சிவனும் உமையும் கலந்த அர்த்தநாரீஸ்வர உருவம் . அவனின்றி அருளில்லை. அவனாகச் சிவனும் அருளாகச் சக்தியும் உள்ளனர். அதனால் சிவனுக்குத் துணையாகச் சிவனோடு கலந்திருக்கும் சக்தி ஆதி. மாது நல்லாளே

வினைக்கேதுவாக உடல்களை அளிப்பவள். சிவமும் சக்தியும் அறியாதது எதுவும் இல்லை. அதனால் இருவரும் சேர்ந்தே அனைத்தையும் செய்கிறார்கள்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**461. மாண்பது வாக வளர்கின்ற வன்னியுங்**

**காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை**

**பூண்பது மாதா பிதாவழி போலவே**

**ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே.**

''சிவனடியார்களே, வளர்கின்ற கருவெளிப்படு முன் ஆண், பெண், அலியென்று நினைப்பது கற்பனையாகும். சிவபெருமான் தன் அறிவாண்மையால் கருவுற்ற உயிரின் பெற்றோரைப்போல அருள்பாலிப்பான். தாயைப்போன்றது. பிள்ளை என்பதால் உடலமைபப்புப் பெரும்பாலும் தாயின் உடம்பை ஒத்ததாகவே இருக்கும். தந்தையின் அறிவே மகனறிவு என்பதற்கேற்ப அறிவு தந்தையைப் போன்றதாகும்.''

''கதிரேசனது மகன் ஒரு நாள் வெளியூர் ஒன்றில் மருத்துவமுகாம் நடத்திக் கொண்டிருந்தான். அங்கு தமது உடம்பில் உள்ள நோயைக் குணப்படுத்த பலர் வந்திருந்தனர். அங்கு வந்த முதியவர் ஒருவரைப் பரிசோதித்துக்கொண்டு கதிரேசனின் மகன் நின்றபோது

அவர் கேட்டார்,“ஐயா, நீங்கள் கதிரேசன் மகாலட்சுமி தம்பதிகளின் மகனா.?”

